கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(22.04.2018 - 22 சித்திரை 2018 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 08, கதிர் - 182, 20 பக்கங்கள் ரூபா: 30.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /72 / NEWS / 2018

**தேசிய பொதுநிலையினர் தினம்**
**29.04.2018**

ஞான ஒளி
ඥාන ඔළි GNANA OLI
ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05

# ஊழல் என்னும் நோயை எதிர்த்து போராடும் பொறுப்பு மதத்தலைவர்களுக்கு உள்ளது.

## புத்தரின் பிறந்தநாளையொட்டி திருப்பீட அவையின் செய்தி.

புத்தரின் பிறந்தநாளான, “வெஷாக்” விழாவையொட்டி, உலகெங்கும் வாழும் புத்த மதத்தினருக்கு வாழ்த்துக்களைக் கூறி, இத்திருப்பீட அவை, வெளியிட்ட செய்தி, ஊழலிலிருந்து விடுதலை பெற்ற ஒரு கலாச்சாரத்தை வளர்க்கும் தேவை, உலகெங்கும் எழுந்துள்ளது. “கிறிஸ்தவர்களும், புத்த மதத்தினரும்; இணைந்து ஊழலைத் தடுத்தல், மற்றும் போராடுதல்” என்ற மையக்கருத்தில் இவ்வாண்டுக்கான வெஷாக் செய்தியை அறிவித்துள்ளது.

அரசுகள், அரசு சாரா அமைப்புக்கள், ஊடகங்கள் அனைத்தையும் ஊழல் ஊடுருவியிருக்கும் இன்றையச் சூழலில், இந்த நோயை எதிர்த்துப் போராடும் பொறுப்பு, மதத்தலைவர்களுக்கு உள்ளது என்று இச்செய்தி வலியுறுத்துகிறது.

“ஊழலுக்கு “முடியாது” என்று சொல்லுங்கள்” என்பதை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இவ்வாண்டு மாசி மாதம், தன் செபக்கருத்தாக வெளியிட்டதைச் சுட்டிக்காட்டும் இச்செய்தி, அகந்தையிலிருந்து உருவாகும் ஊழலுக்கு ஒரே மாற்று, பணிவுடன் கூடிய சேவை என்று, திருத்தந்தை கூறியுள்ளதை நினைவுறுத்துகிறது.

“எனக்குத் தரப்படாததை, எடுப்பதை நான் தவிர்ப்பேன் என்று உறுதி கூறுகிறேன்” என புத்தமதத்தின் இரண்டாம் கோட்பாடு கூறியுள்ளதை, திருத்தந்தை இச்செய்தியில் சுட்டிக்காட்டியுள்ளார்.



## ஆயர் திருநிலைப்படுத்தல்

**23.06.2018**



**J.D அந்தனி ஜயகொடி அடிகளார்.**

கொழும்பு உயர் மறைமாவட்டத்திற்கு புதிய துணை ஆயராக நியமிக்கப்பட்ட J.D. அந்தனி ஜயகொடி அடிகளாரின் ஆயர்த்துவ திருநிலைப்படுத்தல் வைபவம் ஆனி மாதம் 23ம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலயத்தில் நடைபெறும்.


## குருத்துவ திருநிலைப்படுத்தல் நிகழ்வு – 12.05.2018



கொழும்பு உயர் மறைமாவட்டத்திலிருந்து இறைவனின் திராட்சைத் தோட்டத்திற்கு புதிய குருக்கள் திருநிலைப் படுத்தப்படுகின்றார்கள். இத்திருநிலைப்படுத்தும் திருப்பலி 12.05.2018 அன்று சனிக்கிழமை கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலயத்தில் காலை 9.00 மணிக்கு கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் நடைபெறுகிறது.

## தேவ அழைத்தல் தினம் – 22.04.2018

### மந்தையின் மணம் கொண்ட மேய்ப்பர்கள் ஆகிட...




## புனிதத்துவத்தில் வாழ உதவும் வழிகள் விவிலியத்திலேயே உள்ளன.

இன்றைய உலகில் புனிதத்துவத்திற்கான அழைப்பு குறித்து GAUDETE ET EXSULTATE என்ற தலைப்பில், ஒரு திருத்தூது அறிவுரை ஏட்டினை, வெளியிட்டார் திருத்தந்தை பிரான்சிஸ். “மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள்” என்று இயேசு விடுக்கும் அழைப்பு, அவருக்காக அவமானப்படுத்தப்பட்டு, துன்பங்களை அனுபவிக்கும் மக்களுக்காக விடுக்கப்பட்டுள்ளது என தன் ஏட்டின் தொடக்கத்தில் கூறியுள்ள திருத்தந்தை, இன்றைய உலகில் புனிதத்துவத்திற்கான அழைப்பை எவ்வாறு நடைமுறைப்படுத்த... 15

## மறைக்கல்வி நடுநிலையத்தின் அறிவித்தல்கள்

### மறையறிவுப்போட்டி மற்றும் பேச்சுப்போட்டிக்கான அறிவித்தல்கள் – 2018

கொழும்பு உயர்மறைமாவட்ட மறைக்கல்விப் பணியகத்தினால் மறைப்பாடசாலை மாணவர்களுக்கான மறைமாவட்ட ரீதியான மறையறிவுப்போட்டியையும், பேச்சுப் போட்டியையும் நடாத்த ஒழுங்கு செய்துள்ளது. பங்குத்தந்தையர், அனைத்து மறைப்பணியாளர்கள் மற்றும் பெற்றோர்களும் இவ்வறிவித்தலை கருத்திற்கொண்டு மாணவர்களை சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**மறையறிவு போட்டி** : 05 வைகாசி 2018
**நேரம்** : மு.ப.8.30 மணி
**இடம்** : புனித அன்னம்மாள் பெண்கள் வித்தியாலயம், கொழும்பு 13

**பேச்சு போட்டி** : 19 வைகாசி 2018
**நேரம்** : மு.ப.8.30 மணி
**இடம்** : புனித அன்னம்மாள் பெண்கள் வித்தியாலயம், கொழும்பு 13

**மறைப்பணியாளர்களுக்கான துதி ஆராதனை வழிபாடு – 2018**

கொழும்பு உயர்மறைமாவட்டத்தில் பணியாற்றும் அனைத்து மறைப்பணியாளர்களுக்கான துதி ஆராதனை வழிபாடொன்று கொழும்பு உயர்மறைமாவட்ட... 15

## கல்கமுவ புனித யோசேவ்வாஸ் திருச்சிலுவை

கல்கமுவ புனித யோசேவ்வாஸ் தேசிய திருத்தலத்தில் வைக்கப்பட்டுள்ள புனிதரினால் பயன்படுத்தப்பட்ட திருச்சிலுவை 2018 சித்திரை 24 முதல் வைகாசி 17 வரை குருநாகல் மறைமாவட்டத்தில் உள்ள அனைத்து பங்குகளுக்கும் பக்தர்களின் வழிபாட்டுக்காக கொண்டு செல்லப்படும். குறிப்பிட்ட இக்காலப்பகுதியில் திருச்சிலுவையை தரிசிப்பதற்காக இலங்கை முழுவதிலிருந்தும் வருகை தரும் பக்தர்களின் நலன் கருதி இத்திருச்சிலுவை உரிய திருத்தலத்தில் இருக்கமாட்டாதென்பதை அறியத்தருகின்றோம்.

இவ்வறிவித்தல் புனித யோசேவ்வாஸ் திருப்பணிக்குழுவினால் கொடுக்கப்படுகின்றது.

**தகவல்: அருட்பணி. பியல் ஜானக பர்னாந்து**



**எமது பௌத்த சகோதர சகோதரிகளுக்கு, ஞானஒளியின் வெஷாக் தின வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.**

## இறைபதம் அடைந்தார்.



**அருட்தந்தை W. ரூபன் லெஸ்லி சில்வா**

அடிகளார் 10.04.2018 அன்று காலமானார். இவர் எந்தரமுல்ல புனித செபஸ்தியார்... 15

**ஆண்டவரே, நான் செலுத்தும் புகழ் உம்மிடமிருந்து எழுவதாக. (தி.பா 22)**

# கொழும்பு உயர் மறைமாவட்ட சுற்றறிக்கை. கருக்கலைப்பு ஒரு கொலை கத்தோலிக்கராகிய நாங்கள் இதனை நிராகரிக்கின்றோம்.

**அன்பான சகோதர சகோதரிகளே,**

2018 சித்திரை மாதம் 8ம் திகதி உலகெங்கும் வாழும் கிறிஸ்தவர்கள் இறை இரக்கப் பெருவிழாவை கொண்டாடுகின்றனர். இதன்போது விசேடவிதமாக கவனம் செலுத்தப்படுவது பாஸ்கா மறைபொருளை கொண்டாடி திருவிவிலியத்தில் அதி உன்னத முக்கியத்துவமான வெளிப்பாடாகிய இறைவனின் ஒரே பேறான மகன் மனுவுரு எடுத்து பாவத்தின் மற்றும் சுயநலத்தினின்று எம்மை மீட்கும் பொருட்டு சிலுவையில் சாவுமளவுக்கு கீழ்ப்படிந்து முழுமனித குலத்திற்கும் படைப்பிற்கும் காட்டிய பரிவிரக்கம் எத்தகையது எனும் அனுபவத்திற்கு எம்மை அழைத்துச் செல்வதாகும். திருத்தந்தை பிரான்சிஸ் கூறியுள்ளவாறு “இயேசுகிறிஸ்து இறைத்தந்தையின் பரிவிரக்கத்தின் திருமுகமாக உள்ளார்” (MV 1) இதனூடாக திருத்தந்தை எமக்கு கூறுவது என்னவென்றால் இறைத்தந்தை பரிவிரக்கம் உள்ளவராக இருப்பதுபோல நாமும் எமது அன்றாட கடமைகளில் அவ்வாறே இரக்கமுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதே ஆகும்.

இறைவனின் பரிவிரக்கத்தைப் பற்றித் தியானிக்கும் போது சிந்தனையில் எழுவது என்னவென்றால் பாவிகளான சாதாரண மனிதர்களாகிய எமக்கு இறைவனால் வழங்கப்படுகின்ற உன்னதமான பரிசு நாம் பெற்றெடுக்கும் குழந்தைச் செல்வங்களாகும். மனிதன் இறைவனுக்கெதிராக எவ்வாறு தீமையான மற்றும் வன்முறைகளைச் செய்தாலும் இறைவன் மனித சமூகத்தில் எழில்மிகு குழந்தைச் செல்வங்களை தொடர்ந்து ஆசீர்வதித்து வருகிறார். இதனால் இந்த மலர்போன்ற எழில்மிகு குழந்தைச் செல்வங்கள் கருவில் உருவாகி வளர்ச்சியடைந்து வரும்போது இவர்களை மதிப்போடு ஏற்று பாசத்துடன் பாதுகாத்திட வேண்டும். இறைவார்த்தையின்படி இறைவனின் அதி உன்னதமான அழைப்பினை தாயின் கருவில் உருவாகும் போதே ஏற்று வளர்ந்து வருகின்ற குழந்தைகள் இறைவனின் புதுமைகளாகும். எரேமியா 1:5 இறைவன் இவ்வாறு கூறுகின்றார். “தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்குமுன்பே, அறிந்திருந்தேன் நீ பிறக்குமுன்பே உன்னைத் திருநிலைப்படுத்தினேன் மக்களினங்களுக்கு இறைவாக்கினராக உன்னை ஏற்படுத்தினேன்”.

தாயின் கருவில் உருவாகிய நாள்முதல் மரணம்வரை மனித வாழ்வானது இறைவனின் கொடையென தொடக்கம் முதல் திருச்சபை எமக்கு கற்பித்து வருகிறது. “கருக்கலைப்பால் வாழ்வை அழிக்க வேண்டாம். இன்னும் பிறவாத குழந்தைகளை கொலை செய்ய வேண்டாம்” என தொடக்க நூற்றாண்டில் எழுதப்பட்ட “டிடாக்கே” அப்போஸ்தலர்களின் படிப்பினை நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (டிடாக்கே 2:2)

2ம் வத்திக்கான சங்கத்தில் “இன்றைய உலகில் திருச்சபை” எனும் ஏட்டில் கருக்கலைப்பைப்பற்றி கூறியிருப்பது என்னவென்றால் “வார்த்தைகளால் கூறிட முடியாத அளவு கொடூரமான இரக்கமற்ற செயல் என்பதாகும்” (பார்க்கவும் இ.உ.தி.51) இதுபற்றி மேலும் திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் கூறுவது என்னவென்றால் “குழந்தை கருத்தரித்த நாள்முதல் பிறகும் காலத்திற்குள் ஏதோ ஒரு வழியில் கருக்கலைப்பானது நேரடியாக மற்றும் திட்டமிட்ட கொலையாகும்” (ந.செ.பணி 58). மேலும் திருத்தந்தை கூறுவது தாயின் கருவில் இருக்கும் குழந்தையை கொலை செய்ய கொலையாளி பயன்படுத்தும் கூர்மையான ஆயுதங்களோடு போராடவோ, சத்தமிடவோ அல்லது தன்னை பாதுகாத்துக் கொள்ளவோ முடியாத அப்பாவியான குழந்தைகளை கொல்வது பொறுக்க இயலாத பாவமான செயலாகும். வைத்தியராக உயிரைப் பாதுகாக்க பயிற்சிப் பெற்ற கரங்களை கொலை செய்ய உயர்த்தும்போது “கருக்கலைப்பிற்கு தொடர்புப்படும் வைத்தியர் மற்றும் தாதியர் இப்பாவச் செயலுக்கு பொறுப்புக் கூற கடமைப்பட்டுள்ளனர்” (ந.செ.பணி.59) என திருத்தந்தை தெளிவுப்படுத்துகின்றார்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கருக்கலைப்பிற்கு ஆதரவு தெரிவித்து வருகின்றார் என தவறான செய்திகள் தற்போது பரவி வருகின்றன. அதாவது ஒரு குருவினால் மன்னிப்பு வழங்க முடியாத பாவங்களில் ஒன்றான கருக்கலைப்பிற்கு மன்னிப்பு வழங்குவதற்கான அனுமதி தற்போது குருக்களுக்கு வழங்கப்பட்டிருப்பதை சாதகமாக்கி பொய்யான கூற்றை பரப்புகின்றனர். இக்கருத்தானது எவ்வகையிலும் உண்மைத்தன்மையற்றது என்பது தெளிவாகிறது. அவர் இவ்வாறு செய்தது ஒப்புரவின் வழியாக பாவப்பொறுத்தலை பெற்று இறை உறவை புதுப்பிப்பதற்காகவேயாகும். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தமது பதவியேற்பின் பின்னர் வெளியிட்ட முதல் அப்போஸ்தலிக்க சுற்றுமடலில் கருக்கலைப்பைப்பற்றி இவ்வாறு குறிப்பிட்டு தமது கருத்தினை வெளிப்படுத்தியுள்ளார்.

“உடல் வேதனையுற்று, பலவீனமடைந்து, பாதுகாப்பற்று மற்றும் அப்பாவியான பிறக்கவிருக்கும் குழந்தைகள்மீது திருச்சபையானது அதிக கவனம் செலுத்துகிறது. தற்காலத்தில் அநேகமானோர் பிறவாத குழந்தைகளின் மானிட மதிப்பை நிராகரிக்க முற்படுகின்றனர். அவர்களின் வாழ்வைப் பறித்திட சட்டங்களை அமுல்படுத்த தங்களால் இயன்ற வழியில் இந்த பிறவாத குழந்தைகளின் வாழ்வோடு விளையாடுகின்றனர். இதற்கெதிராக குரல் கொடுப்போரை தடுக்கின்றனர். தொடர்ந்து இன்னும் பிறவாத குழந்தைகளின் வாழ்வை பாதுகாக்க திருச்சபையின் நிலைப்பாடானது வெறுமையான மற்றும் எழுச்சியற்ற ஒரு செயலென இதனை விமர்சிக்கின்றது.

எல்லா மனித வாழ்வையும் பறித்திட முடியாத மதிப்பீடுகள் உள்ளதென மனித ஞானத்தின் புரிந்துணர்வினூடாக அனைவருக்கும் தெளிவுப்படுத்துகின்றது. விசுவாசக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது கருக்கலைப்பானது மனிதனின் உன்னத நிலையை சீர்குலைக்கும் அனைத்து வன்முறைகள் முன்னிலையில் நீதிக்காக போராடும் அனைத்து மனிதர்களின் படைப்பாகிய இறைவனிடம் முறைப்பாடு செய்யும் நிலையைக் உண்டாக்குகின்றது. (EG 213)


மேலும் திருமண வாழ்வுப் பற்றிய அவரது உலக ஆயர் மன்றத்தின் போதனையாகிய “அன்பின் மகிழ்ச்சி” சுற்றுமடலில் கூறுவது என்னவென்றால் (அன்பின் மகிழ்ச்சி AL 83) “குடும்பம் உயிரின் புனித இடம். உயிர் கருவாகி பராமரித்து வளர்க்கப்படும் இடம். அவ்வாறெனில் உயிரை ஏற்க மறுக்கும் அல்லது அழிக்கும் இடமாக அது ஆவது மிகக் கொடுமையான முரண்பாடு என்பதை நான் எடுத்துரைப்பது மிக அவசரம் என உணர்கின்றேன். மனித உயிரின் மதிப்பு எவ்வளவு உயர்வானது”. எனவே, அனைத்து கருக்கலைப்பும் கொலையாகும். இவ்வாறு கொலை செய்யப்படுவது அதி உன்னதமான தனிப்பட்ட அழைப்பை பெற்றுள்ள தாயின் கருவில் வளர்ச்சியடைந்துவரும் குழந்தையின் வாழ்வு எனவும், கொலை செய்யப்படுகின்ற குழந்தையின் இரத்தம் நீதிக்காக இறைவன் முன்னிலையில் முறையிடும் ஆபேலின் இரத்தம் போன்றது எனத் தெளிவாகிறது. (பார்க்கவும் தொ.நூ.4:10)

அன்பான சகோதர சகோதரிகளே, உங்களின் ஆயராகிய நான் திருமணமான மற்றும் திருமணம் செய்ய எதிர்ப்பார்த்திருக்கும் உங்களிடம் விசேடமாக கேட்டுக்கொள்வது திருமணம் எனும் அருளடையாளத்தின் வழியாக உங்களுக்கும் எனக்கும் குடும்பங்கள்மீது கொடுக்கப்பட்டுள்ள விசேட ஆன்மீக தூதுப்பணி பற்றி கருத்திற்கொண்டு இறைவன் உங்களுக்கு தருகின்ற குழந்தைச் செல்வங்கள் எத்தகைய பெறுமதிமிக்கவர்கள் என்பதை நினைத்துப் பார்ப்பதற்காகவேயாகும். குழந்தை செல்வங்களைப் போன்று விலைமதிப்பற்ற செல்வங்கள் பூமியில் வேறு எதுவும் இல்லை. எனவே நான் உங்களிடம் கேட்டுக்கொள்வது மனித சுயநலத்திற்காக விண்ணகத் தோட்டத்தின் அழகுமிகு மலர்களான குழந்தைகளை அழிக்க வேண்டாம் என்பதேயாகும்.

மேலும் இறை இரக்கத்திற்காக மன்றாடும் இந்நன்னாளில் இன்னும் பிறவாத குழந்தைகளுக்காக வேண்டி இக்கொடூரமான பாவச் செயலை கைவிட்டு ஒட்டுமொத்த சமூக வாழ்வை பாதுகாத்திட அர்ப்பணிக்கப்பட்டவர்களாக இறைவனுக்கு நன்றி புகழ் பாடுமாறு வேண்டிக்கொள்கின்றேன்.

மேலும், நான் கேட்டுக்கொள்வதாவது கருக்கலைப்பு ஒரு கொலையாகும். இதனைவிட இது அப்பாவி குழந்தைகளை கொலை செய்வதாகும் எனும் செய்தியை நீங்கள் சந்திக்கும் ஒவ்வொருவரிடமும் கொண்டு செல்ல வேண்டும் என்பதே.

உங்கள் அனைவருக்கும் நன்றி. இறையாசீர் உங்களோடு இருப்பதாக.



**அதி வணக்கத்திற்குரிய மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை**
**கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர்.**

## இரத்தினபுரி, கீரபதனிய மாணவர்களின் உறுதிப்பூசுதல் அருட்சாதனத் திருப்பலி



இரத்தினபுரி, கீரபதனிய மறைமாவட்டத்தில் உறுதிப்பூசுதல் அருட்சானத் திருப்பலி அண்மையில் இடம்பெற்றது. இரத்தினபுரி மறைமாவட்ட ஆயர் அருட்திரு கிளின்டஸ் சந்திரசிரி ஆண்டகையால் மாணவர்களுக்கு உறுதிப்பூசுதல் அருட்சாதனம் வழங்கப்பட்டது. இரத்தினபுரி, கீரபதனிய பங்குத்தந்தை அவர்களும் இத்திருப்பலியில் கலந்து சிறப்பித்தார்.

**தகவல் : சரத் அதுகோரல**



கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அவர்களினால் ஹொரனை மத்துகம தோட்டப் பகுதிகளில் கத்தோலிக்க பொதுநிலை தலைவர்கள் நியமிக்கப்பட்டனர். அவர்களைச் சந்தித்து அவர்களுக்கு ஆசீர்வாதங்களையும் வழங்கினார்.

**தகவல்: அருட்பணி. ஒனாசிஸ் பர்னாந்து**



கொழும்பு கத்தோலிக்க அச்சகத்தின் உறுப்பினர்களுக்காக 2018ம் ஆண்டுக்கான தவக்கால ஞான ஒடுக்கமும், பணியாளர்களுக்கான ஒன்றுகூடலும் கடந்த தினம் தேவத்தை, இலங்கை அன்னை திருத்தலத்தில் யூபிலி மண்டபத்தில் நடைபெற்றது. “ஞானார்த்த பிரதீபய” மற்றும் கத்தோலிக்க அச்சகத்தின் இயக்குனர் அருட்பணி. கெமிலஸ் பர்னாந்து அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ்வொன்று கூடலுக்கு பல எழுத்தாளர்கள் பங்குபற்றியதோடு, கொழும்பு உயர்மறைமாவட்ட பரிபாலகர் அருட்பணி. டெனின்டன் அவர்கள் விசேட உரை வழங்கினார் என்பது சிறப்பம்சமாக அமைந்தது.

**தகவல்: சுனில் பர்னாந்து**

## புனித யோசப் வாஸ் அடிகளாரின் திருவிழா திருப்பலியின் இறுதி ஆசீர்வாதம்



இரத்தினபுரி மறைமாவட்டம், அத்-ஓயா புனித யோசப் வாஸ் அடிகளாரின் வருடாந்த திருவிழா அண்மையில் இடம்பெற்றது. இரத்தினபுரி மறைமாவட்ட ஆயர் அருட்திரு கிளின்டஸ் சந்திரசிரி அவர்களால் திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலியினைத் தொடர்ந்து இரத்திரனபுரி மறைமாவட்ட ஆயரினால் அனைத்து பக்தர்களுக்கும் திருச்சுரூப ஆசீர்வாதம் வழங்கப்பட்டது.

**தகவல் : சரத் அதுகோரல**

**உங்களுடைய பங்கு நிகழ்வுகளை மின்னஞ்சல் வழியாக எமக்கு அனுப்பி வையுங்கள்.**

**மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com**

ஞான ஒளி
GNANA OLI

இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
22 சித்திரை, 2018 ஞாயிற்றுக்கிழமை.

# எல்லா அழைத்தல்களிலும் முதல் படி எடுத்து வைப்பவர் இறைவன்தான்

திருச்சபையிலே பொதுவாக கருதப்படும் விடயந்தான் குருக்களுக்கும் துறவிகளுக்கும் மட்டுமே "தேவ அழைத்தல்" பெற்றவர்கள் என்று. ஆனால் பொதுநிலையினரும் தேவ அழைத்தல் பெற்றவர்கள் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். "கிறிஸ்துவின் விசுவாசிகள் கிறிஸ்துவின் அரச, குருத்துவ, இறைவாக்குரைக்கும் பணிகளில் அவர்களுக்கே உரித்தான வகையில் இவர்கள் பங்கெடுத்துக் கொள்கின்றனர். கடவுள் திருச்சபையிடம் இவ்வுலகில் நிறைவேற்றும்படி ஒப்படைத்தப் பணிகளைச் செய்வதற்கு அவரவர்கள் சார்ந்திருக்கும் நிலைகளுக்கு ஏற்றாற்போல இறைவனால் அழைக்கப்பட்டுள்ளனர்" (தி.ச.204). திருமுழுக்கு, உறுதிப்பூசுதல் வழியாக குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய கிறிஸ்தவ விசுவாசிகள் அனைவருக்கும் தேவ அழைத்தல் உண்டு. தங்களுக்கே உரியமுறையில் அவர்கள் கிறிஸ்துவின் போதிக்கும், புனிதப்படுத்தும், ஆளும் அலுவலில் அவரவர் சார்ந்துள்ள நிலைக்கும் பணிக்கும் ஏற்ப பங்கு பெறுகின்றனர். உலகக் காரியங்களில் ஈடுபட்டு உலகியல் அமைப்புக்களை இறைத்திட்டப்படி நெறிப்படுத்தி உண்மை, அன்பு, சமாதானம் மற்றும் நீதி நிறைந்த அரசைக் கட்டியெழுப்ப வேண்டியது பொதுநிலையினரின் சிறப்பு அழைத்தலாகும்.

இறைவனின் அழைத்தல் என்பது ஒரு மாபெரும் கொடை. இக்கொடையை அவர் எல்லாருக்கும் திருமுழுக்கின் வழியாக வழங்குகிறார். "தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்கும் முன்பே அறிந்திருந்னே் நீ பிறக்கும் முன்பே உன்னைத் திருநிலைப்படுத்தினேன்" (எரே.1:5) என்று கூறியது இறைவாக்கினர் எரேமியாவிற்கு மாத்திரம் கொடுக்கப்பட்ட அழைப்பானதல்ல. மாறாக திருமுழுக்கின் வழியாக எம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான அழைத்தல் கிடைக்கின்றது. ஆனாலும் இறைவனின் விசேட கரங்களாக செயற்பட ஒருசிலரை மட்டும் குருக்களாக சிறப்பான விதத்தில் அழைக்கின்றார். இறைமகன் கிறிஸ்துவால் தம் பணிவாழ்வின் இறுதிக்கட்டத்தில் அவர் விட்டுச்சென்ற பணியினை தொடர்ந்து செய்வதற்கு அவரால் உருவாக்கப்பட்ட ஏழு அருளடையாளங்களில் ஒன்றுதான் குருத்துவம். இறைமகன் கிறிஸ்துவால் அழைப்பு பெற்ற அருட்பணியாளர்கள் தங்களுக்குரிய அதிகாரத்தால் தலைவரும் மேய்ப்பருமான கிறிஸ்துவின் அலுவலை செய்து வரும் குருக்கள் தங்கள் கட்டமைப்புக்கள் வாழும் குட்டித்திருச்சபைக்கு பலமும், சக்தியும், ஊட்டமும், ஊக்கமும் அளித்து விசுவாசத்தில் வேருன்றி நிற்க செய்பவர்கள். இப்பணியானது இத்தோடு நின்றுவிடவில்லை. இது வரையறுக்கப்பட்ட ஒரு குறுகிய பணியல்ல. மாறாக பரந்து விரிந்தது. உலகின் கடையெல்லைவரைக்கும் (தி.ப. 1:8) எட்டக்கூடியது. அனைத்துலகப் பண்பு வாய்ந்த நிறைவாழ்வுப்பணிக்கு அழைப்பை பெற்றவர்கள் அருட்பணியாளர்கள். இந்த குருத்துவத்தின் மேன்மை காணப்படுவது அருளடையாளங்களில் அதிலும் சிறந்தது திருப்பலி. திருப்பலியின் மூலம் மனிதர்களை தூயவர்களாக்க தம்மையே பலியாக கொடுத்த கிறிஸ்துவின் பிரதிநிதியாக செயற்படுவர் குருவானவர். உலகெங்கிலும் ஒரு நிமிடத்திற்கு எத்தனையோ திருப்பலிகள் நிறைவேற்றப்படுவதன் மூலம் உலகு புதுப்பிக்கப்படுகின்றது. குருக்கள் தமது அழைப்பின் மேன்மையை தினமும் உணரவும் அதில் பிரமாணிக்கமாய் இருக்கவும் வலுவையும் மன உறுதியையும் ஆன்ம பலத்தையும் இத்திருப்பலியின் மூலம்தான் பெறுகின்றனர். கல்வாரிப்பலியினூடாக படைப்பாகிய மக்களும் புதுப்படைப்பாக்கப்படுகின்றனர். இது ஒரு மகத்தான பணியாகும்.

எல்லா அழைத்தல்களிலும் முதல் படி எடுத்து வைப்பவர் இறைவன்தான் "நீங்கள் என்னைத் தேர்ந்துகொள்ளவில்லை. நான்தான் உங்களைத் தேர்ந்துக்கொண்டேன்" (யோவா.1516) என்றார் இயேசு. எல்லா அழைத்தல்களும் வெறுமனே வாழ்ந்துவிட்டு போவதல்ல. மாறாக அது ஒரு போராட்ட வாழ்வாக இருக்கின்றது. இயேசுவின் சீடராய் இவ்வுலகில் வாழ்வதே ஒரு போராட்ட வாழ்வுதான் என்கிறது திருவிவிலியம். "விசுவாச வாழ்வு என்னும் போராட்டத்தில் ஈடுபடு" (1திமொ. 6:12). விசுவாசம் என்னும் போராட்ட வாழ்வில் இறைவனே வலிமையும் ஆற்றலுமாக இருக்கின்றார். எனவே திருச்சபையின் அனைத்துப் பணிகளிலுமே பொதுக்குருத்துவ நிலையினரும், பணிக்குருத்துவ நிலையினரும் இணைந்து பணியாற்றிடும்போதுதான் அங்கே தேவ அழைத்தல் என்னவென்பதை உணர முடியும்.

**இறையாசீருடன் ஆசிரியர்**

# அழைத்தலின் பல படிகள்

இறைவனின் அழைத்தல் என்பது ஒரு மாபெரும் கொடை. அக்கொடையை அவர் எல்லாருக்கும் வழங்குகிறார். ஏதோ ஒரு சிலரை மட்டும் தனது பணிக்கென இறைவன் அழைக்கின்றார் என்று எண்ணிவிடக் கூடாது.

மீட்பின் வரலாற்றில் இறைவனால் சிறப்பாக அழைக்கப்பட்ட ஒரு சிலரைப் பார்க்கின்றோம். அவர்கள் அழைத்தலின் "மாதிரி"களாக ஒளி வீசுகின்றனர். அவர்களுடைய வாழ்வும் பணியும், நமக்கு எடுத்துக் காட்டுக்களாகத் திகழ்கின்றன.

அவர்கள் இறைவனால் அழைக்கப்பட்ட விதத்தைக் கொஞ்சம் அலசினால், அந்த அழைத்தல்களில் ஒரு "பாணி" இருப்பதைக் காணலாம். அந்தப் பாணியை நம் வாழ்விலும் பொருத்திப் பார்த்து, நமது அழைத்தலை உணரலாம்.

# அழைத்தல்



"நீங்கள் என்னைத் தேர்ந்துகொள்ளவில்லை. நான்தான் உங்களைத் தேர்ந்துகொண்டேன்" (யோவா 15:16)

## 1. அழைப்பு

எல்லா அழைத்தல்களிலும் முதல் படி எடுத்து வைப்பவர் இறைவன் தான். "நீங்கள் என்னைத் தேர்ந்துகொள்ளவில்லை. நான்தான் உங்களைத் தேர்ந்துகொண்டேன்" (யோவா 15:16) என்றார் இயேசு. கிறிஸ்தவர்களைத் துன்புறுத்திய சவுலை "எனது பெயரை எடுத்துச் செல்ல நான் தேர்ந்தெடுத்துக் கொண்ட கருவி" (தி.ப 9:15) என மாற்றியவர் அவரே.

"விரைவாய் இறங்கி வாரும், இன்று உமது வீட்டில் நான் தங்க வேண்டும்" (லூக் 19:5) என்று கூறி சக்கேயுவை அழைத்தார் இயேசு.

அழைத்தலின் முதல் படி இறைவனே!

## 2. மறுப்பு

அழைத்தலின் இரண்டாம்படி, அழைக்கப்பட்டவரின் மலைப்பு; திகைப்பு, அழைத்தவரின் மாண்புக்கும் தனது தகுதியின்மைக்கும், இடையே உள்ள மாபெரும் இடைவெளியை உணர்கிறார் அழைக்கப்பட்டவர்.

இறைவாக்குரைக்க எசாயா அழைக்கப்பட்டபோது இறைவனின் தூய்மைக்கும், தனது தூய்மையின்மைக்கும் உள்ள இடைவெளியை உணர்ந்தார் அவர். "தூய்மையற்ற உதடுகளைக் கொண்ட மனிதன் நான். தூய்மையற்ற உதடுகள் கொண்ட மக்கள் நடுவில் வாழ்பவன் நான்" (எசா 6:5) "என் தலைவராகிய ஆண்டவரே, எனக்குப் பேசத் தெரியாதே. சிறுபிள்ளைதானே" என்றார் எரேமியா (1:6)

"நாவன்மை அற்றவன் நான், எனக்கு வாய் திக்கும்; நாவும் குழறும்" (வி.ப 4:10) என்றார் மோசே "மனாசேயிலேயே நலிவுற்று இருப்பது என் குடும்பம், என் தந்தை வீட்டிலேயே நான்தான் சிறியவன்" (நீ.த 6:15) என்றார் கிதியோன்.

இறைவனின் மீட்புத் திட்டத்தில் பங்கேற்கத் தாங்கள் தகுதியற்றவர்கள் என்றே கருதினர் இவர்கள்.

## 3. அருட்பொழிவு

ஆனால், இறைவனின் ஞானமோ மனித சிந்தனையிலிருந்து மாறுபட்டது. கடவுள் "ஞானிகளை வெட்கப்படுத்த மடமை என உலகம் கருதுபவற்றைத் தேர்ந்துகொண்டார்". அவ்வாறே, வலியோரை வெட்கப்படுத்த வலுவற்றவை என உலகம் கருதுபவற்றைத் தேர்ந்து கொண்டார் (1கொரி 1:27)

எனவே, குறைபாடுகள் நிறைந்த மனிதர்களை எசாயா, எரேமியா, மோசே, கிதியோன் போன்றோரைத் தேர்ந்தெடுத்து அவர்களைத் தன் அருளால் நிரப்பினார். நெருப்புப் பொறியால் எசாயாவைத் தூய்மைப்படுத்தினார் (எசா 6:6-7) "அஞ்ஞாதே, ஏனெனில் உன்னை விடுவிக்க நான் உன்னோடு இருக்கின்றேன்" (எரே 1:8) என்று எரேமியாவை உறுதிப்படுத்தினார்.

"நானே உன் நாவில் இருப்பேன், நீ பேச வேண்டியதை உனக்குக் கற்பிப்பேன்" (வி.ப 4:12) என்று மோசேயைத் தேற்றினார். "நான் உன்னோடு இருப்பதால் நீ தனி ஒரு ஆளாக மிதியானியரை வெல்வாய்" (நீ.த 6:16) என்று கிதியோனை ஆற்றுப்படுத்தினார்.


இவ்வாறு, தகுதியும், திறமையும் அற்றோரை இறைவன் தேர்ந்தெடுத்து, அருள்பொழிவு செய்து, அவர்களைத் தன் கருவிகளாகப் பயன்படுத்துகிறார்.

எனவேதான், "எனக்கு வலுவூட்டும் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு நன்றி செலுத்துகின்றேன். ஏனெனில் நான் நம்பிக்கைக்குரியவன் என்று கருதி அவர் என்னைத் தம் திருத்தொண்டில் அமர்த்தினார்" (1திமொ 1:12) என்கிறார் பவுலடியார்...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## உண்மை உறைக்கும்

கமிலஸ்





# “நல்லாயன் ஆண்டில் இறைவன் அளித்த நல்லாயன்”

## – மேதகு.J.D.அந்தனி ஜயக்கொடி ஆண்டகை

“ஆண்டவர் எத்துணை இனியவர் என்று சுவைத்துப் பாருங்கள்” (தி.பா 34:8) அழகான இறைவனின் எல்லையில்லா இனிமையை புகழ்ந்து பாடுகின்றது. இந்த இனிமையை எமது உயர் மறைமாவட்டமும் இனிதே உணர்ந்து கொண்டது. இறைவனின் திருவருளால் எம் உயர் மறைமாவட்டம் இன்னொரு துணை ஆயரை பெற்றுக் கொண்டுள்ளது. கொழும்பு உயர்மறைமாவட்டத்தில் “நல்லாயன் ஆண்டு” பிரகடனப்படுத்தப்பட்டு இரண்டே மாதங்களில் இறைவன் தன் மந்தையை மேய்க்க இன்னொரு ஆயனை கொடுத்து, “எனது இதயத்திற்கேற்ற ஆயனை அனுப்புவேன்” என்ற கிறிஸ்துவின் வாக்குறுதியை இன்றளவும் எம்மில் நிறைவேற்றுகின்றார். இக் கொடையானது நல்லாயன் ஆண்டில் எமக்கும், எம் மறைமாவட்டத்திற்கும் கிடைத்த மாபெரும் முதல் கொடையாக அமைந்துள்ளது. இறைவனின் திருவுளம் எப்படி, யாரால், எப்போது நிறைவேறும் என்று நாம் அறியாத ஒன்று. இறைவன் தனக்கு தேவையான பணியை நிறைவேற்ற தேவையான பணியாளர்களை தேர்வு செய்கின்றார். குறிப்பாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் புதிதாக கொண்டு வரப்பட்ட சொற்றொடரான “மந்தையின் மனம் அறிகின்ற பணியாளர்” என்பதற்கு அமைய இறைவன் திருஅவைக்கு குறிப்பாக இலங்கை திருஅவைக்கு ஓர் ஆயரை கொடுத்தது மட்டற்ற மகிழ்ச்சியான விடயமே.

எனது முன்னாள் குருமட அதிபரான, மேதகு J.D. அந்தனி ஜயக்கொடி ஆண்டகையைப் பற்றி எழுதுவதில் நான் மகிழ்வடைகின்றேன். ஆண்டகையை பற்றி எழுதுகின்ற எனது பேனா முனையும் மகிழ்வடைகின்றது. காரணம் என்னோடு இணைந்து கல்வி பயில்கின்ற குருமட மாணவர்களின் முன்னோடி ஆண்டகை என்றால் அது மிகையாகாது. குறிப்பாக என்னைப் பொறுத்த மட்டில் இறைவன் சரியான ஒரு நபரை தெரிவு செயதுள்ளார் என்றே நான் கூறுவேன். காரணம் தனது 32 வருட குருத்துவ வாழ்வில் மகிழ்வையும், உண்மைத்தன்மையையும், மறைமாவட்டத்தின் மேல் அதீத அன்பையும் கொண்ட குருவாக திகழ்ந்தவர். ஆண்டகையைப் பற்றியும், அவரது பணி வாழ்வு பற்றியும் அறிந்து கொண்டால், மறைமாவட்டத்திற்கு எத்தகைய பணி புரிகின்றார், புரிந்து வருகின்றார் என்பதை அறிந்து கொள்ள முடியும்.

### ஆயராக தெரிவு

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் சித்திரை மாதம் 04ம் திகதி கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் புதிய துணை ஆயராக அறிவித்தார். இதன் அறிவிப்பை கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சில் ஆண்டகையும், இலங்கைக்கான திருத்தந்தையின் பிரதிநிதி மேதகு பியரே வென் டொட் அடிகளாரும் உத்தியோக பூர்வமாக அறிவித்தனர். மறைமாவட்டத்தில் பல பணிகளை புரிந்து வருகின்ற அருட்தந்தையை இறைவன் புதிய ஆயராக தெரிவு செய்தமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும் என கருதினால் ஆண்டகை தெரிவித்தார்.

### புதிய ஆயர் அவர்களின் முன்னாள் குருத்துவ பணிகளும், பணித்தளங்களும்

1985-1986: குழும அங்கத்தவர் - களுத்துறை இடைநிலை குருமடம்.

1986-1987: பங்குத்தந்தை - வேவெல பங்கு (1 வருடம்)

1987-1990: குழும அங்கத்தவர் - களுத்துறை இடைநிலை குருமடம்.

1990-1991: பங்குத்தந்தை - பன்னிப்பிட்டிய பங்கு (1 வருடம்)

1991-1993: உயர்கல்வி - இத்தாலி (2 வருடம்)

1993-1995: பொருளாளர் - கண்டி தேசிய குருமடம்

1995-1996: பங்குத்தந்தை - அல்பே பங்கு (1 வருடம்)

1996-1998: பங்குத்தந்தை - வெலிவிட்ட (1 வருடம்)

1998-2003: விரிவுரையாளர் - கண்டி தேசிய குருமடம்

2003-2005: பீடாதிபதி - மெய்யில் பீடம், கண்டி தேசிய குருமடம்

2005-2011: குருமட அதிபர் - கண்டி தேசிய குருமடம்

2011-முதல்: கொழும்பு உயர் மறைமாவட்ட குருமட மற்றும் குருத்துவ கல்விக்கான பொறுப்பு குருவானவர்.

2016ம் ஆண்டு தொடக்கம் - குருமட அதிபர் - மட்டக்குளி, புனித ஜோன் மேரி வியான்னி குருமடம்.

2018 சித்திரை 04 - கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயராக தெரிவு.

### வாழ்த்துகின்றேன் பணி தொடர...

புதிய ஆயர் தனது பொறுப்புகளை இன்முகத்தோடு ஏற்றுக்கொண்டு செய்துவருகின்ற பணிகளை தொடர்ந்தும் செய்து, இறைவனின் மந்தையை வழிநடத்த இறைவனின் அருளும், ஆசீரும் நிறைவாக கிடைக்க பிரார்த்திப்போம். ஆண்டவர் சீயோனிலிருந்து ஆசி வழங்கி, பணி தொடர வழிநடத்துவாராக. நல்லாயனாம் நம் ஆண்டவர் எந்நாளும் காத்து வழிநடத்துவாராக.

**“புதிய ஆயனே. உம் பணி தொடர்க, வளர்க, பலன் தருக”**

**சகோ.டிலோய்ட்சன் பெர்ணாண்டோ**
**தேசிய குருமடம், கண்டி**



வத்திக்கான் பிரதிநிதியால் புதிய ஆயராக அறிவிக்கப்படல்.



வத்திக்கான் பிரதிநிதி புதிய ஆயருக்கு வாழ்த்துக் கூறுதல்.



வத்திக்கான் பிரதிநிதியால் புதிய ஆயருக்கு நியமனம் வழங்குதல்.



புதிய ஆயரை எமது கர்தினால் வாழ்த்துதல்.



புதிய ஆயர் கேக் வெட்டுதல்.



நன்றிச் செபம்.

# அமைதிக்கு ஓர் அன்னை

# புனித அன்னை திரேசா




**"பிறப்பால் நான் அல்பேனிய நாட்டைச் சேர்ந்தவள், குடியுரிமையால் ஓர் இந்தியர், இறை நம்பிக்கையில் நான் ஒரு கத்தோலிக்க கன்னியர், அழைப்பால் நான் உலகுக்கே உரியவள், எனது உள்ளத்தால் நான் இயேசுவின் திரு இருதயத்திற்கு முற்றிலும் உரியவள்"**

எனத் தம்மையே அடையாளம் காட்டி வந்த அன்னை தெரசாவுக்கு 2003 ஐப்பசி 19ம் நாளில் திருத்தந்தை 2ம் ஜோன்போல் அவர்கள் வத்திக்கானில் முத்திப்பேறு பட்டம் வழங்கினார். முத்திப்பேறு பட்டம் என்பது புனிதர் பட்டம் வழங்கப்படுவதற்கு முன்னால் உள்ள ஒரு பதவி.

ஒருவர் எவ்வளவுதான் புனிதமான வாழ்க்கை நடத்தினாலும், அவருக்கு முத்திப்பேறு பட்டம் வழங்குவதற்கு சில விதிமுறைகள் உள்ளன; ஒருவர் இறந்த பின்னரே அவருக்கு முத்திப்பேறு பட்டம் கொடுக்கும் பணிகள் தொடங்கப்படும். அன்னை இறந்த 6 ஆண்டுகளில் இஃது நிகழ்ந்தது. இந்த ஆறு ஆண்டுகளில் அன்னை வாழ்ந்து இறந்த இடத்திலுள்ள ஆயர், அதாவது கொல்கொத்தா பேராயர் ஓர் ஆய்வு தொடங்குகிறார். அன்னையின் வாழ்க்கை, அவர் எழுதிய கடிதங்கள், அவருடைய செயல்பாடுகள் யாவற்றையும் ஆராய்ந்து தொகுத்தெழுதுகிறார். இதை பேராயருக்காகச் செய்தவர் அருள்திரு. பிரையன் கொலோடியேசுக் (Fr. Brian Kolodiejchuk) என்னும் கனடாவைச் சேர்ந்த ஒரு குரு. இவர் அன்னை நிறுவிய ஆடவர் சபையைச் சேர்ந்தவர். இவர் சேகரித்த கருத்துக்களை 76 தொகுப்புக்களாகத் தொகுத்து வத்திக்கானுக்கு அனுப்பிவைத்தார். வத்திக்கானிலுள்ள தனிக் குழு ஒன்று இக்கருத்துக்களை ஆராய்ந்து பார்த்து அன்னையின் பரிந்துரையால் புதுமைகளை நடத்திருக்கின்றவா? எனவும் பார்த்த பின்னர் அவருக்கு முத்திப்பேறு பட்டம் அளிக்கலாம் என்று திருத்தந்தையிடம் பரிந்துரைக்கிறது.

அன்னையின் பரிந்துரையால் புதுமையொன்று நடந்துள்ளது. அது 1998 புரட்டாதி 5ம் நாள், அதாவது அன்னை இறந்த முதலாம் நினைவு நாளன்று நிகழ்ந்தது. மேற்கு வங்காளத்திலுள்ள ரைகஞ்ச் என்னுமிடத்திலிருந்து ஒரு பெண்மணி கல்கத்தாவுக்கு வந்து அன்னையின் சகோதரிகள் நடத்தி வரும் இறக்கும் தருவாயிலுள்ளோர்க்கான விடுதியில் படுத்திருக்கிறாள். பெயர் மோனிக்கா பெஸ்ரா. அவளுடைய வயிற்றில் ஒரு கட்டி (Ovarian tumour and tuber cular meningitis) யால் அவள் அவதிப்பட்டுக் கிடந்தாள். அவளைப் பரிசோதித்துப் பார்த்த மருத்துவர்கள் இதைக் குணமாக்குவது கடினம் என்றார்கள். இந்நிலையில்தான் பெஸ்ரா அன்னை தெரசாவிடம் தன்னைக் குணமாக்க வேண்டுமென்று வேண்டினாள். அவளது வேண்டுகோள் கேட்கப்பட்டது. பெஸ்ரா நோய் நீங்கி குணம் பெற்றாள் அற்புதவிதமாக.

முத்திப்பேறு பட்டம் வழங்குவதற்கு ஒரு நிபந்தனையாக இருந்ததுதான் இந்தப் புதுமை. அடுத்து உரோமில் ஐப்பசி 19ம் நாள் நடந்த நிகழ்ச்சிகளைக் கவனிப்போம். அன்று ஞாயிற்றுக்கிழமை. கூட்டங்கள் அனைத்தும் உரோமை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தன. உலக நாடுகளிலிருந்து ஏறத்தாழ 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் புனித இராயப்பர் சதுக்கத்தில் நிரம்பி வழிந்தனர். தூரத்தில் இருந்தவர்களின் வசதிக்காக மிகப் பெரிய தொலைக்காட்சித் திரைகள் வைக்கப்பட்டிருந்தன. 149 கர்தினால்கள், நூற்றுக்கணக்காக பேராயர்கள், ஆயர்கள், ஆயிரக்கணக்காக குருக்கள், சகோதரிகள் எண்ணிலடங்கா பொதுநிலையினர் முன்னிலையில் திருத்தந்தையின் திருப்பலி தொடங்க இருந்தது.

இந்தியா, அல்பேனியா, போலந்து, லெபனன், இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், தென் கொரியா, மாசிதோனியா போன்ற நாடுகளின் தேசியக் கொடிகள் அங்கே பறந்தன. அன்னை தெரசாவின் சேவையை அதிகம் அனுபவித்த நாடுகளை இக்கொடிகள் இனம் காட்டின.

இந்தியாவின் சார்பில் நிதித்துறை இணை அமைச்சர் திரு. தாமஸ் தலைமையில் தூதுக் குழுவி-னரும் அதில் கலந்துகொண்டனர். அன்னை தெரசா சபையின் தற்போதைய தலைவி சகோதரி நிர்மலா அவர்களும் தெரசாவால் அற்புதவிதமாக குணம் பெற்ற மோனிக்கா பெர்ஸாவும் பீடத்துக்குமுன் வந்து அன்னைக்கு அஞ்சலி செலுத்தினர்.

சரியாகக் காலை 10 மணிக்கு திருத்தந்தை அவர்கள் பலிப்பீடத்திற்கு வந்தார்கள். இந்திய முறைப்படி ஆரத்தி எடுக்கப்பட்டது. ஆங்கிலம், இத்தாலி, பிரெஞ்சு, அல்பேனியா ஆகிய மொழிகளில் முன்னுரை வாசிக்கப்பட்டது. இலத்தீன் மொழியில் திருத்தந்தை திருப்பலியை நிறைவேற்றினார். கர்தினால் லூர்துசாமி, மும்பையின் கர்தினால் ஐவன் டயஸ், கர்தினால் சேபே (மறை பரப்புப் பணி பேராயத் தலைவர்) வத்திக்கான் நிர்வாகத் தலைவர் கர்தினால் சொடானோ மற்றும் கொல்கொத்தா பேராயர் லூக்காஸ் சிர்க்கார் ஆகியோர் திருத்தந்தையுடன் பலி செலுத்தினர். மற்றவர்கள் யாவரும் கூட்டுத் திருப்பலியில் பங்கேற்றனர்.

அதன்பின் கொல்கொத்தா பேராயர் லூக்காஸ் சிர்க்கார் திருத்தந்தையிடம் அன்னை தெரசாவுக்கு முத்திப்பேறு பட்டம் அளிக்குமாறு கேட்டுக் கொண்டார். அப்போது திருத்தந்தை அன்னையைப் பற்றியும் அவரது பணிகளைப் பற்றியும் கேட்டறிய விரும்பி எதற்காக முத்திப்பேறு பட்டம் வழங்கப்படவேண்டும் என்று வினவினார்.

அன்னைவின் வாழ்க்கை விசுவாசத்திற்கு சான்று பகரும் வாழ்க்கையாய் இருந்தது என்றும் அவர் இறைத் தோழமையில் வாழ்ந்தவர் என்றும் அவரது இறப்பிற்குப் பின் புதுமை நிகழ்ந்துள்ளது என்றும் பேராயர் விபரித்தார்.

"அப்படியானால் அன்னை தெரசாவிற்கு முத்திப்பேறு பட்டம் கொடுக்கின்றேன்" என்றார் திருத்தந்தை. உடனே உரோமிலுள்ள 200க்கும் மேற்பட்ட கோவில்களிலிருந்து மணி ஓசை ஒலிக்க அன்னை தெரசாவின் திருவுருவப் படம் திறக்கப்பட்டது. எங்கும் மகிழ்ச்சி வெள்ளம். குறிப்பாக அன்னையின் சபைச் சகோதரிகள் கரவொலி எழுப்பி தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

திருத்தந்தை தம் மறையுரையில் அன்னை தெரசாவைப் பற்றிக் குறிப்பிடும்போது "மிகவும் மனவுறுதிகொண்டிருந்த அவரை நான் நன்றியோடு நினைத்துப் பார்க்கின்றேன். நற்செய்திப் பயணத்தில் என்னோடு சேர்ந்து நடந்து வந்தவராக நான் உணர்கிறேன்" என்றும் அன்னை தெரசா எளியவராக வாழ்ந்தார் என்பதைவிட, எளியவரிலும் எளியவராக வாழ்ந்தார். எப்படிப்பட்ட வறுமை நிலையும் போராட்டமும் அவரை நிறுத்த முடியவில்லை. தமது பிறர்நலப் பணியில் இறுதி மூச்சுவரை தொடர்ந்தார்" எனவும் குறிப்பிட்டார். திருத்தந்தையின் மறையுரையை மும்மைப் பேராயர் கர்தினால் ஐவன் டயஸ் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

அன்னையின் இரண்டாவது தாய்மொழியான வங்க மொழியிலே விசுவாசிகளின் மன்றாட்டு பாடப்பட்டது. காணிக்கைப் பவனியின் போது அன்னை தெரசாவின் உறைந்த இரத்தம் இதய வடிவிலான வெண்கல உருவத்தில் கொண்டு வரப்பட்டு காணிக்கையாக செலுத்தப்பட்டது. எழுந்தேற்றத்தின் போது திவ்விய நற்கருணைக்கு நம் தமிழ் மொழியில் பாடி அஞ்சலி செலுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. திருப்பலியின் முடிவில் திருத்தந்தை வந்திருந்த மக்களை ஆசீர்வதித்ததோடு இந்தியர்களுக்குத் தமது மகிழ்ச்சியை சிறப்பான முறையில் தெரிவித்தார்.

அன்னை தெரசாவுக்கு முத்திப்பேறு பட்டம் அளிக்கப்பட்ட அந்நாள் இந்தியாவில் ஒரு மாபெரும் மகிழ்ச்சி விழாவாகக் கொண்டாடப்பட்டது. கொல்கொத்தாவில் குழந்தைகள் மிகப் பெரியதோர் ஊர்வலம் நடத்தித் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். டில்லியில் ஐம்பதாயிரம் ஏழைக-ளுக்கு உணவு அளிக்கப்பட்டது. கேரளாவில் அன்னையின் நினைவாகப் புதியதோர் ஆலயம் திறக்கப்பட்டது. இந்தியாவிலுள்ள 148 கத்தோலிக்க மறைமாவட்டங்களிலும் பல நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. கொல்கொத்தாவிலுள்ள அன்னை தெரசாவின் கல்லறையில் ஆயிரக்கணக்கானோர் சென்று மலர் அஞ்சலி செலுத்தினர். புதுடில்லியில் மக்கள் அதிகம் பயன்படுத்தும் முக்கியமான ஒரு சாலைக்கு "Mother Teresa Crescent" என்று பெரியப்பட்டது. புதுடில்லியில் பேராயர் வின்செண்ட் கொன்சேசாவோ சிறப்பு வழிபாடு நடத்தினார். இதில் சுமார் 3000 பேர் கலந்துகொண்டனர். கேரளாவில் அன்னை தெரசாவின் பெயரில் எர்ணாகுளம் - அங்கமாலி மறைமாநிலத்தைச் சேர்ந்த 2 இலட்சம் கத்தோலிக்கர்கள் கண்தானம் அளிக்க முடிவு எடுத்தனர். கர்நாடகாவில் 28 சமூகப் பணி மையங்கள் அன்னை தெரசாவின் பெயரில் தொடங்கப்பட்டன. குஜராத்தில் புதிதாக எழுப்பப்பட்ட மிகப் பெரிய பூங்காவிற்கு அன்னை தெரசாவின் பெயரை வைக்க அம்மாநில அரசு முடிவு செய்தது. இதோடு நின்றுவிடாமல் அடுத்தபடியாக அன்னைக்குப் புனிதர் பட்டமும் கிடைத்திட நாம் வேண்டுவோம். அவரது உள்ளத்தில் சுடர் விட்டெரிந்த சேவை மனப்பான்மை நம்மிடமும் விளங்கிட நாம் இறைவனை இறைஞ்சுவோம்.




**தொடரும்**

தொகுப்பு
அருட்சகோதரர் R. ஜோசப் ஜெயகாந்தன்

# இறை இரக்க இயேசுவே

## எனக்காக நீர் மட்டுமாவது...

அழகிழந்தேன் பொருளிழந்தேன்
உறவிழந்தேன் உடல் நலம் இழந்தேன்
மனச்சுமை வலிச்சுமை
கடன்சுமை வாழ்க்கைச்சுமை

துயரத்தில் தோய்ந்தேன்
என் உறவுகள் “நீ யார்” என
கேட்டார்கள்.
நீரோ “நீ தான் என் உயிர்” என
என்னை அணைத்துக் கொண்டீர்

தொலைவில் என் தலையைக்
கண்டபோதே “ஐயோ தொல்லை”
என ஒழிந்துகொண்டனர் பலர்
நீரோ “நீ தான் என் செல்லப்பிள்ளை”
என எனக்கு உரிமை தந்து உம்
உறவாக்கினீர்


என் குரலைக் கேட்பதற்கும் நான்
கதைப்பதைக் கேட்பதற்கும் பயம்
என்றனர் பலர்
நீரோ நான் எப்போது தான் வருவேனோ
என்னதான் மணிக்கணக்காய்
கதைப்பேனோ – என என்
வருகைக்காய் நற்கருணையில்
காத்திருந்தீர்

நோயுற்றேன் ஒரு பொருளைபோல
தூக்கி எறியப்பட்டேன் பலரால்
கொடூர நோயிலிருந்து என்னை
காத்து உம் உள்ளங்கையில் எனை
பொறித்துக்கொண்டீர்.

என்னை அன்பு செய்கிறார்கள் பலர்
என போலி அன்பை எண்ணி
மகிழ்ந்திருந்தேன்
நீரோ எனக்காய் உயிரைக்
கொடுக்கக் கூட துணிந்து உண்மை
அன்பன் நான் தான் என எண்பித்தீர்.

தனிமையில் நான் தவித்திருந்தேன்
வேதனையில் சோர்ந்திருந்தேன்
ஏன் இந்த வாழ்க்கை என விரக்தி
கொண்டேன் தேற்றுவார் யாருமில்லை
என கண்ணீரில் மூழ்கலானேன்.
எங்கிருந்தோ
ஒரு கருணையின் பார்வை
ஒரு பரிவான கரத்தின் ஸ்பரிசம்
ஒரு மென்மையான
இதயத்தின் அணைப்பு
ஒரு கருணைமிக்க தோளில் சுகம்
ஒரு பாசமான மார்பின் வருடல்
இரக்கமே உருவாகி உயிரான
நல்லாயன்
இயேசுவே அது உம்முடையது என
உணர்ந்து கொண்டேன்.
உம் இரக்கத்தின் மழையில் நனைந்து
என் வாழ்வின் இறுதிவரை நடப்பேன்
என உறுதி கொண்டேன்.

த. மேரி பற்றீசியா
திம்பிரிகஸ்யாய






### சின்னச் சின்ன சிந்தனைகள்

# ஆற்றல்

சில நாள்களில் காலையில் எழுந்தவுடன் எதைப் பார்த்தாலுமே கோபம் கோபமாகத் தோன்றும். ஒரு விதமான பதைபதைப்பு நம் உடலோடு ஒட்டிக்கொண்டிருப்பதை நாம் உணர்ந்திருப்போம். சிறுசிறு காரியங்கள் கூட நம்மை எரிச்சல்படுத்தும். மற்றவர்கள் எதேச்சையாகச் சொன்ன வார்த்தைகளைக் கூட நாம் அதிகம் பெரிதுபடுத்திக் குழம்பிப்போவோம். காரணம் என்ன?

உடம்பில் ஆற்றல் குறைவாக இருப்பதே இதற்குக் காரணம். ஆச்சரியமாக இருந்தாலும், அதுதான் உண்மை. நம் உடலை இயங்க வைப்பது ஆற்றல். ஆற்றல் இல்லையென்றால், இந்த உடலும் மனமும் இயங்கமுடியாது. எனவேதான் நாள் முழுவதும் வேலை செய்துவிட்டு, மாலை நேரத்தில் மிகவும் களைப்போடு இருக்கின்றோம். காரணம், உடம்பின் ஆற்றலும் மனதின் ஆற்றலும் குறைந்துவிட்டன. இந்த ஆற்றலைப் புதுப்பிப்பதற்கான நேரம்தான் இரவுநேரம்.

நல்ல தூக்கம், இழந்த ஆற்றலை மீண்டும் பெற்றுத் தருகின்றது. இரவு 10 மணிமுதல் நள்ளிரவு 2மணி வரை நம் உடல் தன்னை புதுப்பித்துக் கொள்கிறது. இது இன்றைய அறிவியல் சுட்டிக்காட்டும் உண்மை.

காலையில் செய்யும் தியானம் மனம் தன்னைப் புதுப்பித்துக்கொள்வதை உத்வேகப்படுத்துகிறது. இரவில் சரியான தூக்கம் இல்லை-யென்றால், உடலும் மனமும் தங்களைப் புதுப்பித்துக் கொள்வது தடை செய்யப்படுகின்றது. இழந்துபோன ஆற்றல் புதுப்பிக்கப்படுவதில்லை. இதுவே மேற்கூறப்பட்ட எல்லாப் பிரச்சினை-களுக்கும் காரணமாய் இருக்கிறது. இதுபோக, நம்மைச் சுற்றியுள்ள இந்த அண்டவெளியானது ஆற்றலால் நிரம்பியுள்ளது. இதை இந்திய மரபில் “ப்ரானா” (Prana) என்று சொல்கிறார்கள். புத்த சமயத்தில் காணப்படும் “ரேக்கி” என்ற தியான முறையில் இது ‘ரே’ என்று சொல்லப்படுகிறது.

**இந்த ஆற்றலில் உயர்வு - தாழ்வு ஏற்படும்போது, அதுவும் நம் உடலைப் பாதிக்கிறது.**



# குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு

153

# ஆண்டவரிலேயே

## மகிழ்ச்சி கொள் (தி.பா 37:4)

வேதசாட்சிகள் ஒருசில மணித்தியாலங்களில் இறந்துவிடுவர். அதாவது வெட்டி, சிலுவையில் அறைந்து, கல்லால் எறிந்து, அம்பால் எய்து இப்படி சில மணித்தியாலங்களில் இறந்து விடுவர். ஆனால் எமது வாழ்வில் அன்றாடம் எமது துன்பம் என்னும் சிலுவைகளைப் பல வருடங்களாகச் சுமக்கிறோம். இது மிகவும் கடினமானது. விசுவாசம் தளராமல் இறை அன்பில் நம்பிக்கை வைத்தவாறு பல வருடங்களாகப் பயணம் செய்கிறோம். இது மிகவும் கடினமானது.

“ஆண்டவர் மேலேயே மகிழ்ச்சி கொள். உன் உள்ளத்து விருப்பங்களை அவர் நிறைவேற்றுவார்”. (திருப்பாடல் 37.˙.4)

“உன் வழியை ஆண்டவரிடம் ஒப்படைத்துவிடு அவரையே நம்பியிரு. அவரே உன் சார்பில் செயலாற்றுவார்” (திருப்பாடல் 37.˙.5)

இந்த இரண்டு அனுபவங்களும் எமது வாழ்வில் மிகவும் கடினமானவை. மனித அறிவில் விளங்காத பல விடயங்கள் தூய ஆவியின் ஞானத்தில் விளங்கும்.

1. எனது பிரச்சினை கடவுளுக்குத் தெரியும்.
2. இறைவன் இதற்கு அனுமதித்துவிட்டார்.
3. இதை நன்மையாக மாற்றுவார்.
4. அவரது நேரம் வரும் வரை காத்திருப்பேன்.
5. அதுவரை இறைவனுக்கு நன்றி சொல்லிக்கொண்டே இருப்பேன்.

இந்த ஐந்து படி நிலைகளுமே எமது வாழ்வில்



நீங்களும் வாழ்ந்து பாருங்கள். இப்படி வாழ்ந்தவர்கள் பலர். இப்படி வாழும்போது மன அழுத்தம், மனப் பதட்டம் போன்ற பல நோய்கள் குறைவதை நீங்களே உணர்வீர்கள்.


இறைவன் என்னைப் படைத்த போது எனது அனுமதியைப் பெறவில்லை ஆனால் என்னை மீட்க எனது அனுமதியைக் கேட்கிறார். காரணம் எமக்குச் சுதந்திர விருப்பத்தைத் தந்து விட்டார். அதனால் அதில் அவர் கைவைப்பதில்லை. நல்லதைச் செய்யவும், கெட்டதைச் செய்யவும், என்னைத் தடுக்காது விட்டுவிடுகிறார். நல்லதைச் செய்தால் நல்ல பலனும் கெட்டதைச் செய்தால் கெட்ட பலனும் கிடைப்பதைக் காண்போம். இது எனது அனுபவத்தில் கண்ட உண்மை.

எமது பிள்ளைகள் செல்வங்கள் என்ற மனப்பான்மை இன்று எத்தனை பேருக்குள்ளது. பிள்ளைகள் உபத்திரவம் என்ற மனப்பாங்கு பல தம்பதிகளுக்குண்டு. பிள்ளைகளை அன்பு செய்ய கணவன் மனைவி இருவரும் தம்மை அர்ப்பணிக்க வேண்டும். அவர்களைப் புரிந்து கொள்ள வேண்டும். பிறந்த பிள்ளை ஒவ்வொரு பருவத்திலும் அதன் தேவைகள் வளர்ச்சிகள் மாற்றமடையும். இதனைப் புரிந்து கொண்டு. அத்தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். இன்று எத்தனை பெற்றோருக்கு இந்த அறிவு உண்டு. பிள்ளைகளைச் சிலுவையாக நினைக்கின்ற பெற்றோர் எத்தனை பேர் உள்ளனர்?

இவற்றை மனதில் கொண்டு எமது துன்பங்களை மகிழ்ச்சியோடு சுமப்போம். இறைவனுக்கு நன்றி கூறுவோம். அவர் எல்லாவற்றையும் நன்மையாக மாற்றுவார்.

**தொடரும்**

**பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா**
**உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம்.**



## இறைவாக்கைக் கேட்பதால் திருச்சபை கட்டியமைக்கப்படுகிறது

# இறைவார்த்தை வழிபாடு

### உயிர்ப்புக்காலம் 4வது ஞாயிறு (22.04.2018)

**வாசக விளக்கம்:** உயிர்ப்புக் காலத்தின் நான்காவது வாரத்தை தொடங்கும் இறை நெஞ்சங்களே அன்பர்களே! எமக்காகத் தன் உயிரைக் கொடுத்து எம்மை அன்பு செய்யும் கடவுளின் அன்பை உணரவும், இன்றைய நற்செய்தியில் வரும் இருவகையான ஆயர்களைப் பற்றி புரிந்து கொள்ளவும் இன்று நாம் அழைக்கப்படுகின்றோம். தன் ஆடுகளுக்காக உயிரைக் கொடுக்கும் நல்ல ஆயனும், கூலிக்காக, கடமைக்காக செயல்படும் ஆயர் பற்றியும் சிந்திக்கின்றோம். இன்றைய சமுதாயச் சூழலில் ஏழை மக்களின் வாழ்வாதாரத்தைக் கூறுபோட்டு அவர்களின் வயிற்றில் அடித்து சுயநலத்துடன் வாழும் தலைவர்கள் மத்தியில் நல்ல ஆயனாக இயேசு தன்னை வெளிப்படுத்துகின்றார். “நல்ல ஆயன்” என்ற வார்த்தை இயேசுவின் உண்மை அன்பின் வடிவமாக இருக்கின்றது. சுயநலம் விடுத்து பிறர்நலமும், பொது நலமும் பேணுவது நல்ல தலைவர்களின் பண்பாக உள்ளது. கிறிஸ்தவர்களாகிய நாமும் நல்ல ஆயனின் பண்புகளை பின்பற்றி வாழும் வரத்தினை வேண்டிடப் பலியில் இணைவோம்.

## பேதுரு

**முதல் வாசகம் : தி.ப 4:8-12**
இயேசுவினாலே அன்றி வேறு எவராலும் மீட்பு இல்லை

**பதிலுரைப் பாடல் :**
கட்டுவோர் புறக்கணித்த கல்லே கட்டடத்தின் மூலைக்கல் ஆயிற்று

**இரண்டாம் வாசகம் : 1 யோவா 3:1-2**
கடவுள் இருப்பதுபோல் அவரைக் காண்போம்.

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா நல்ல ஆயன் நானே நானும் என் ஆடுகளை அறிந்திருக்கின்றேன் என் ஆடுகளும் என்னை அறிந்திருக்கின்றன என்கிறார் ஆண்டவர் அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : யோவா 10:11-18**

### விசுவாசிகளின் மன்றாட்டு

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

நல்ல ஆயர்கள் பலரை தன்னகத்தே கொண்டு இயேசுவின் பணியை முன்னெடுத்து செல்லும் திருச்சபையானது காலத்தின் குறிகளையும் தேவைகளையும் அறிந்து மக்களுக்காக தம்மை அர்ப்பணித்து திருச்சபையை எழுச்சியுறச் செய்யவும், நல்லாயன் இயேசுவைப் போல் சிந்திக்கவும், வாழவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

உண்மை அன்பின் வடிவமாகத் திகழ்ந்த நல்லாயன் இயேசுவின் பண்புகளை நிலைநிறுத்தி நாட்டை ஆள்வோரும் மக்களும் சுயநலமேலீட்டால் தவறுகள் இழைக்காமல் பொதுநலம் பேணவும், உண்மையையும், நீதியையும் அணிகலனாய்க் கொண்டு மக்களுக்காய் பணிபுரியவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

நாம் நல்லாயன் இயேசுவின் ஆடுகள் என்பதால் முழுமனதோடு அவரை ஏற்று அவர்பின் செல்லவும், அவர் காட்டும் பாதையில் நாம் நடக்கவும், நாம் ஆயனைப் பிரிந்து சென்றால் எம் வாழ்வு கேள்விக் குறியாகிவிடும் என்பதை உணரவும், மற்றவர்களும் நல்லாயனைப் பின்செல்ல வழிகாட்டவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

### உயிர்ப்புக் காலம் 5வது ஞாயிறு (29.04.2018)

**வாசக விளக்கம்:** உயிர்ப்புக் காலத்தின் ஐந்தாவது ஞாயிறு தினத்தில் இறைவனுக்கு நன்றிப்பலி செலுத்த ஒன்று கூடி வந்துள்ள இறை நெஞ்சங்களே! இன்றைய நற்செய்தியில் நமதாண்டவர் கூறுகின்றார். “நானே திராட்சைக் கொடி நீங்கள் அதன் கிளைகள் நீங்கள் என்னோடு நிலைத்திருந்தால் மிகுந்தகனி தருவீர்கள் என்று நாம் இயேசுவில் நிலைத்திருந்து இறைவனுக்கும் திருச்சபைக்கும் மிகுந்த கனிதர அழைக்கப்படுகின்றோம். ஒரு திராட்சை செடியின் கிளைகளை கூர்ந்து கவனிப்போமானால் இன்றைய உவமையின் ஆழத்தையும், அர்த்தத்தையும் புரிந்து கொள்ள முடியும் திராட்சைக்கிளை ஒவ்வொன்றும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து காணப்படும் மையக்கிளையை விட்டுப் பிரிந்தால் அவைகளால் கனிதர இயலாது அதுபோல் இயேசுவைப் பிரிந்து நம்மால் ஒன்றும் செய்ய முடியாது. நமது செயல்பாடுகள் பணிகளில் வரும் முடிவுகளை விட உறவில் உள்ள உண்மைகளைத் தேடுவதே எமது கடமையாகும். இதற்கு வேண்டிய அருளைப் பெற்றிட பலியில் இணைவோம்.

**முதல் வாசகம் : தி.ப 9:26-31**
பவுல் ஆண்டவரை வழியில் கண்டது பற்றி பர்னபா திருத்தூதர்களுக்கு விளக்கிக் கூறினார்.

**பதிலுரைப் பாடல் :**
ஆண்டவரே, நான் செலுத்தும் புகழ் உம்மிடமிருந்து எழுவதாக.

**இரண்டாம் வாசகம் : 1 யோவா 3:18-24**
நம்பிக்கை கொண்டு அன்பு செலுத்த வேண்டும், இதுவே கிறிஸ்துவின் கட்டளை

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா நான் உங்களோடு இணைந்து இருப்பதுபோல நீங்களும் என்னோடு இருங்கள். ஒருவர் என்னுடன் இணைந்திருந்தால் அவர் மிகுந்த கனி தருவார் என்கிறார் ஆண்டவர் அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : யோவா 15:1-8**

### விசுவாசிகளின் மன்றாட்டு

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

திராட்சைக் கொடியான இயேசுவுடன் இணைந்து வாழ எமக்கு வழிகாட்டும் திருச்சபையின் ஊழியரான திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவரையும் நிறைவாக ஆசீர்வதித்து மென்மேலும் அவர்கள் தம் பணிவாழ்வில் சிறந்திட வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

நாட்டில் வாழ்கின்ற நோயாளிகள், முதியவர்கள், வறியவர்கள் வாழ்வில் அனுபவிக்கும் துன்பங்களை இயேசுவின் துன்பங்களோடு இணைந்து பொறுமையுடன் ஏற்றுக்கொள்ள அவர்களுக்கு நாம் முன்மாதிரிகையாக விளங்கவும் அவர்களுக்கு வேண்டிய உதவிகள் புரியவும் வேண்டிய நல்மனதைத் தந்தருள வேண்டுமென்று...

இயேசுவின் பெயரால் நாம் விரும்பிக் கேட்பதெல்லாம் கிடைக்கும் என்று நாம் நம்பவும், தூய பவுல் அடியாரைப் போன்று துன்ப துயரங்களுக்கு இடையிலும் மனந்தளராது கிறிஸ்துவை அறிவிக்கவும், இறைவனின் வார்த்தைகளை அடிப்படையாகக் கொண்டு எமது கிறிஸ்தவ வாழ்வை அமைத்துக் கொள்ளவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

# மிருதுச் செடி (நறுமணச் செடி)

இந்தச் செடி அதனுடைய சிறப்பான நறுமணத்திற்குப் புகழ்பெற்றது. இவ்வகை செடிகளின் இலைகளிலும் நறுமண தைலம் இருந்ததால், அவை மெலிதாக கண்ணாடி போன்று ஒளி ஊடுருவும் தன்மையில் இருந்ததோடு மருந்தாகவும் பயன்படுத்தப்பட்டன. இஸ்ரயேல் நாட்டினரின் கூடார திருவிழாக்களில் இந்த செடிகளின் கிளைகள் பயன்படுத்தப்பட்டன. யோசுவாவின் காலத்தில், கிரியத்து எயாளிம் என்ற மலைப்பகுதி இருந்ததாக யோசுவா 15:9ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், நெகேமியா 8:16ல் இத்தகைய நறுமணச் செடியின் கிளைகளைக் கொண்டு வந்து மக்கள் கூடாரங்கள் அமைத்ததாக கூறப்பட்டுள்ளது. இந்த செடியானது, நன்கு ஈரப்பதம் உள்ள மண்ணில் வளரும் தன்மையுடையது. எனவே தான் பாலை நிலம் சோலை வனம் ஆகும் என்று கூறிய எசாயா இறைவாக்கினர் 41:19ல் மிருதுச் செடி, ஒலிவ மரம் ஆகியன தோன்றச் செய்வேன் என்றார்.

கடின உள்ளம் கொண்டோரும், ஆண்டவரின் நன்மை தனங்களில் பங்கு கொள்ளும்போது, அவரது அமைதியால் நிரப்பப்பட்டு, இருளினின்று ஒளிக்கு வருவார்கள் என்பதை எசாயா 55:13ல், ‘காஞ்சொறிக்குப் பதிலாக, நறுமணச் செடி துளிர்த்து வளரும்’ என்று இறைவாக்கு உரைக்கிறார். இறைவாக்கினர் செக்கரியா, இரவு நேரத்தில், முதன் முதல் கண்ட காட்சியை செக்கரியா 1:8-11ல், ஆண்டவரின் தூதர், பள்ளத்தாக்கின் நடுவே, நறுமணம் வீசும் பசும் செடிகள் இடையே நின்று கொண்டிருந்தார் என்று வர்ணிப்பதன் மூலம், இந்த மிருதுச்செடி அல்லது நறுமணச் செடி, பள்ளத்தாக்குகளில் அதிகம் வளர்ந்தது என்பதை அறிந்து கொள்ள முடியும்.

# வல்லவனுக்கு வல்லவன்!



பெரியவர் குப்புசாமி மதுரையில் இருந்து சென்னைக்கு வர இரயிலில் ஏறினார். ஒரு துணிப் பையில் ஐம்பதாயிரம் ரூபாய் பணத்தைச் சுற்றி வைத்திருக்கிறார். தூங்காமல் இருக்க வேண்டும் என்று முடிவெடுக்கிறார்.

பக்கத்து சீட்டில் ஒரு வாலிபர், “எங்கே தாத்தா போகிறீர்கள்?” என்று பேச்சைத் தொடங்கினார்.

தாத்தா தான் போகிற இடம், என்ன வேலை என்பதையெல்லாம் சொன்னபின், மகளுக்கு கொடுக்க ஐம்பதாயிரம் ரூபாய் வைத்திருப்பதையும் சொன்னார். பணத்தை அடித்துவிட வேண்டும் என்று வாலிபர் திட்டமிட்டார்.

“தாத்தா, உங்களுக்குத் தூக்கம் வந்தால் நிம்மதியாகத் தூங்குங்கள் இப்போது நான் பாத்ரூமுக்குப் போய் வந்து விடுகின்றேன்” என்று சொல்லிவிட்டுப் போனார்.

வாலிபர் திரும்புவதற்குள், தாத்தா தன்னிடம் இருந்த பணத்தை வாலிபரின் பைக்குள் வைத்துவிட்டு வந்து படுத்துக் கொண்டார். வாலிபர் வந்தார். தாத்தா தூங்குவது போல் படுத்துக் கொண்டு அவரைக் கண்களால் பார்க்கிறார்.

வாலிபர் எழுந்து வந்து தாத்தாவின் பைக்குள் பணத்தைத் தேடுகிறார். ஏமாற்றத்துடன் வந்து படுத்துத் தூங்குகிறார்.

இரயில் சென்னைக்கு வந்து விட்டது. தாத்தா வாலிபரிடம், “தம்பி, நான் போய்வருகின்றேன். என் பணத்தை பாதுகாப்பாக வைத்திருந்ததற்கு நன்றி” என்று கூறிவிட்டு வாலிபரின் பைக்குள் இருந்த பணத்தை எடுத்துக் கொண்டு கீழே இறங்கினார்.

“சே... கைக்கு எட்டினது வாய்க்கு எட்டாமல் போச்சே” என்று புலம்பினார் வாலிபர்.

## நல்வாழ்விற்கான வழிகள்

1. புரிந்துக்கொள், தட்டிக் கேட்காதே
2. இரக்கப்படு, தீர்ப்பிடாதே
3. கற்றுக்கொள், விலகிப்போய்விடாதே
4. செயல்படு, எதிர் செயல் புரியாதே
5. மதிக்கக் கற்றுக்கொள், இழிவுப்படுத்தாதே

இவையே சுகமான இனிமையான வாழ்வுக்கு அடித்தளமானப் பண்புகளாகும்.

## சிந்தனைக்கு

**கோபம் :** அது யாருக்கு வேண்டுமானாலும் வரலாம். அது சுலபம். ஆனால் சரியான மனிதர் மீது, சரியான காரணங்களுக்காக, சரியான நேரத்தில், சரியான அளவில், சரியான விதத்தில் கோபப்படுவது மிகக் கடினம்.

– அரிஸ்டாடில்

# தேவ அழைத்தல் தினம் 2018 - மந்தையி

## ஆயரின் செய்தி


கிறிஸ்து நிறுவிய திருஅவைக்கும் அவர் அதற்களித்த பணிக்கும் அவர் அழைத்துக்கொண்ட பணியாளர்களுக்கும் அடிப்படையாக அமைவது நல்லாயனாம் கிறிஸ்துவின் உருவேயாகும். (காண். யோவான் 10:1-18 அவர்தம் பணி தொடர) எசா 40:11, எசே 34:11-16 பங்குனி 2013ல் திருத்தந்தையாக தெரிந்தெடுக்கப்பட்டு இரண்டே வாரங்களில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் “மந்தையின் மணம்” எனும் புதியதோர் சொற்றொடரை திருஅவைக்கு அளித்தார். பின்னர் தலைமைத்துவம் வகிக்கும் அனைத்து மதச்சார்பற்ற அமைப்புகளிலுள்ளோர்க்கும் அதனையே விரிவுபடுத்தினார்.

ஒவ்வொரு மேய்ப்பனும் தன் மந்தையின் மணங்கொண்டவராக இருக்கவேண்டும். “குடிசைச் சேரிகளின் ஆயர்” என அழைக்கப்பட்ட ஆயர் ஜோர்ஜ் மரிய பெர்கோக்லியோ நிச்சயமாக தன் மந்தையின் மணம் கொண்டிருந்திருக்க வேண்டும். எனவே, தற்போது கத்தோலிக்க திருஅவையின் அனைத்துலக ஆயராக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் திருஅவையில் உள்ளோரையும் வெளியாட்களையும் **“மந்தையின் மணம் கொண்ட மேய்ப்பர்களாக”** வாழ அழைப்பது புதினமல்ல. 2018ம் ஆண்டின் இறையழைத்தல் ஞாயிறின் தொனிப்பொருளாக இத்தொடர் அமையும் இவ்வேளையில் நாங்கள் கவனம் செலுத்துவது யாதெனில்

1. குருத்துவ மற்றும் துறவற அழைப்பிற்கான தேவை
2. ஏற்கனவே உருவாக்கத்தில் உள்ளோர்
3. குருத்துவ துறவற வாழ்விற்காக தம்மை அர்ப்பணித்-துள்ளோர் சார்பில் பொறுப்புடைய உருவாக்குனர்கள்.

ஆகவே, இவ்வாறு முன்வந்தோரின் பெற்றோர், உடன் பிறப்புக்கள், உறவினர், நண்பர், நலன்விரும்பிகள், பங்குத்தந்தையர் மற்றும் பங்குத்தள குழுமங்கள் இவர்களை “மந்தையின் மணம் கொண்ட மேய்ப்பர்களாக” உருவாக்கிட தயார் செய்யவென திருஅவை அழைக்கப்பட்டுள்ளது. ஏனையோர் யாரெனில் ஆயர்கள் தலைமைத் துறவிகள் மற்றும் குருத்துவ துறவற உருவாக்க இல்லங்களில் உள்ள குருக்களும் துறவிகளுமாவர்.


இவர்கள் யாவரும் திருஅவைக்கென “மந்தையின் மணம் கொண்ட மேய்ப்பர்களாக”



உருவாகவென குருவாதம், பிழைப்புவாதம், பொருள்வாதம் முதலியவற்றை விட்டொழிக்க வேண்டும். இன்றைய திருஅவை எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு அது ஓர் நல்லதோர் தீர்வாக அமையும். பொதுநிலையினரின் பெருந்தன்மையூடாக பெற்றுக்கொள்ளும் வளங்கள் யாவும் நல்லாயனாம் இயேசுவின் இதயத்திற்கேற்ற மேய்ப்பர்களை உருவாக்க பயன்படுத்தப்படுகின்றது. ஐப்பசி 2018ல் கூடவுள்ள பேரவை “இளைஞர்கள் விசுவாசமும் மற்றும் அழைத்தலை உணர்தலும்” என திருத்தந்தை தந்த தொனிப்பொருளின் கீழ் கலந்துரையாடவுள்ளது. இவ்வேளையில் திருத்தந்தை அவர்கள் ஆடி 2013ல் இடம்பெற்ற உலக இளைஞர்கள் தினத்தன்று பிரேசில் ஆயர்களிடம் முன்வைத்த வினா-வினை நினைவுப்படுத்துவது பொருத்தமானதாகும். இதனோடு அவர் திருஅவையில் அனைத்து ஆயர்களிடம் திருஅவையினையும் சிந்திக்க அழைத்தார்.

அவ்வினா யாதெனில் “மக்களின் மணங்களை ஆற்றுப்படுத்துகின்ற இருளில் அவர்களோடு கூட நடக்கின்ற அவர்களது எதிர்ப்பார்ப்புக்கள் மற்றும் ஏமாற்றங்களை சந்தித்து கலந்துரையாடுகின்ற நொறுங்கிய உள்ளங்களை சீர்படுத்துகின்ற பணியாளர்களை உருவாக்குவதைவிட வேறு என்ன மகிழ்ச்சி எமக்கு வேண்டியுள்ளது?” என்பதாகும். இக்கேள்வியானது கிறிஸ்துவின் மேய்ப்புப்பணியில் பங்குகொள்ள அழைக்கப்பட்டுள்ள உருவாக்குனர்கள் மற்றும் திருநிலைப்படுத்தப்பட்ட பணியாளர்கள் அல்லது துறவிகளிடமிருந்து எதிர்பார்க்கப்படுவது என்னவென்பதை வெளிக்கொணர்கின்றது...

15





**குருக்களும் துறவிகளும் தம் மந்தைகளைக் கண்காணிக்க தம்முயிர்த் தியாகம் செய்கின்றனர்.**

**எக்காலமும் அவர்கள் கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்டவர்கள்**

**கரங்கள் அவர்கள் மீது வைக்கப்பட்டன, அவர்கள் கரங்கள் திருப்பொழிவு செய்யப்பட்டன, அபிசேகிக்கப்பட்டன.**

## ஒவ்வொரு குருமடத்திலும் கல்வி பயிலும் குருமட மாணவர்களின் எண்ணிக்கை




**NS - இலங்கை அன்னையின் தேசிய குருமடம் அம்பிட்டிய கண்டி**
**DS - தஹம் செவன திரு இருதய ஆண்டவர் இடைநிலை குருமடம்**
**JS - புனித சவேரியார் குருமடம் யாழ்ப்பாணம்**

குருக்கள் உங்களது நண்பர்கள். அவர்கள் உங்களுக்கு **திருமுழுக்கு** அளிக்கின்றனர், **திவ்ய நற்கருணைக்கும், உறுதிப்பூசுதலுக்கும்** தயார் செய்கின்றனர். கடவுளோடு ஒப்புரவாக்குகின்றனர். உங்களது **திருமணத்தை** ஆசீர்வதிக்கின்றனர். **நோயிற்பூசுதலால்** சுகம் தருவதுடன் ஒருநாள் உங்களது இறுதிச்சடங்கினையும் நடாத்துவர். இறைவனின் திருப்பெயரால் குருவே உங்களோடு கூட நடந்து **தொட்டில்** முதல் **சுடுகாடு** மட்டும் விண்ணகத்தின் வழியினைக் காட்டுகின்றார். **குருத்துவமும் துறவறமும்** புனிதமானவை. குருக்களும் துறவிகளும் உங்களது மகனும் மகளுமாவர். அவர்களுக்காகவும் வேண்டுங்கள். குருக்களும், துறவிகளும், குருமாணவர்களும் உங்களுக்காக மன்றாடுகின்றனர்.

எல்லா உருவாக்கலின் இல்லங்களிலும்போல **“தேசிய குருமடத்தின் நண்பர்கள் பணித்திட்டம்”** எனும் மையப்பொருளின் கீழ் விசுவாசிகளின் வேண்டுதல்களுக்காக செபங்கள் ஒப்புக்கொடுக்கப்படுகின்றன. இவ்விசேட வேண்டுதலுக்காக தங்களது கருத்துக்களும் வரவேற்கப்படுகின்றன.

**இவராலேயன்றி வேறு எவராலும் மீட்பு இல்லை. ஏனென்றால் நாம் மீட்புப் பெறுமாறு வானத்தின்க**

# ன் மனம் கொண்ட மேய்ப்பர்கள் ஆகிட...

## "நன்கொடை கடவுளின் சுதந்திரமான தெரிவு"



உங்களுக்கு ஒரு மீட்பரை அனுப்புவேன் என இஸ்ராயேல் மக்களுக்கு இறைவன் கொடுத்த வாக்குறுதிகளுள் குருத்துவம் ஓர் முதன்மையான இடத்தை கொண்டுள்ளது. இஸ்ராயேல் இனம் குருத்துவ மக்களாகக் கொள்ளப்படுகின்றது (வி.ப 19:6). இந்த மக்களிடமிருந்து லேவி இனம் குருத்துவ இனமாக இறைவனால் தேர்ந்தெடுக்கப்படுகின்றது. அவர்கள் மட்டுமே தூயகத்துள் நுழைய முடியும் (2குறி 23:6, 35:5). அவர்களது பணி தூய பணியாக கருதப்பட்டது. மக்களை ஆளவும் இறைவாக்குப்பணி புரியவும் அவர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

காலம் நிறைவுற்ற போது கடவுள் தன் மகனை மீட்பராக அனுப்பினார். இறைமகன் மனித சாயலை ஏற்று எம்மை அன்பு செய்து மீட்டார். மனுவுரு எடுத்தல் என்பது இயேசு குருவாக அர்ச்சிக்கப்படுகின்றார். "கடவுள் அவரை அர்ச்சித்து உலகிற்கு அனுப்பியுள்ளார்" (யோவான் 10:36). அவருடைய குருத்துவம் தனித்துவமானது. அவர் தன்னையே பலிப் பொருளாக மாற்றி முழு உலகத்தையே மீட்கின்றார். அவர் குரு, இறைவாக்கினர், அரசர். கடவுளுக்கும் மனிதனுக்குமிடையே உள்ள இணைப்பாளர். ஆரோன், லேவி இவர்களின் குருத்துவத்தை விட மெல்கிசெதேக்கின் குருத்துவத்தினால் அடையாளப்படுத்தப்படுகின்றது. இயேசுவின் குருத்துவம் ஓர் ஆழமான மறை இரகசியத்தை கொண்டது. மனிதத் தொடக்கத்தினை தேடிப் பார்த்து அறிவது இயலாததொன்றாகும். இயேசு ஓர் தலைமைக்குரு. இறையுறவில் மனிதனுக்காக செயல்படுபவர். மக்களின் பாவங்களுக்காக பலியாகின்றார். நிலையான மீட்பையும் புதிய உடன்படிக்கையையும் பெற்றுக்கொள்கின்றார். கிறிஸ்துவின் குருத்துவப் பணி ஒவ்வொரு குருவின் குருத்துவ பணியுடன் இணைக்கப்படுகின்றது. எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தில் குருத்துவத்தின் இறையியலை நாம் வாசிக்கின்றோம்.

"தலைமைக் குரு ஒவ்வொருவரும் மனிதரிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு பாவங்களுக்கு கழுவாயாகக் காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்துவதற்காக மக்கள் சார்பாக கடவுள் முன் பணி புரிய ஏற்படுத்தப்படுகின்றார்" (எபி5:1-4). இத்திருமுகம் குருத்துவத்தின் கடமைப்பாடுகளைத் தன்னகத்தே கொண்டிருக்கின்றது. இறைவன் தான் விரும்பியவர்களைத் தெரிவு செய்கின்றார் என்றும் பரிசுத்தமான பணியை நிறைவேற்ற இறைவன் வானதூதர்களை தெரிந்து கொள்ளவில்லை மாறாக வலுக்குறைந்த மனிதனையே தெரிந்து கொள்கின்றார். இயேசுவை பரிசுத்தமான வெளிப்பாடாகக் கொண்ட புதிய ஏற்பாட்டுக் குருத்துவம் கடவுளின் தெரிவு ஓர் நன்கொடையாகவும் சுதந்திரமானதாகவும் கொள்ளப்படுகின்றது. எனவே குருத்துவம் பரிசுத்த பணியைக் கொண்டதாகவும் மனிதனுக்கு பணி புரியவுமே உள்ளது.

இயேசு தன் குருத்துவத்தை திருச்சபைக்கு கையளிக்க விரும்பினார். குருத்துவ, துறவற அழைப்பு என்பது மனிதத்தைத் தாண்டிய ஓர் மறையுண்மையாகும் என்பதை ஆழமான அம்சமாக வெளிகாட்டினார். இறுதி இராவுணவின் போது அவரது பாடுகளுக்கு முன்னிரவு அப்பத்தையும் இரசத்தையும் தன் உடலாகவும் இரத்தமாகவும் ஒப்புக்கொடுத்தார். இதை என் நினைவாகச் செய்யுங்கள் எனத் தம் சீடருக்கு கட்டளை கொடுக்கின்றார் இயேசு (லூக். 22:16, 1கொரி. 11:25). புதிய உடன்படிக்கையின் குருக்களாக அவர்களை ஏற்படுத்துகின்றார் தனது குருத்துவம் திருச்சபையில் என்றும் பிரசன்னமாக இருக்க வேண்டும் என்பதை இயேசு விரும்பி அதனை நிறுவினார். இயேசுவின் பெயரால் குருத்துவ மக்கள் பணிக்குருத்துவத்தால் பணி புரிகின்றார்கள். குருவானவர் இயேசுவில் அப்பத்தையும் இரசத்தையும் அர்ச்சிக்கின்றார். அப்போஸ்தலர்களின் வழி தொடர்ந்து பணிபுரியும் ஆயர்களாக இயேசு திருச்சபையில் குருத்துவப் பணியை உறுதிப்படுத்துகின்றார். வலுக் குறைந்த மனிதர்கள் இந்த மாபெரும் சொத்தைக் கொண்டுள்ளனர்.

உலகெங்கும் கொண்டாடப்படும் "இறைஅழைத்தல் ஞாயிறு" தினத்தில் இறைவனின் நிபந்தனையற்ற பிரமாணிக்கத்தில் திருச்சபை நம்பிக்கை கொண்டு இளைஞர் யுவதிகளை இறைவனின் அழைப்பிற்கு திருப்திகரமான பதில் கொடுக்க முன்வர செபித்தும் உற்சாகப்படுத்தியும் நிற்கின்றது. இன்று கடவுளின் செயலிற்கு முழுத் திருச்சபையும் ஒத்துழைக்க வேண்டும் என்பதை எமக்கு ஞாபகப்படுத்துகின்றது. இறைவனால் விதைக்கப்பட்ட நல்ல விதைகள் பாதுகாப்பான முறையில் வேர்விட்டு வளர்ந்து நற்கனி கொடுக்க வேண்டும். அறுவடைக்குப் போதுமான வேலையாட்கள் கிடைக்க இறைவனிடம் நாம் இடைவிடாமல் செபிக்க வேண்டும் (மத். 9:38). திருச்சபை ஆற்றி வரும் ஒவ்வொரு அர்ப்பணிக்கப்பட்ட முயற்சிகளில் ஒவ்வொரு புதிய தலைமுறையினரும் தெளிவாகவும் துணிவாகவும் கடவுளின் அழைப்பின் உண்மைத்துவத்தை உய்த்துணர வேண்டும். நம் இளைஞர்கள் யுவதிகள் குருத்துவ துறவற உருவாக்கத்தில் பங்கெடுத்து உருவாக்கம் பெற நாம் அவர்களுக்காக செபிக்க வேண்டும். ஆயர் மாமன்றத்தின் திருத்தூதுமடல் 'Pastores Dabo Vobis" எண் 02ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு "எதிர்கால குருத்துவ உருவாக்கம் மறைமாவட்ட குருக்கள் துறவற குருக்கள் அவர்களின் பணியில் பரிசுத்த வாழ்வும் பங்குதள அர்ப்பணத்தில் தம்மை புதுப்பிப்பவர்களாகவும் இருக்க வேண்டும்".

மிகவும் முக்கியமான இன்றைய நாளில் "இறை அழைத்தல் ஞாயிறு 2018" குருத்துவத்தின் மேன்மையையும் குருத்துவம் ஓர் கொடை என்பதையும் நாம்....

15



இலங்கை அன்னையின் தேசிய குருமடம் அம்பிட்டிய கண்டி
1893ம் ஆண்டு பாப்பரசர் குருமடமாக ஆரம்பிக்கப்பட்டு 1955ம் ஆண்டு இலங்கை அன்னையின் தேசிய குருமடமாக உருவாக்கப்பட்டது.




புனித சவேரியார் குருமடம், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்
ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு 1980



களுத்துறை திரு இருதய ஆண்டவர் இடைநிலை குருமடம்
உருவாக்கப்பட்ட ஆண்டு 1979

**குருத்துவ துறவற இறையழைத்தல்களுக்காக செபிப்போம்!**

**நற்செய்திக்காக தம் வாழ்வை தியாகம் செய்திட உங்கள் மகன்மாரையும் மகள்மாரையும் ஊக்குவியுங்கள்!**

**ஆன்மீக ரீதியாகவும் பொருள் ரீதியாகவும் உருவாக்கலின் இல்லங்களுக்கு உதவுங்கள்!**

தொடர்புகளுக்கு : அருட்பணி. இயக்குனர், தேசிய குருமடம், அம்பிட்டிய
Email: nsakandy@sltnet.lk
Web:www.nationalseminarysrilanka.org







## திருத்தூதர் பணிகள் 15-28 அதிகாரங்கள்

01. பூங்காற்று வந்தது. திடீரென அது பேய்க் காற்றாய் மாறியது. கலக்கம் வந்தது. நடுக்கம் வந்தது. பவுல் வந்தக் கப்பலையும் உடைத்துப்போட்டது. அது என்னக் காற்று?

02. தீவு ஒன்று வந்தது. நல்ல மனம் கொண்டது. நன்கொடைகள் தந்தது. பாச மழைப் பொழிந்தது. பவுலை தெய்வம் என்றது அது எந்தத் தீவு?

03. நிலநடுக்கம் வந்தது சிறைக்கூடம் அதிர்ந்தது சிறைக் கதவுத் திறந்தது தற்கொலைக்கு துணிந்தது அவன் யார்?

04. அடிமைப் பெண்ணவள் குறிசொல்லி வருமானத்தைக் கொடுப்பவள். கூவி உண்மையைச் சொன்னாள். இவரால் ஆவி நீங்கப்பட்டவள். அவர் யார்? அவள் யார்?

05. மூன்றெழுத்து உடையவர் வியாபாரத்தில் கெட்டி நம்பிக்கையுள்ள மகராசி ஊழியர்களை உபசரித்த சேவகி. உள்ளம் திறந்த உத்தமி. இவள் யார்?


## திருப்பலியின் செயற்பாடுகள்

- **எழுந்து நிற்பது** - உயிர்த்த இயேசுவுடன் நாமும் இணைந்தவர்கள் என்பதன் அடையாளம்.
- **அமர்வது** - மனதை அலைய விடாமல், தியான உள்ளத்தோடு இறைவார்த்தையையும் அதன் விளக்கங்களையும் கேட்க.
- **மண்டியிடுதல்** - இறைவனுக்கு முன் நாம் சாதாரணமானவர்கள் என்பதை குறிக்கிறது.
- **தலை வணங்குதல்** - நமது தகுதியற்ற நிலையை உணரவும், இறைவனை ஆராதிக்கவும்.
- **பவனி** - இறைவனை நோக்கிச் செல்கிறோம் என்பதை காட்ட.
- **கரங்களைக் குவித்தல்** - நாம் இறைவனுடன் இணைந்துள்ளோம் என்பதையும், நமது மரியாதையையும் காட்டுகிறது.
- **நெஞ்சில் அறைதல்** - நாம் பாவிகள் என்பதை உணர்ந்து அதற்காக மனவருத்தப்படுகிறோம் என்பதை குறிக்க.
- **சமாதானத்தை அறிவித்தல்** - ஒருவரை ஒருவர் மதித்து ஏற்றுக்கொண்டு, மன்னித்து, அன்பு உறவில் வாழத் தயாராக இருக்கிறோம் என்பதன் வெளி அடையாளம்.

## 3. திருமறைப் பழக்கங்கள்.

### 17. மாதத்தில் வருவோரை நினைவுகூரும்

| | | |
|---|---|---|
| தை | : 01. | அன்னை மரியா இறைவனின் தாய் விழா |
| | 20. | புனித செபஸ்தியார் விழா |
| மாசி | : 02. | இயேசுவைக் காணிக்கையாக்கிய விழா |
| | 11. | லூர்து அன்னை விழா<br>இயேசுவின் திருழுமுக்குப் பெருவிழா<br>(திருக்காட்சி விழாவுக்குப் பின்வரும் ஞாயிறு) |
| பங்குனி | : 19. | புனித யோசேப்பு, மரியாவின் கணவர் விழா |
| | 25. | இயேசுவின் மனித அவதார விழா |
| சித்திரை | : | பாஸ்கா மாதம் |
| வைகாசி | : | மாதாவின் மாதம் |
| | 31. | மரியா எலிசபேத்து சந்திப்பு விழா |
| | | திருத்துவத் திருவிழா (தூய ஆவியாரின் விழாவுக்குப் பின்வரும் ஞாயிறு) |
| | | தேவ நற்கருணைத் திருவிழா (திருத்துவத் திருவிழாவிற்கு பின்வரும் ஞாயிறு) |
| | | திரு இருதயத் திருவிழா (தேவநற்கருணைத் திருவிழாவிற்குப் பின்வரும் வெள்ளி) |
| | | மாசில்லா திரு இருதய திருவிழா (திரு இருதயத் திருவிழாவிற்கு அடுத்த நாள்) |
| ஆனி | : | இயேசுவின் திரு இருதய வணக்க மாதம் |
| | 24. | திருமுழுக்கு யோவானின் பிறப்பு விழா |
| | 29. | திருத்தூதர் பேதுரு, பாவிலு விழா |
| ஆடி | : 02. | மருதமடுத் திருப்பதி திருவழிா |
| | 16. | கார்மேல் விழா |
| ஆவணி | : 06. | இயேசு உருமாறிய விழா |
| | 15. | அன்னையின் விண்ணேற்பு விழா |
| | 22. | மரியா, விண்ணக மண்ணக அரசி விழா |
| புரட்டாசி | : 08. | இறையன்னையின் பிறப்பு விழா |
| | 15. | வியாகுல அன்னை விழா |
| ஐப்பசி | : 07. | திருச் செபமாலை வணக்க மாதம் |
| கார்த்திகை | : 01. | இறந்தோர் நினைவு |
| | 02. | அனைத்துப் புனிதர்கள் விழா |
| மார்கழி | : 08. | அன்னையின் மாசில்லா உற்பவ விழா |
| | 25. | இயேசுவின் பிறப்பு விழா |



**தொடரும்**

**அருட்தந்தை அ. பிலிப் அடிகளார் (ivDei)**

# பகிர்வோம்

பணக்காரன் ஒருவன் இயேசுவின் போதனைகளில் சிறந்ததும், முக்கியமானதுமான பகிர்தல் என்ற வார்த்தையினால் மனமுடைந்து போனான். அதனால் மனம் மாற்றம் வேண்டும் என்று இறைவனிடம் கெஞ்சி மன்றாடினான். அதே வேளையில் அந்த இறைவார்த்தையை ஏற்றுக் கொள்ளவும் முடியாமல் தவித்தான். அவனுடைய வேதனையை அறிந்த வானதூதர் "ஏன் இவ்வளவு துயருற்றுக் கிடக்கிறாய்" என்று கேட்டார். அதற்கு அந்த பணக்காரன் "என்னால் அந்த இறைவார்த்தையை ஏற்க முடியவில்லை. நான் எவ்வளவு முறை தந்துக் கொண்டே இருக்க வேண்டும். இதற்கு முடிவே இல்லையா?' என்றான். "இதற்காகவா இவ்வளவு வருந்துகிறாய்? கவலைப்பட வேண்டாம். நீயும் மற்றவர்களுக்குக் கொடுப்பதை நிறுத்திவிடலாம்" என்றார் வானதூதர். உடனே அந்த பணக்காரன் மகிழ்ச்சியுடன் "எப்போது?" என்று கேட்க, வானதூதர், "கடவுள் உனக்கு கொடுப்பதை நிறுத்தும்போது, நீயும் மற்றவர்க்கு கொடுப்பதை நிறுத்தி விடலாம்" என்றார்.



## கொடுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும்

## அன்றாடத் தேவைகள்

**அனுதின மண்ணக உணவைத் தரும் அப்பா அம்மாவின் அன்பு**

**அனுதின விண்ணக உணவைத் தரும் இயேசுவின் அன்பு**



***இவ்விரண்டுமே கிறிஸ்தவர்களின் அன்றாட அத்தியாவசியங்கள்.***

## வர்ணம் தீட்டுக



# இறைவார்த்தை வழியில் இளையோரும் இணையமும்

ஒருவருடைய வாழ்க்கையில் மிகவும் கடினமான, சவாலான காலம் எது? குழந்தைப் பருவமா? இளமைப் பருவமா? வாலிபமா? வயோதிபமா? என்ற கேள்விக்கு வயோதிபம் என்ற பதிலை வெகுவாக எதிர்பார்க்கலாம் ஆனால் விவிலியம் மாற்றுப் பதிலைத் தருகிறது. இளமைப் பருவம் தான் அபாயகரமானதாகவும், சவாலானதாகவும் என்று நமக்கு விவிலியம் எடுத்துரைக்கிறது. மனிதரின் இதய சிந்தனை இளமையிலிருந்தே தீமையை உருவாக்குகின்றது என்று (தொ.நூ 8:21) எடுத்துரைக்கின்றது. பவுலடியாரும் “நீ இளவயதின் இச்சைகளை விட்டு ஓடிவிடு” (2 திமொ. 2:22) என்கின்ற அறிவுரையைக் கொடுக்கின்றார். இருப்பினும் இறைவன் இந்த இளமைக்குள் இருக்கும் வீரியத்தையும், மிகுந்த சக்தியையும், எதிர்காலத்தை உருவாக்கும் தொலைநோக்கு பார்வையையும் கண்ணோக்குகின்றார். ஆகையால்தான் தன்னுடைய இளமையைத்



தேவையற்ற நிலைகளில் செலவழித்த சாலமோன் கூறுகின்றார். “உன்னைப்படைத்தவரை உன் இளமைப் பருவத்தில் மறவாதே. ‘வாழ்க்கை எனக்கு இன்பம் தரவில்லையே’ என்று நீ சொல்லக்கூடிய துயர நாள்களும் ஆண்டுகளும் வருமுன் அவரை உள்ளத்தில் நினை” (ச.உ.12:1).

இன்றைய இளைய தலைமுறை அதிகம் செலவிடும் நேரம் இணையத்தளம் மட்டுமே. இளைஞர்கள் தங்கள் நண்பர்களுடன் செலவழிக்கும் மிகப்பெரிய இன்பத்தளமாக இன்றைய இணையத்தளம் மாறி இருக்கின்றது. நேரில் சந்தித்து, பேசி, சிரித்து அன்று உணர்வுகளையும் பரிமாறிக்கொள்ளும் கூட்டங்கள் இன்று Whatsapp, Facebook, Twitter, Instagram போன்றவற்றில் உணர்வுகளைப் பகிர்ந்துகொள்ளத் தொடங்கியாயிற்று. இணையத்தளத்தில் எப்பொழுதும் வாய்ப்புகளும் உண்டு வலிகளும் உண்டு. ஆனால் இன்றைய இளைஞர்கள் கையில் இருக்கும் இணையத்தளம் ஒரு மாபெரும் விஞ்ஞான வஞ்ராயுதம். நல்லவைகளைத் தாங்கிப் பிடிக்கக்கூடிய தூண்களாகவும், தீமைகளை சுட்டெரிக்கும் தீப்பந்தங்களாகவும் தகவல் தொடர்பு சாதனங்கள் மாற வேண்டும் என்பதுதான் அனைவரின் விருப்பமும், எண்ணமுமாக இருக்கின்றது. கடவுளை மையமாக வைத்து இணையமும் இளைஞரும் செயல்படும்போது அதற்கான பலன்களும் கடலளவு இருக்கும்.

பழைய ஏற்பாட்டில் கோலியாத்தை வீழ்த்திய இளைஞன் தாவீதின் வீரம் கடவுளை அடித்தளமாகக் கொண்டது (1 சாமு. 17:48-51). நல்லவற்றிற்கும் நீதிக்கும் தலைவணங்கிய இளைஞன் யோசேப்பு எகிப்தில் உயரிய இடத்திற்குச் சென்றது கடவுளின் அருளால் தான் (தொ.நூ 39:20-23). தானியேலும்





அவரது நண்பர்களும் சிங்கத்தின் வாயினின்று தப்பியது கடவுள் கொடுத்த ஞானத்தாலும் விவேகத்தாலும் தான் (தானி. 1:17). நாமான் தொழுநோயால் அவதியுற்றபோது இறைவாக்கினர் எலியாவைப் பற்றி நாமானுக்கு எடுத்துக் கூறிய இளம் பணிப்பெண்ணின் கனிவும் கடவுளின் கொடையே. புதிய ஏற்பாட்டில் 5000 பேருக்கு இயேசு உணவளித்தபோது 5 ரொட்டியையும் 2 மீனையும் தியாகம் செய்ய வந்த இளைஞனுக்கு அந்த தியாகத் தீயை மூட்டியது கடவுளே. ஆக இளைஞர்களின் வீரமாக, நீதியாக, விவேகமாக, ஞானமாக, கனிவாக, தியாகமாக இருந்து அவர்களை வழிநடத்திக் காத்து வந்தது கடவுளே.

அன்றைய இயேசு வலைகளை விடுத்து அவரைப் பின்பற்றச் சொன்னார். ஆனால் நவீன நாயகன் இயேசு வலைதளங்களைக் கொண்டு மனிதர்களைப் பிடிக்க அழைப்பு விடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. இத்தகைய இளமையும், இணையமும், இறை வார்த்தையோடு இணையும் போது 30 மடங்கு 60 மடங்கு 100 மடங்கு பலன் தரக்கூடிய வீரியமிக்க விதைகளை விதைக்கின்றவர்களாக இளைஞர்கள் மாறுவதற்கு மாற்றுவதற்கு வாய்ப்புகள் அதிகம். அத்தகைய இறைவார்தைகளை விதைக்கக்கூடிய விவசாயிகளாக மாறுவோம். அறுவடையோ மிகுதி வேலையாள்களோ குறைவு என்று விளைச்சலைப் பார்த்துப் பெருமைப்படும் மனதைக் கடவுளுக்குப் பரிசளிப்போம்.

# இறைவாக்கினர்களை அறிவோம்

## 1. இறைவாக்கினர் தானியேல்:

தானியேல் என்னும் பெயருக்கு “இறைவன் என் நடுவர்” (அ) “இறைவன் நீதி வழங்குவார்” என்றுப் பொருள். பாபிலோனிய மன்னன் நெபுகத்நேசர் யோயாக்கிம் அரசனை வென்றபோது அவனால் கி.மு 605ல் அடிமையாக பாபிலோனுக்கு கொண்டுச் செல்லப்பட்ட இளைஞரே தானியேல் இறைவாக்கினர். தானியேலின் இறைவாக்குரைக்கும் பணி பாரசீக மன்னன் சைரஸ் ஆட்சிக்கு வந்த மூன்றாம் ஆண்டுவரை (கி.மு 536) தொடர்ந்தது. எனவே தானியேல் சுமார் 69ஆண்டு காலம் இறைவாக்குரைக்கும் பணியைச் செய்தார். அவர் அடிமையாக அழைத்துச் செல்லப்பட்டபோது 16 வயது இளைஞராக இருந்திருப்பார் என வைத்துக் கொண்டால், அவர் இறைவாக்குரைக்கும் பணியை தனது எண்பத்து ஐந்தாம் வயதுவரை செய்திருக்கக்கூடும்.



## 2. அடையாளங்கள், உருவகங்களை உள்ளடக்கிய வேறுபட்ட இலக்கியம் - தானியேலின் நூல்

(இவ்வகை இலக்கியம் கி.மு 2ஆம் நூற்றாண்டில் உருப்பெற்றதாகக் கூறப்படுகிறது) தானியேலின் நூல் கி.மு 2ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. யூதர்கள் சிரியா இனத்தவரால் துன்புறுத்தப்பட்ட சூழலில், அங்கு நிலவிய ஆபத்தான, அதிர்ச்சியூட்டும் நிகழ்வுகளைக் குறித்து எழுதப்பட்டடுள்ளது. எனவே தானியேலின் நூலை ஏனோக்கின் நூல் வரிசையில் வைத்தனர். ஏனெனில் இந்நூலின் ஆசிரியரின் பெயர் சரியாகத் தெரியாததால், அந்தக் காலத்தில் இருந்த பிரபலமான ஒருவரின் பெயரைப் பெற்றது. தானியேலின் நூல் மாறுபட்ட அடையாளங்களையும், உருவகங்களையும் உள்ளடக்கிய இலக்கிய வகையைச் சார்ந்ததா? என்றக் கேள்வி எழுப்பப்பட்டால் அதற்கு ஆம் என்ற பதிலே பொருந்தும். ஏனெனில் அத்தகைய இலக்கிய வகைகளுக்குரிய நான்கு இலக்கண சாயல்கள் இந்நூலில் காணப்படுகின்றன.

1. போலியான புனைப் பெயரைக் கொண்டிருத்தல்.
2. மீண்டும் எழுதப்பட்ட வரலாற்று செய்திகள்.
3. தனிமனிதத் தீர்மானங்கள், அவற்றின் காரணங்கள்.
4. தொய்வடைந்த ஒழுக்கம்.

ஆனால் தானியேலின் நூல் போலியானது என்றோ, புனைப்பெயரைக் கொண்டது என்றோ கூறிவிட முடியாது. ஏனெனில் இந்த நூல் இறைவாக்குகளடங்கிய நூல் என புதிய ஏற்பாடு ஏற்றுக்கொள்கிறது (மத் 24:15). இந்நூலை எழுதியவர் யார் என்பதில் சில பிரச்சினைகள் இருந்தாலும், கி.மு 5ஆம் நூற்றாண்டுக்கு முன் வரை தானியேல் என்ற பெயரில் மதிப்பிற்குரிய மனிதர்கள் யாரும் காணப்படவில்லை. இந்நூல் மாறுபட்ட இலக்கிய வகையைச் சேர்ந்தது என்பதற்கான பல்வேறு கூறுகளைக் கொண்டிருப்பதுடன், இத்தகைய இலக்கியத்தை

தானியேலின் நண்பர்களும் தங்கள் இறைநம்பிக்கையில், தளராத நம்பிக்கையுடன் இருந்து அதற்கு தண்டனையாக அவர்கள் தீச்சூளையில் போடப்பட்டபோதிலும், அவர்கள் கடவுளால் உயிருடன் காப்பாற்றப்பட்டனர்.

சாத்ராக்கும் அவருடைய நண்பர்களும் தீச்சூளையிலிருந்துக் காப்பாற்றப்பட்டதைக் கண்டப் பின்பும், நெபுகத்னேசர் நல்ல படிப்பினையைக் கற்றுக்-கொள்ளவில்லை. மாறாக, தான் தனது சொந்த வலிமையினால் மட்டுமே வாழ்ந்துக் கொண்டிருக்கும் மன்னன் என்ற எண்ணங்கொண்டு வாழ்ந்தார். எனவே கடவுள் அவருக்குப் பாடம் புகட்ட எண்ணி அவரை திடீரென மனித சமுதாயத்திலிருந்து விரட்டியடித்தார். மனம் பேதலித்தவராக நான்கு கால்களால் நடக்கும் விலங்கைப்போல நடந்து, புல்லைத் தின்று காடுகள், பாலை நிலங்களில் ஏழாண்டு காலம் மனிதர் என்ற உணர்வே இன்றி அலைந்துத் திரிந்தார். குறித்த காலம் வந்தபோது நெபுகத்னேசர் பகுத்தறிவுப் பெற்றவராக எல்லாம் வல்லக் கடவுளை, அவரே அனைத்திலும் மேலானவர் என்று ஏற்றுக்கொண்டு அவரை போற்றினார்.

அதன்பின்னர் நெபுகத்னேசர் யாவே கடவுளைப் போற்றி, அவரில் பக்திக் கொண்டவராக, அவரே உண்மைக் கடவுள் என அறிக்கையிட்டுக் கொண்டு வாழ்ந்தார். ஆனால், அவருக்குப்பின் அரியனை ஏறிய அவரது மகன் பெல்சாட்சர் அனைத்திலும் முற்றிலுமாக மாறுபட்டவராக விளங்கினார். பெல்சாட்சரும் அவரது மனைவியரும், வைப்பாட்டியர், மற்றும் அரண்மனை உயர்குடி விருந்தினர்களும் நெபுகத்னேசர் எருசலேம் தேவாலயத்திலிருந்துக் கொண்டு வந்திருந்த வழிபாட்டில் பயன்படுத்தப்பட்ட புனிதப் பொருட்களான பொன், வெள்ளிக் கிண்ணங்களை மது அருந்தப் பயன்படுத்தினர்.

# இறைவாக்கினர் தானியேல் நூலுக்கான வரலாற்றுப் பின்னணி

எபிரேயத் திருமறையில் தானியேலின் நூல் இறைவாக்கினர்களின் நூல்கள் வரிசையில் இடம் பெற்றிருக்காது. அது வரலாற்று நூல்களின் தொகுப்பின் கீழ் இடம்பெற்றிருக்கும். ஏனெனில் மசோரேத்துக்கள் இவர் வழக்கமான இறைவாக்கினர்களுக்கான அழைப்பைப் பெறாது அப்பணியை செய்ததால் அவரை இறைவா-க்கினராக ஏற்கவில்லை. மாறாக, அவரை ஒரு அரசவைப் பணியாளராகவே பார்த்தனர். தானியேல் நூலில் உள்ள பெரும்பகுதிகள் வரலாற்று நிகழ்வுகளைப் பற்றியதாகவே உள்ளன. இறைவாக்குகள் அதிகமாகக் காணப்பட-வில்லை. ஆனால் கிரேக்க மொழிபெயர்ப்பில் - எசாயா, எரேமியா, எசேக்கியேல் ஆகியோருடன் தானியேலும் பெரிய இறைவாக்கினருள் ஒருவராகக் கருதப்படுகிறார். விவிலியத்தின் தமிழ் மொழிப்பெயர்ப்பு கிரேக்க மொழிபெயர்ப்பையொட்டியே எழுதப்பட்டுள்ளது.

ஆர்வத்துடன் பின்பற்றி எழுதுவதற்கு பின்னாளில் வந்த நூலாசிரியர்களுக்கு இந்நூல் ஒரு முதல் படியாக (அ) முன்னோடியாக அமைந்தது.

## 3. இறைவாக்கினர் தானியேலின் நூல் தரும் செய்தி:

தானியேல் இறைவாக்கினரின் நூல் பாபிலோனை ஆட்சிபுரிந்த அரசன் நெபுகத்னேசர் எருசலேமை முற்றுக்-கையிட்டதுடன் தொடங்குகிறது. அந்நூல் எருசலேமி-லிருந்த பிரமுகர்கள் நாடு கடத்தப்பட்டதுடன் முடிவடைகிறது. தானியேலும் அவரது நண்பர்களான சாத்ராக்கு, மேசாக்கு, ஆபேத்நெகோ ஆகியோரும் அரசன் நெபுகத்னேசரின் எதிர்பார்ப்புகளுக்கும், தங்களது சமயம் சார்ந்த சட்ட திட்டங்களைக் கடைப்பிடிப்பதற்குமிடையில் மிகுந்த சிரமத்துடன் பயணித்துக் கொண்டிருந்தனர். தானியேல் தனது சமயத்திற்கடுத்தக் கடமைகளை நிறைவேற்றுவதில் உறுதியாக நிலைத்து நின்றார்.

அப்போது ஒரு கை சுவற்றிலிருந்துத் தோன்றி சில வார்த்தைகளை எழுதியது. தானியேல் இறைவாக்கினர் அவற்றைப் படித்து அவற்றின் பொருளை அவருக்கு உணர்த்தினார். அதாவது அவர் கடவுளுக்கு எதிரான செயல்களில் ஈடுபட்டதால் அவரது அரசு வீழ்ச்சியடையும் எனக் கூறினார். அவ்வாறே பெல்சாட்சர் அன்றைய இரவில் கொல்லப்பட்டார். அவரது அரசை மேதியரும், பாரசீகரும் பிரித்துக் கொண்டனர்.

மேதிய அரசனான தாரியு ஆட்சி செய்து கொண்டிருந்தபோது அவரது ஆளுநர்கள் தானியேலுக்கு எதிராக சதி திட்டம் தீட்டினர். அதன்படி தாரியு மன்னனைத் தவிர வேறு எந்த தெய்வத்தையோ, மனிதரையோ வழிபடக்கூடாது என்ற அவசர சட்டம் ஒன்றை பிறப்பிக்க வலியுறுத்தி அதை நடைமுறைப்படுத்தினர். ஆனால் தானியேல் இந்த சட்டத்திற்கு அஞ்சாமல் எப்போதும் போல ஒருநாளில் மூன்று...

15

# வத்திக்கானில் புனித கிரகோரி திருச்சுரூபம் – திருத்தந்தை திறப்பு

அர்மேனிய மக்களின் விசுவாசத்திற்கு அடித்தளமிட்ட நரேக் நகர் புனித கிரகோரியின் திருச்சுரூபம் வத்திக்கானில் நிறுவப்படுவது தான் விரும்பும் ஓர் எண்ணம் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 2016ம் ஆண்டு, அந்நாட்டிற்கு சென்ற வேளையில் கூறினார்.

திருத்தந்தையின் இவ்விருப்பம் நிறைவேறும் வகையில், வத்திக்கான் பாப்பிறை தோட்டத்தில் நிறுவப்பட்டிருந்த புனித கிரகோரியின் வெண்கல உருவச்சிலையை, ஏப்ரல் 5, மதியம் 12 மணியளவில், திருத்தந்தை அவர்கள் திறந்து வைத்தார்.

கீழை நாட்டு கலாச்சாரத்தில் ஊன்றியுள்ள அர்மேனியாவிற்கும், மேற்கித்திய கலாச்சாரத்தில் ஊன்றியுள்ள ஐரோப்பாவிற்கும் ஒரு பாலமாக நரேக் நகர் புனித கிரகோரி விளங்குவதால், அவரது உருவச்சிலை வத்திக்கானில் நிறுவப்படுவது பொருளுள்ள நிகழ்வு என்று, திருப்பீடத்தின் அர்மேனிய தூதர் Mikayel Minasyan அவர்கள் செய்தியாளர்களிடம் கூறினார்.

10வது நூற்றாண்டில் வாழ்ந்த நரேக் நகர் புனித கிரகோரியை, திருஅவையின் மறைவல்லுனர்களில் ஒருவர் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள்,



2015ம் ஆண்டு ஏப்ரல் மாதம் அறிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

திருத்தூதர்களான பார்த்தலோமேயு மற்றும் ததேயு ஆகியோரால் கிறிஸ்துவுக்கு அறிமுகமான அர்மேனிய நாடு, தன்னையே ஒரு கிறிஸ்தவ நாடென்று அறிவித்த மிகப் பழம்பெரும் நாடாக விளங்குகிறது.




# இளையோரே, இயேசுவின் இறையாட்சி கனவை நனவாக்கத் தயாரா?



நம் மத்தியில் இருக்கும் இறைவனையும், சகோதரர், சகோதரிகளையும் அன்புகூர அழைக்கும், இயேசுவின் இறையாட்சி கனவை நனவாக்குங்கள் என்று, இத்தாலிய இளையோரிடம் கூறினார், திருத்தந்தை பிரான்சிஸ்.

இத்தாலியின் பிரேஷா மறைமாவட்டத்தின், ஏறத்தாழ மூவாயிரம் இளையோரை, அருளாளர் திருத்தந்தை ஆறாம் பவுல் அரங்கத்தில் சந்தித்து உரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ், வீட்டுப்பாடம் ஒன்றையும் இளையோருக்கு அளித்தார்.

ஜொவான்னி பத்திஸ்தா மொந்தினி என்ற இயற்பெயரைக் கொண்ட, அருளாளர் திருத்தந்தை ஆறாம் பவுல் பிறந்த பிரேஷா மறைமாவட்டத்தின் இளையோரிடம், அத்திருத்தந்தையின் இளமைக்கால வாழ்வு மற்றும் அவரின் கனவுகள் பற்றிச் சிந்திக்கும் வீட்டுப்பாடத்தை அளித்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

திருஅவை மாறுவதற்கு இளையோர் உதவ முடியும் என, ஆயர்கள் உண்மையிலே நம்புகின்றனரா என, ஓர் இளையவர் கேள்வி எழுப்பினார், ஆயர்கள் இளையோருக்குச் செவிமடுத்து திருஅவையில் ஏதாவது மாற்றத்தைக் கொண்டுவர விருப்பமாய் இருந்தால், இளையோராகிய நீங்கள், இயேசுவுக்குச் செவிமடுத்து, உங்களை மாற்றுவதற்குத் தயாரா? என்று, இப்போது நான் கேட்கிறேன் எனக் கூறினார், திருத்தந்தை. இயேசுவை நம்புகின்றவர்களுக்கு வியத்தகு அனுபவங்களை அவர் கொடுக்கின்றார் எனவும், விவிலியத்தை வாசிக்கவும், திருப்பலியில் பங்கு பெறவும் இளையோருக்கு அழைப்பு விடுத்த திருத்தந்தை, இளம் வயதில் ஏராளமான கனவுகளுடன் வாழ்ந்த புனித பிரான்சிஸ் அசிசி, புனித தமியான் போன்றவர்கள் வாழ்வு பற்றியும் எடுத்துரைத்தார்.

வருகின்ற ஐப்பசியில் இளையோர் பற்றி நடைபெறவிருக்கும் உலக ஆயர்கள் மாமன்றம் பற்றியும் கூறியத் திருத்தந்தை, தனக்காகச் செபிக்க மறக்க வேண்டாம் எனவும் கேட்டுக்கொண்டார்.

# மன்னிப்பதில் சோர்வுறாத இறைவனுக்கு கதவுகளை திறந்து வையுங்கள்

மன்னிப்பதில் சோர்வுறாத இறைவனின் இரக்கத்தை நாம் அடைய வேண்டுமெனில், அவருக்காக நம் கதவுகள் எப்போதும் திறந்தேயிருக்கவேண்டும் என, இறை இரக்கத்தின் ஞாயிறையொட்டி உரோம் நகர் புனித பேதுரு வளாகத்தில் திருப்பலி நிறைவேற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறினார்.

நம் பாவங்களுக்காக மனம் வருந்தி வெட்கமுறுவது நல்லது, ஆனால், நாம் எது குறித்தும் அவமான உணர்வைக் கொள்ளாமல் இருப்பது பெரும் துன்பம், என தன் மறையுரையில் குறிப்பிட்ட திருத்தந்தை, இயேசுவைக் கண்டால் விசுவாசம் கொண்ட புனித தோமாவைப் பற்றி கூறும் வாசகத்தை சுட்டிக்காட்டி, நாமும் இயேசுவின் காயங்கள் வழியாக அவரைக் கண்டுகொள்ளவேண்டும் என்றார்.

தன்னை மறுதலித்தவரையும், தன்னை விட்டுவிட்டு ஓடியவர்களையும் இயேசு மன்னித்ததைக் காணும் நாம், மன்னிப்பின் முக்கியத்துவத்தை உணர்வோம் என்ற அழைப்பையும் முன் வைத்தார் திருத்தந்தை.

கிறிஸ்தவர்கள் குறித்து நாம் பெருமைப்பட்டு, நம் விசுவாசத்தின் உன்னத மதிப்பீடுகள் குறித்து எடுத்துரைத்தாலும், அவரின் சீடர்கள் போன்று, இயேசுவைக் கண்டு, அவரின் அன்பைத் தொடும்போதுதான், அமைதியையும் மகிழ்வையும் கண்டுகொள்வோம் எனவும் கூறினார் திருத்தந்தை.




இயேசுவின் அன்பை நாம் கண்டுகொள்ளவேண்டுமெனில் முதலில் நம் பாவங்கள் மன்னிக்கப்பட, நம்மையே நாம் திறந்தவர்களாக செயல்படவேண்டும் என்ற அழைப்பையும் முன்வைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நம் பாவங்கள் குறித்து நாம் வெட்கப்படுவதே முதல் படியாகும், ஆனால் இன்றைய உலகில் எது குறித்தும் வெட்கப்படாத ஒரு நிலையே பெரும் தீமையாக உள்ளது என மேலும் கூறினார்.

# கலந்துரையாடல் ஒன்றே அமைதி நோக்கி இட்டுச் செல்லும்



சிரியாவின் Douma நகரில் அரசுப்படைகளின் குண்டுவீச்சால், எண்ணற்ற பெண்களும் குழந்தைகளும் பலியாகியுள்ளது, மற்றும், பாதிக்கப்பட்டுள்ளது குறித்து, தன் ஆழ்ந்த கவலையையும், கண்டனத்தையும் வெளியிட்டார், திருத்தந்தை பிரான்சிஸ்.

இறந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களுக்காகவும், பாதிக்கப்பட்டு துன்புறும் குடும்பங்களுக்காகவும் செபிப்போம் என்ற அழைப்பை தன் ஞாயிறு அல்லேலூயா வாழ்த்தொலி உரையின் இறுதியில் முன்வைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உலகில் நல்ல போர் என்றோ, கெட்ட போர் என்றோ எதுவும் இல்லை, ஆயுதம் தாங்காத அப்பாவி மக்களுக்கு எதிராக அழிவுதரும் ஆயுதங்களை பயன்படுத்துவதை நியாயப்படுத்த எதனாலும் முடியாது எனவும் கூறினார்.

சிரியா அரசுத் துருப்புக்கள், வேதியல் ஆயுதங்களைப் பயன்படுத்தின என்ற செய்திகளைத் தொடர்ந்து, இத்தகைய கண்டனத்தை வெளியிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மரணத்தையும், அழிவையும் தராத அமைதியை நோக்கி இட்டுச் செல்லும் ஒரே வழியான கலந்துரையாடலை, அரசியல், மற்றும், இராணுவத் தலைவர்கள் தேர்ந்துகொள்ள வேண்டும் என, இறைவனை நோக்கி வேண்டுவோம் என்ற விண்ணப்பத்தையும் முன்வைத்தார்.

# புதிய தலைமுறைகளுக்கு நற்செய்தியை எடுத்துச்செல்லும் பணி

புதிய தலைமுறைகளுக்கு நற்செய்தியை எடுத்துச்செல்லும் பணியில், நற்செய்தி அறிவிப்புப்பணி பேராயமும், உர்பானியா பல்கலைக் கழகமும் இணைந்து, புதிய உத்வேகத்துடன் செயலாற்றும் என்று, திருப்பீட உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

சித்திரை 9, கொண்டாடப்பட்ட, கிறிஸ்து பிறப்பு அறிவிப்பு பெருவிழா, உர்பானியா பல்கலைக் கழகத்தின் முக்கியத் திருவிழாவாக அமைந்ததையொட்டி, இப்பல்கலைக் கழகத்தின் தலைவரும், நற்செய்தி அறிவிப்புப்பணி பேராயத்தின் தலைவருமான கர்தினால் பெர்னாண்டோ பிலோனி அவர்கள் வழங்கிய ஓர் உரையில் இவ்வாறு கூறினார்.

கட்டுப்பாடின்றி பரவிவரும் தொழில்நுட்பங்கள், மனிதர்களை வெறும் எண்ணிக்கைகளாக மாற்றிவரும் உலக மயமாக்கல் போக்கிற்கு மாற்றாக, மனிதர்களை மாண்புறச் செய்யும் நற்செய்தி அறிவிப்புப் பணியை நாம் மேற்கொள்ள அழைக்கப்பட்டுள்ளோம் என்று கர்தினால் பிலோனி அவர்கள் தன் உரையில் வலியுறுத்தினார்.



இளையோரை மையப்படுத்தி இவ்வாண்டு வத்திக்கானில் நடைபெறவிருக்கும் உலக ஆயர்கள் மாமன்றத்தை மனதில் கொண்டு, "தன்னிலிருந்து வெளியேச் சென்று மறைப்பணியாற்றும் திருஅவைக்காக இளையோர்" என்ற மையக்கருத்துடன், இவ்விழா, உர்பானியா பல்கலைக் கழகத்தில் சிறப்பிக்கப்பட்டதென்று பீதேஸ் செய்தி கூறியுள்ளது.




தொகுப்பு : ஓய்வு பெற்ற பேராயர்
அதிமேதகு ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகை
கொழும்பு உயர் மறைமாவட்டம்



கத்தோலிக்க குடும்ப மறைக்கல்வி
Catholic Family Catechism

**85. பரிசுத்த ஆவியின் ஏழு கொடைகளும் எவை?**

1. ஞானம் 2. புத்தி 3. அறிவு
4. விமரிசை 5. பக்தி 6. திடம்
7. தேவபயம்

இக்கொடைகள் இறைவனுக்குகந்த வழிகளில் வாழ உதவுகின்றன. இறைவனின் சித்தப்படி, புனிதமாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ எமக்கு உதவுகிறன்றது. பரிசுத்த ஆவியின் ஏவுதல்படி வாழ்பவர்கள் ஆவியின் கொடைகளை மகிழ்வுடன் அனுபவிப்பார்கள்.

**86. பரிசுத்த ஆவியின் கனிகளும் எவை?**

பரிசுத்த ஆவியின் கனிகள் பன்னிரெண்டு

1. பரம அன்பு 2. மகிழ்ச்சி
3. அமைதி 4. பொறுமை
5. இரக்கம் 6. நன்னயம்
7. சகிப்பு 8. சாந்தம்
9. விசுவாசம் 10. தன்னடக்கம்
11. இச்சையடக்கம் 12. நிறைகற்பு

ஊனியல்பின் செயல்கள் யாவருக்கும் தெளிவாய்த் தெரியும். அவை பரத்தைமை, கெட்ட நடத்தை, காமவெறி, சிலைவழிபாடு, பில்லி சூனியம், பகைமை, சண்டை, சச்சரவு, பொறாமை, சீற்றம், கட்சி மனப்பான்மை, பிரிவினை, பிளவு, அழுக்காறு, குடிவெறி, களியாட்டம் முதலியவை ஆகும். இத்தகையவற்றில் ஈடுபடுவோர் இறையாட்சியை உரிமைப் பேறாக அடைவதில்லை என்று நான் ஏற்கெனவே சொன்னேன். அதையே இப்போதும் மீண்டும் சொல்கிறேன். ஆனால் தூய ஆவியின் கனியோ, அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் என்பவை ஆகும். இவையுள்ள இடத்தில் திருச்சட்டத்திற்கு இடமில்லை. (கலா 5:19-23)

**87. நாம் எவ்வாறு பரிசுத்த ஆவியானவருக்கு மதிப்புக் கொடுக்கவேண்டும்?**

பிதாவாகிய கடவுளையும், இறைமகனையும் வழிபடுவதுபோல், பரிசுத்த ஆவியையும் நாம் மதிக்கவும், வழிபடவும் வேண்டும். நாம் அவருடைய வழிநடத்தலுக்காகவும், வெளிச்சத்திற்கும் வேண்டி அடிக்கடி செபிக்க வேண்டும்.

**88. கத்தோலிக்க திருச்சபை என்றால் என்ன?**

திருமுழுக்கினால் ஒன்றுபட்டு, ஒரே விசுவாசம், ஒரே அருட்சாதனங்கள் ஒரு திவ்விய நற்கருணையில் பந்தியமர்ந்து, கிறிஸ்துவின் முதற்குரு பாப்பானவரின் வழிநடத்தலின்படி வாழும் விசுவாசிகளின் சபையே கத்தோலிக்க சபையாகும்.

வாழ்வு முடிவு பரியந்தம் கிறிஸ்து இயேசுவின் கடமைகளை வெளிப்படுத்தி வாழும் பணி கத்தோலிக்க திருச்சபைக்கு உரிய தூய பொறுப்பு. கிறிஸ்துவின் நன்மைத்தனத்தை திருச்சபை உலகுக்கு வெளிப்படுத்த வேண்டும். மனிதர்கள் திருச்சபையின் கிறிஸ்துவின் பிரசன்னத்தைக் காண வேண்டும்.

இரண்டாவது வத்திக்கான் சங்கத்திற்குப் பின்பு திருச்சபையானது அருட்சாதனம் என விபரிக்கப்பட்டது. அதாவது கிறிஸ்துவுக்கு அடையாளமாய் கருதப்பட்டது. இந்த வார்த்தை தவறுக்கு இட்டுச் செல்லலாம். மக்கள் விசேஷமாய், சிறுவர்கள் "எட்டு அருட்சாதனங்கள்" உள்ளன என கேட்கலாம். ஆகையால் பதில் அல்லது அடையாளம் என்னும் சொல் மிகவும் பொருத்தமானது, பாதுகாப்புமானது. கிறிஸ்து இயேசு திருச்சபைக்கு நற்செய்தியை எல்லா இனத்திற்கும் போதிக்கும் பணியைக் கொடுத்து, திருச்சபையை விசுவாசத்திலும், சத்தியங்களிலும் தவறாது பாதுகாப்பேன் என்று கூறியுள்ளார்.

மேலோட்டமாக நோக்கும்போது திருச்சபையானது ஏனைய சபைகளைப் போன்றது. ஆனால் திருச்சபையின் நோக்கம். ஆன்மாவைச் சார்ந்ததும். இயற்கைக்கு அப்பாற்பட்டதுமாயுள்ளது.

அதுதான் ஆன்மாவிற்கு ஈடேற்றம் இயேசுக்கிறிஸ்துவே, திருச்சபையின் ஸ்தாபகரும் மறைமுகமான தலைவருமாயிருக்கின்றார். அதனுடைய காணக்கூடிய தலைவர், உரோமபுரி ஆயர் பேதுருவின் வழித்தோன்றல், கிறிஸ்துவினால் திருச்சபையின் தலைவராக நியமிக்கப்பட்டவர். நாம் அவரைப் திருத்தந்தை என்று அழைக்கின்றோம். கருத்து அப்பா அவரிடமே திருச்சபையை ஆளும் பொறுப்பும், எவ்வித தவறுகளிருந்து பரிசுத்த ஆவியின் துணையோடு பாதுகாக்கும் பொறுப்பும் கையளிக்-கப்பட்டுள்ளது.

திருத்தந்தையின் தலைமையின் கீழ் ஏனைய திருச்சபையின் அங்கத்தவர்கள் தத்தமது கடமைகளை நிறைவேற்றுவார்கள். ஆயர்கள் (அப்போஸ்தலர்களின் வழித்தோன்றல்கள்), குருக்கள், துறவியர், பொதுநிலையினர், ஒரு உடலின் உறுப்புக்கள் போல் ஒவ்வொருவரும் தமது கடமைகளை நிறைவேற்றுவார். இவ்வாறு திருச்சபையானது கிறிஸ்துவின் மறையுடல், மறைபொருளான கிறிஸ்துவின் உடல்.

திருச்சபையின் பலம் உலக செல்வங்களில் அல்ல, மாறாக இறைவனின் அருளில் தான் தங்கியுள்ளது. இயேசு அவரைப் பார்த்து, "ஒருவர் தண்ணீராலும் தூய ஆவியாலும் பிறந்தாலன்றி இறையாட்சிக்கு உட்பட இயலாது என்று மிக உறுதியாக உமக்குச் சொல்கிறேன்". மனிதரால் பிறப்பவர் மனித இயல்பை உடையவர். தூய ஆவியால் பிறப்பவர் தூய ஆவியின் இயல்பை உடையவர். (யோவா 3:5-6)

ஆனால், நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வழிமரபினர், அரச குருக்களின் கூட்டத்தினர், தூய மக்களினத்தினர் அவரது உரிமைச் சொத்தான மக்கள். எனவே உங்களை இருளினின்று தமது வியத்தகு ஒளிக்கு அழைத்துள்ளவரின் மேன்மைமிக்க செயல்களை அறிவிப்பது உங்கள் பணி. முன்பு நீங்கள் ஒரு மக்களினமாய் இருக்கவில்லை, இப்பொழுது கடவுளுடைய மக்களாக இருக்கிறீர்கள். முன்பு இரக்கம் பெறாதவர்களாய் இருந்தீர்கள் இப்பொழுதோ இரக்கம் பெற்றுள்ளீர்கள். (1பேதுரு 2:9-10)

உடல் ஒன்றே, உறுப்புகள் பல. உடலின் உறுப்புகள் பலவாயினும் உடல் ஒன்றாயிருப்பதுபோல கிறிஸ்துவும் இருக்கிறார். ஏனெனில், யூதரானாலும் கிரேக்கரானாலும், அடிமைகளானாலும் உரிமைக் குடிமக்களானாலும் நாம் எல்லாரும் ஒரே தூய ஆவியால் ஒரே உடலாய் இருக்கும்படி திருமுழுக்குப் பெற்றோம். அந்த ஒரே ஆவியையே பானமாகவும் பெற்றோம். (1கொரி 12:12-13)

ஒரே உடலில் நமக்கு உறுப்புகள் பல உள; அந்த உறுப்புகளெல்லாம் ஒரே செயலைச் செய்வதில்லை. அதுபோலவே, நாம் பலராயிருந்தாலும் கிறிஸ்துவோடு இணைந்திருப்பதால் ஒரே உடலாய் இருக்கிறோம் ஒருவருக்கொருவர் உடனுறுப்புகளாய் இருக்கிறோம். ஆயினும், நமக்கு அளிக்கப்பட்டுள்ள அருளுக்கேற்ப வெவ்வேறு அருள்கொடைகளைப் பெற்றுள்ளோம். இறைவாக்குரைக்கும் கொடையை நாம் பெற்றிருந்தால் நாம் கொண்டிருக்கும் நம்பிக்கைக்கு ஏற்றவாறு அதைப் பயன்படுத்த வேண்டும். தொண்டாற்றும் கொடையை நாம் பெற்றிருந்தால் அதைத் தொண்டு புரிவதற்குப் பயன்படுத்த வேண்டும். கற்றுக் கொடுப்போர் கற்றுக்கொடுப்பதிலும், ஊக்கமூட்டுவோர் ஊக்கம்-தருவதிலும், தமக்குள்ளதை வழங்குவோர் தாராளமாய்க் கொடுப்பதிலும், தலைமை தாங்குவோர் முழு ஆர்வத்தோடு செயல்படுவதிலும், இரக்கச் செயல்களில் ஈடுபடுவோர் முகமலர்ச்சியோடு அவற்றைச் செய்வதிலும் தாம் பெற்ற அருள்கொடைகளைப் பயன்படுத்த வேண்டும். (உரோ 12:4-8)

எனவே நான் உனக்குக் கூறுகிறேன் உன் பெயர் பேதுரு; இந்தப் பாறையின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாயில்கள் அதன்மேல் வெற்றி கொள்ளா. (மத் 16:18)

ஆனால் தூய ஆவியின் கனியோ, அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் என்பவை ஆகும். இவையுள்ள இடத்தில் திருச்சட்டத்திற்கு இடமில்லை. கிறிஸ்து இயேசுவுக்கு உரியவர்கள் தங்கள் ஊனியல்பை அதன் இழிவுணர்ச்சிகளோடும் இச்சைகளோடும் சேர்த்துச் சிலுவையில் அறைந்துவிட்டார்கள். (கலா 5:22-24)

**பாடங்கள் தொடரும்...**



கிறிஸ்தவ செயற்பாட்டு திணைக்களத்தின் தலைமைத்துவத்தினால் பிரசித்தி பெற்ற கிறிஸ்தவ நாடக கலைஞன் ரிச்சர்ட் மானமுதலி என்பவரின் இயக்கத்தில் "விமுக்தியே இயேசு" என்ற மேடை நாடகம் மருதானை, டவர் மண்டபத்தில் மேடையேற்றப்பட்டது.

கொழும்பு உயர்மறைமாவட்ட அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை இந்நிகழ்விற்கு தலைமை தாங்கியதோடு, உயர்மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குனர் அருட்பணி. லெஸ்டர் நோனிஸ் அவர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

**தகவல்: T. சுனில் பர்னாந்து**

# வரலாற்று சிறப்புமிக்க அடிக்கல் நாட்டல்





இலங்கையில் முதன்மையான கெப்புசின் டர்ஷியரி திருக்குடும்ப கன்னியர் மடத்தின் அடிக்கல் நாட்டல் நிகழ்வானது மன்னார் மறைமாவட்ட ஆயரான இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகையின் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு கன்னியர்கள், பொதுநிலையினர்கள் பெரும்பாலானோர் கலந்து கொண்டனர். மடம்பெல்ல பங்கின், பங்குத் தந்தை அருட்பணி. க்கிளரன்ஸ் டில்ரன் பீரிஸ் அவர்களின் வழிகாட்டலின் கீழ் இந்நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

**தகவல்: பர்னி அலஹகேன், படம் : H.A. கல்தேரா**



கத்தோலிக்கர்களாகிய நாம் திருச்சுரூபங்களை கௌரவிக்கின்றோம். மதிப்பளிக்கின்றோமே ஒழிய அவற்றை வழிபடுவதில்லை. நாம் உயரிய ஆராதனை செலுத்துவது, சிலுவைப் பலியின் மூலம் எமக்கு மீட்பை அளித்த இயேசு கிறிஸ்துவுக்கே!


சிலாப மறைமாவட்ட ஆயர், தலவில திருத்தலத்தில் நடைபெற்ற தவக்கால நிகழ்வின் போது இவ்வாறு தெரிவித்தார். சில அடிப்படைவாதக் குழுக்கள் கூறுவதைப் போல், "கத்தோலிக்கர்களாகிய நாம் திருச்சுரூபங்களுக்கு வழிபாடு செய்வதில்லை. அவற்றிற்கு கௌரவிப்பது மட்டுமே. நாம் உயரிய ஆராதனை செலுத்துவது, சிலுவை மரணத்தின் மூலம் தம் உயிரைத் தியாகம் செய்து மீட்பின் வழியை உருவாக்கிக் கொடுத்த இயேசு கிறிஸ்துவுக்கே".

சிலாப மறைமாவட்ட மேதகு ஆயர் வெலன்ஸ் மென்டிஸ்...

தொடர்ச்சி 15ம் பக்கம்







# இம்மாத புனிதர்கள்

## புனித பிதேலிஸ் (சித்திரை–24)

ஜெர்மன் நாட்டவர். இயற்பெயர் மாகிரே. வழக்கறிஞர். ஏழைகளுக்காக வாதாடியதால் "ஏழைகளின் வழக்கறிஞர்" என அழைக்கப்பட்டார். நீதிமன்றங்களில் காணப்பட்ட அநீதிகளைக் கண்டு அத்தொழிலை விட்டுவிட்டார். பிறகு அவரது சகோதரரைப் போன்று துறவியானார். குருப்பட்டம் பெற்றபோது தனது பெயரை பிதேலிஸ் என்று மாற்றிக்கொண்டார். இதன் பொருள் விசுவாசம். அச்சமயத்தில் சுவிட்சர்லாந்தில் கிறிஸ்துவத்திற்கு பல எதிரிகள் இருந்தனர். ஆனால் புனிதரின் மறையுரையைக் கேட்டு அவர்களில் அநேகர் மனமாற்றம் பெற்றனர். ஆயினும் சில விரோதிகள் இவரைக் கொல்ல திட்டமிட்டனர். புனிதர் அவர்களிடமிருந்து தப்பிவிட்டார். 1622ல் மக்கள் பெரியக் கூட்டமாக திரண்டு வந்து கல்லால் அடித்துக் கொன்றனர். சாகும்போது தன்னைக் கொன்றவர்களுக்காக மன்னிப்பை வேண்டியபடி இறந்தார். 1746ல் திருத்தந்தை 14ஆம் பெனடிக்ட் புனிதர் பட்டம் வழங்கினார்.

## புனித பீட்டர் ஷானல் (சித்திரை – 28)

பிரான்சில் 1802ல் பிறந்தார். 1827ல் குருப்பட்டம் பெற்றார். 1837ல் மரியன்னை சபையில் இணைந்தார். பியூதூனா என்னும் ஊருக்கு மறைப்பணியாற்ற 1837ல் அனுப்பப்பட்ட முதல் மறைப் பணியாளர் இவரே. அங்கு பல துன்பங்கள், இடர்பாடுகளுக்கு இடையே சிறப்பாக பணியாற்றினார். எனவே அங்கு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதால் மன்னன் புனிதரின் மீது கோபமும், பொறாமையும் கொண்டான். எனவே அரசனின் உத்தரவின்பேரில், அமைச்சன் ஒருவன் வேறு சில அமைச்சர்களைத் திரட்டிக்கொண்டுச் சென்று அவரைத் துன்புறுத்திக் கொன்றான்.

அவரைத் தொடர்ந்து 1842ல் மரியின் சபையினர் அந்நாட்டிற்குச் சென்று சிறப்பாக மறைபணியாற்றினார். அப்பணி நற்பலன்களை ஈந்தது. 1889 கார்த்திகை 17 அன்று திருத்தந்தை 13ஆம் லியோ இவருக்குப் புனிதர் பட்டம் வழங்கினார்.

## புனித மாற்கு (சித்திரை– 25)

(நற்செய்தியாளர்.)

தி.ப 12-15, 1 பேதுரு, கொலோ, 2 திமொத்தேயு, பிலமோன் ஆகிய பகுதிகளில் காணப்படுபவரும், நற்செய்தியில் இரண்டாம் நற்செய்தியாக உள்ள மாற்கு நற்செய்தியை எழுதியவரும் இவரே. இவர் புனித பேதுருவுக்கு உதவியாக இருந்தவர். புதிதாக கிறிஸ்தவர்களாக மனமாற்றம் பெற்றவர்களுக்கு தம் இல்லத்தில் செபிக்க இடமளித்தவர். கி.பி 45ஆம் ஆண்டிலிருந்து புனித பவுலுடன் மறைபணி செய்தவர். வரலாற்று ஆசிரியரான யூசேபியு, அலெக்சாந்திரியா நகர் கிளமெண்ட், இரேனியுஸ், பாப்பியாஸ் ஆகியோர் அவரை புனித பேதுருவின் விளக்கவுரையாளர் எனக் குறிப்பிட்டுள்ளனர் எனத் தன் நூலில் எழுதிவைத்துள்ளார். இவர் அலெக்சாந்திரியா நகர் ஆயராகவும் இருந்திருக்கிறார். நான்கு நற்செய்திகளில் முதலில் எழுதப்பட்ட நற்செய்தி மாற்கு நற்செய்தியே. கிறிஸ்து கடவுளின் மகன் என அறிவிப்பதே இவரது நற்செய்தியின் குறிக்கோள். இயேசுவுக்காகத் துன்பப்பட்டு மறைசாட்சியாக மரணமடைந்தவர். இவரது திருப்பண்டங்கள் வெனிஸ் நகரில் அவரது பெயரால் அமைந்துள்ள பேராலயத்தில் வைக்கப்பட்டுள்ளன.

## புனித ஐந்தாம் பயஸ் (சித்திரை – 30)

(திருத்தந்தை)

1504ல் இத்தாலியில் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். இயற்பெயர் அந்தோணி கிஸ்லியோரி. குடும்ப சூழலால் இவரால் கல்விக் கற்க முடியவில்லை. அவரது வீட்டிற்கு வந்த தோமினிக்கன் சபை குருக்கள் அவருக்கு குருவானவராக விருப்பம் இருந்ததை அறிந்து படிக்க வைத்து குருவாக்கினார். குருவானபோது தனது பெயரை மைக்கேல் என வைத்துக் கொண்டார். பின்னர் ஆயராகவும், கர்தினாலாகவும் உயர்த்தப்பட்டார். 61ஆம் வயதில் திருத்தந்தையாக தேர்ந்தெடுக்கப்பட்டு 5ஆம் பயஸ் என்றப் பெயரை சூட்டிக்கொண்டார். துருக்கியர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்குமிடையே லெபோந்தோ என்ற இடத்தில் போர் நடந்துக் கொண்டிருந்தபோது போரின் வெற்றிக்காக திருத்தந்தை தானும் செபமாலை செபித்து, மக்களையும் செபமாலை செபிக்கக் கேட்டுக்கொண்டார். கிறிஸ்தவர்கள் அப்போரில் ஐப்பசி 7ஆம் நாள் 1517ல் வெற்றிப் பெற்றனர்.

அந்த நாளை செபமாலை அன்னை விழாவாக அறிவித்தார். மே 1, 1572ல் இவர் இறந்தார். மே 1 புனித யோசேப்பின் விழாவாதலால் இவரது விழாவை சித்திரை 30ம் நாள் திருச்சபை கொண்டாடுகிறது.

# விழிப்புணர்வு

புகழ்பெற்ற நிறுவனம் ஒன்று மாநாடு நடத்தியது. அதில் இரண்டாயிரம் பேர் பங்கேற்றனர். இரவு 8.30 மணியளவில் மின்வெட்டு காரணமாக பத்து நிமிடம் மாநாடு இருட்டில் மூழ்கியது. அந்நேரத்தில் 21 நபர்களின் பணப் பைகள் காணாமல் போய்விட்டன. நிறுவனம் காவல்நிலையத்தில் தவகல் கொடுத்தது. மறுநாள் பிற்பகலில் வாருங்கள் என காவல் உயர் அதிகாரி தெரிவித்தார். அதன்படி நிறுவனப் பொறுப்பாளர்கள் காவல்துறையினரிடம் கவலை தோய்ந்த முகத்தோடு கலந்துரையாடலில் ஈடுபட்டனர். அப்போது உயர் அதிகாரி "இதை எப்படியும் கண்டுபிடித்து விடுவோம். நீங்க கொஞ்சம் விழிப்பாக இருந்திருந்தால் இவ்வளவு பெரிய திருட்டுச் சம்பவம் நடந்திருக்காது. ஜெனரேட்டரைத் தயாராக வைத்துப் பேணுவதில் நீங்கள் விவேகத்தையும், விழிப்பையும் காட்டவில்லை" என்றார். அப்போது இருவர் ஒரு பெரிய சாக்குப் பையில் 21 பணப்பைகளைக் கொண்டு வந்து "ஐயா எங்களை மன்னிச்சுக்கங்க. அடிக்கடி இந்த நிறுவனம் இப்படி விழிப்புணர்வு இல்லாமல் நடக்குது. இவர்களுக்குப் பாடம் கற்பிக்கவே நாங்கள் 4 பேர் சேர்ந்து இந்தப் பணப்பைகளைக் களவாடினோம்" என்று கூறி கொடுத்தனர்.

### சிந்தனை

- விழிப்புணர்வு இல்லாததால் ஏற்படும் இழப்புகள் எண்ணற்றவை.
- விழிப்பை அறிஞர்கள் சிந்தனை, செயல் என இருவகைப்படுத்துவர்.
- விழிப்புணர்வு இல்லாமல் ஏமாறுவோர் அதற்கு வேறு காரணத்தைத் தேடிக் கூறுவது வருந்தத்தக்கது.
- விழிப்பை ஏற்படுத்துவது அக்கம்பக்கத்தாரின், சமூகத்தின் கடமை.
- இழப்பு அனுபவம்தான் விழிப்புக்கு ஆசானாக அமைகிறது.
- விழிப்பின்றி செயல்பட்டு பின்னர் தனக்கு உதவ முன்வரவில்லை என எவரையும் கோபித்தல் சரியன்று.
- விழிப்புணர்வில் முன்னுரிமை, அடுத்த வாய்ப்பு அளிப்பது எவற்றுக்கு என நிரல்படுத்திக் கொள்வது நல்லது.
- விழிப்பு மிகவும் அவசியமாகத் தேவைப்படும் தருணங்கள்:

1. பிறர் புகழும் போது
2. மதிப்பிடும் போது
3. திட்டமிடும் போது
4. அறிமுகம் செய்யும் போது
5. எதையும் தொடங்கும் போது
6. தேர்வின் போது
7. கடன் கொடுக்கும் போது / பெறும்போது



## சிந்தனைக்கு

மழலைகள் இல்லா உலகு, வெறுமையும் சோகமும் கொண்ட வெற்றுலகாகும்.

* * *

நம்பிக்கையே வாழ்க்கை – கடவுளை நம்பினோர் கைவிடப்படமாட்டார்.

* * *

சிக்கிமுக்கிக் கல் தண்ணீருக்குள்ளே இருந்தாலும், தன் உள் நெருப்பை இழப்பதில்லை. அதுபோலவே இறைபக்தனும் தான் எந்நிலையில் இருந்தாலும் கடவுளுளின் பெயரைக் கேட்டதும் தன்னை மறந்தவனாகி விடுகிறான்.

* * *

மௌனம் உலகின் உயர்ந்த மொழி.

* * *

இறை நம்பிக்கை உள்ளவர்களுக்கு விளக்கம் தேவையற்றது. நம்பிக்கையற்றவர்களுக்கு விளக்கம் கொடுப்பது இயலாததொன்று.

* * *

உன் திட்டங்கள் தோல்வியுற்றால் அதற்காக கலங்க வேண்டாம்
கடவுள் உனக்கு சிறப்பான வேறு திட்டங்களை வைத்திருப்பார்.

* * *

வாழ்வில் வரும் வாய்ப்புக்களை நழுவவிடாமல் சரியாக பயன்படுத்துவதே உண்மையான ஞானம்.

* * *

இறைநம்பிக்கை துரும்பையும் தூக்கி எடுத்து சிகரத்தில் வைத்துவிடும்.

* * *

கடவுளின் எல்லைக் காணா இரக்கத்திற்கு முன் நமது எத்தனை பெரிய பாவங்களும் ஒரு தூசிக்குச் சமன்.

## 03 அழைத்தல்

**4. அர்ப்பணிப்பு**

அழைத்தலின் இறுதிப் படி அழைக்கப்பட்டவர்களின் உழைப்பு அர்ப்பணிப்பு. தங்கள் தகுதியின்மையையும் கடந்து, இறைவன் தம்மை அழைத்து அருள்பொழிவு செய்ததை உணர்ந்து, அழைக்கப்பட்டவர்கள் தங்களையே அழைத்தவருக்கு முற்றிலும் கையளிக்கின்றனர்.

"ஆண்டவரே நான் பாவி, நீர் என்னை விட்டுப் போய்விடும்" (லூக் 5:8) என்று கூறிய பேதுரு "அஞ்ஞாதே; இது முதல் நீ மனிதரைப் பிடிப்பவன் ஆவாய்" என்ற வார்த்தைகளால் தொடப்பட்டு அனைத்தையும் விட்டுவிட்டு இயேசுவைப் பின்பற்றினார்.

மோசேயும், எசாயாவும், எரேமியாவும் தாங்கள் முன் வைத்த காலைப் பின் வைக்கவேயில்லை. இறுதிவரை, தங்கள் அழைத்தலில் நிலைத்து நின்று பேறுபெற்றவர் ஆயினர்.

**அனைவருக்கும் அழைப்பு**

இறைவாக்கினர்கள், இறைப்பணியாளர்கள், துறவியர் மட்டுமல்ல, திருமுழுக்குப் பெற்ற அனைவருமே இறை அழைத்தல் பெற்றவர்தாம்.

"தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்குமுன்பே அறிந்திருந்தேன், நீ பிறக்குமுன்பே உன்னைத் திருநிலைப்படுத்தினேன்" (எரே1:5) என்பது எரேமியாவுக்கு மட்டுமல்ல, நம் ஒவ்வொருவருக்கும் பொருந்தும்.

"சகோதர, சகோதரிகளே, நீங்கள் அழைக்கப்பட்டவர்கள், தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்" (2பேது 1:10) என்கிறார் புனித பேதுரு. "நாம் தூயோராகவும், மாசற்றோராகவும் தம் திருமுன் விளங்கும்படி, உலகம் தோன்றுவதற்கு முன்பே கடவுள் நம்மைக் கிறிஸ்து வழியாகத் தேர்ந்தெடுத்தார்" (எபே 1:4)

எனவே அழைப்பு, மறுப்பு, அருள்பொழிவு, அர்ப்பணிப்பு என்னும் இந்த 4 படிகளில் நாம் எங்கிருக்கிறோம் என்பதை எண்ணிப் பார்த்து நம் அழைப்புக்கேற்றவாறு வாழ்வோம்.

"அழைப்புப் பெற்றவர்கள் பலர், ஆனால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களோ சிலர்" (மத் 22:14) என்பதை உணர்ந்து, கலப்பையில் கைவைத்தபின் திரும்பிப் பார்க்காமல் (லூக் 9:62), நம்மை முழுவதும் அர்ப்பணிப்போம்.

## 01 புனிதத்துவத்தில்...

முடியும் என்பது குறித்த பரிந்துரையே இத்திருத்தூது அறிவுரையின் முக்கிய நோக்கம் என அதில் எழுதியுள்ளார்.

புனிதத்துவத்திற்கான அழைப்பு என்று தலைப்பிடப்பட்டுள்ள முதல் பிரிவில், நம்மோடு உடன் நடந்து நமக்கு ஊக்கமூட்டிவரும் புனிதர்கள், நம் அருகாமையில் வாழும் புனிதர்கள், ஆகியோரைக் குறித்து கூறியுள்ள திருத்தந்தை, நாமும் உயிருட்டம் உடையவர்களாக, மனிதாபிமானம் மிக்கவர்களாக வாழ்ந்து, புனிதத்துவத்தில் நுழைய இறைவன் அழைப்பு விடுக்கிறார் என அதில் கூறியுள்ளார்.

இரண்டாவது பிரிவில், புனிதத்துவத்தின் எதிர் சக்திகள் எவை என்பதை பட்டியலிட்டுள்ள திருத்தந்தை, கடவுள் நம்பிக்கையின்மை, தாழ்ச்சி மனப்பான்மை இல்லாமை ஆகியவை குறித்து எடுத்துரைத்துள்ளார். இயேசுவின் ஒளியில் புனிதத்துவத்தைக் கண்டுகொள்ள வேண்டும் என அழைப்புவிடுக்கும் மூன்றாவது பிரிவு, இயேசுவின் மலைப்பொழிவை முன்வைத்து, கிறிஸ்தவ மதிப்பீடுகள் குறித்து விவரிக்கிறது.

திருத்தந்தை வழங்கியுள்ள திருத்தூது அறிவுரையின் நான்காம் பிரிவு, இன்றைய உலகில் புனிதத்துவத்தின் அறிகுறிகள் குறித்து விவரிக்கிறது. எத்தகையப் பண்புகள், புனிதத்துவத்தை எடுத்துரைக்கின்றன என்பதைக் கூறும் இப்பிரிவைத் தொடர்ந்துவரும் ஐந்தாவது பிரிவு, தீயோனுக்கு எதிரான ஆன்மீகப் போராட்டம், விழித்திருத்தல், பகுத்துணர்தல் போன்றவை குறித்து விளக்கம் அளிக்கிறது.

புனிதத்துவத்தை தேடும் பாதையில், அன்னை மரியாவின் எடுத்துக்காட்டு, மற்றும், உதவிகள் குறித்து, "மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள்" என்ற தன் திருத்தூது அறிவுரையின் இறுதியில் குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

## 01 மறைக்கல்வி...

மறைக்கல்விப் பணியகத்தினால் வைகாசித் திங்கள் 1ம் திகதி காலை 8.30 மணிக்கு புனித வியாகுல மாதா பங்கு மண்டபத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இவ்வழிபாடானது இந்தியா சாலக்குடி தியான இல்லத்தைச் சேர்ந்த அருட்பணி. என்டோ கன்னம்புழா அவர்களால் நடாத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

**பி.கு: காலைத் தேனீர் மற்றும் மதிய உணவு வழங்கப்படும்.**

**தகவல் : கொழும்பு உயர் மறைமாவட்ட மறைக்கல்விப் பணியகம்**

## 13 கத்தோலிக்கராகிய நாம்...

ஆண்டகை அவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை, தலவில புனித அன்னம்மாள் திருத்தலத்தில் மறையுரையின் போது இவ்வாறு தெரிவித்தார். இந்நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை அவர்களும் கலந்து கொண்டார். மேலும் ஆயர் அவர்கள் கருத்து தெரிவிக்கையில், "நாம் எமது அனைத்து விதமான தீய பழக்கவழக்கங்களையும் விட்டு புதிய வாழ்வை வாழ முயற்சிப்போமேயானால், வாழ்வு புதுப்பிறப்பாக அமையும். இத்தவக்காலத்தில் இறை அரசின் மதிப்பீடுகளை, குணாதிசயங்களை எம்முள் வளர்த்துக் கொண்டு, அப்புதுப்பிறப்பிற்கு நாம் ஆயத்தமாகிக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இத் திருவிழாத் திருப்பலியின் பின்பு, புனித அன்னம்மாளின் திருச்சுருப பவனியும், அதனைத் தொடர்ந்து ஆசீர்வாதமும் வழங்கப்பட்டது. நாட்டின் பல பாகங்களிலுமிருந்து வருகைத்தந்திருந்த பக்தர்களினால் திருத்தலமானது நிரம்பி காணப்பட்டதுடன், திருத்தல பொறுப்பாளரான அருட்பணி. நெல்சன் சமன்த்த பர்னாந்து அடிகளாரால் இந்நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

**தகவல்:- திரு. சுனில் பர்னாந்து, ஹேஷான் பிரதீப்.**

## 08 ஆயரின் செய்தி

மக்களின் வாழ்வில் பங்கெடுப்பதும் தொலைந்து போன ஆடுகளை மீள மந்தையில் கூட்டிச்சேர்ப்பதுமே (லூக். 15:4-7) மந்தையின் மணம் கொண்ட மேய்ப்பர்களாக வாழ்தலின் அர்த்தமாகும்.

தனது மந்தைக்காக தன் உயிரையே ஈந்த ஆண்டவரால் தூண்டப்பெற்று மந்தையை அறிந்து அன்பு செய்கின்ற அதேபோல் மந்தையும் அறிந்து அன்பு செய்கின்ற மேய்ப்பர்களை அனுப்பும் படியாக நல்லாயனாம் இறைவனிடம் மன்றாடுவோம்.

**✠ மேதகு ஆயர் வின்ஸ்டன் பர்னாந்து, ந.நா.ச**
**பதுளை மறைமாவட்ட ஆயர்**
**தலைவர்**
**குருமட குருத்துவ மற்றும் துறவற அமைப்பிற்கான**
**கத்தோலிக்க தேசிய ஆணைக்குழு**

## 11 இறைவாக்கினர்களை...

வேளையும் தன் கடவுளைத் தொழுது வந்தார். அதற்காக அவரை சிங்கத்தின் குகையில் போட்டனர். சாத்ராக்கும் அவரது நண்பர்களையும் காப்பாற்றியது போல கடவுள் தானியேலையும் சிங்கத்தின் குகையிலிருந்து உயிருடன் தப்புவித்தார். ஆனால் தானியேலின் மீதுக் குற்றம் சுமத்தியவர்கள் சிங்கங்களுக்கு இரையாயினர்.

இந்நூலின் முதல் ஆறு அதிகாரங்களுக்குப் பின்னர், எழுதப்பட்டுள்ளவை தானியேல் கண்ட காட்சிகளைக் குறித்ததே. அவை எதிர்காலத்தில் நடக்கவிருப்பனவற்றைக் குறித்த காட்சிகளாக இருந்தன.

**4. இந்நூலின் நோக்கமும் பயனும்:**

இஸ்ரயேல் மக்கள் கடவுளுக்கு எதிராகப் பாவம் செய்தபோதிலும், அவர்கள் தாங்கள் விசுவசிக்கும் கடவுளிடம் திரும்பி வந்து அவரைக் குறித்து தியானித்து வாழ்ந்தால், கடவுள் தரவிருக்கும் தண்டனைக்குத் தப்பி நல்லதொரு எதிர்காலத்தை மீண்டும் பெறுவர்.

இறை நம்பிக்கையை கைவிட்டு வாழும் மக்களுக்கு நல்லறிவுப் புகட்டி, அவர்களை கண்டித்துத் திருத்துதல்.

கடவுள் எதிர்பாரத வேளையில் மனிதரின் வரலாற்றில் செயலாற்றுவார் என்பதை உணர்ந்தவர்களாக மக்கள் எந்நேரமும் விழிப்புடன் இருந்து அவரது செயல்களை ஏற்க வேண்டும்.

## 01 இறைபதம் அடைந்தார்.

ஆலயத்தின் பங்குத் தந்தையாவார். இவர் 1958ம் ஆண்டு பிறந்தார். 1985 ஆடி மாதம் 27ந் திகதி குருத்துவ திருநிலைப்படுத்தப்பட்டார்.

இவரது ஆன்மா நித்திய இளைப்பாற்றியில் இளைப்பாற ஞானஒளி பிரார்த்திக்கின்றது.

## சிந்தனைக்கு

கல்வி கற்றலின்போது அதன் வேர்கள் கசப்பாக இருக்கும். ஆனால் அதன் கனிகளோ இனிப்பானவை – **அரிஸ்டாடில்**

கடவுளின் எல்லைக்காணா இரக்கத்திற்கு முன் நமது எத்தனை பெரிய பாவங்களும் ஒரு தூசிக்கு சமம்

**– புனித கிளாத் லா கொலம்பியர்.**

எமது இணையத்தள முகவரி
http://www.colomboarchdiocesancatholicpress.com

**கொட்டாஞ்சேனை**
ஒரு பெண் ஆசிரியருக்கு கொட்டாஞ்சேனையில் வசிப்பதற்கு ஓர் அறை தேவைப்படுகிறது.
**தொடர்புகொள்ள**
**0785687908**
(N 0208)



**மணமகள் தேவை**
கொழும்பில் அரசாங்க ஆசிரியராகப் பணிபுரியும் 1978ம் ஆண்டு பிறந்த, மணமகனுக்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
**தொடர்புகளுக்கு 077 5198147**
(N 0232)

## XX நம் உள்ளம் பற்றி...

சோர்வு தளர்வுகள் வந்தாலும் இயேசு உடனிருக்கிறார் என்ற நம்பிக்கை வானை எட்டும் ஆற்றலைத் தந்து கொண்டிருக்கிறது. இறைவார்த்தை உயிருள்ளது இருபக்கமும் வெட்டக்கூடிய எந்த வாளிலும் கூர்மையானது என வாசிக்கின்றோம் (எபி 4:12-13). இதை எரேமியா அனுபவித்தார். (20:9) எம்மாவு சீடர்களும் இறைவார்த்தையால் பற்றி எரிந்து எருசலேமுக்குச் சான்று பகரச் செல்கின்றனர்.

**வாழ்வில் மாற்றம்.**

எம்மாவு சீடரின் அனுபவம் ஆதித்திருச்சபையில் வாழ்வாக நடந்தேறுவதை திருத்தூதர் பணி நூலில் (2:42) காண்கிறோம். கூட்டு வாழ்க்கை (தோழமை) கிறிஸ்தவர்களின் உண்மை வாழ்வின் அடையாளமாகும்.

எம்மாவு சீடர்கள் ஒரு பெயர் தெரியா நபரை விருந்துக்கு அழைத்து உபசரித்தது ஒரு தோழமை விருந்தாகும். அப்பத்தைப் பிடுதல் முழுமைப் பகிர்வின் அடையாள வெளிப்பாடு. உணவை, உறைவிடத்தை, நேரத்தைப் பிறருக்காகப் பகிர்தலும் இல்லையெனில் அப்பம் பிட்டல் தன் ஆற்றலையும் பொருளையும் இழந்துவிடும் (லூசியன் லெக்ரான் - விவிலியப் பேராசிரியர்) தோழமை விருந்தில் ஆண்டான் அடிமை, தெரிந்தவன், தெரியாதவன் என்ற பாகுபாடு மறைகிறது. அனைத்தையும் மாற்றியமைக்கும் இறைவார்த்தையின் ஆற்றல் "ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய்" (திப 4:32) இருந்த கிறிஸ்தவ சமூகத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

உயிர்த்த இயேசு இறைவார்த்தையை எடுத்துரைக்கிறார். திருநூலுக்கு விளக்கம் தருகிறார். அவரது பாணியிலே அவரது சீடர்களும் போதிக்கின்றனர். இதை வேதபோதகத்துக்குச் சிறந்த எடுத்துக் காட்டாக கொள்ளலாம். இறைவார்த்தையை எடுத்துரைப்பது தூய ஆவியாரின் துணையால் ஒரு புதிய பகிரும் சமூகத்தை ஏற்படுத்துகிறது. இறைவார்த்தையைக் கேட்பது மட்டுமல்ல இதயத்தைத் திறந்து அவரோடு விருந்துண்பதும் இன்றியமையாதது.

இறைவார்த்தையும் அப்பம் பிடுதலும் கிறிஸ்துவின் பிரசன்னத்தை வெளிப்படுத்துகிறது. பின்பு அவர் மறைந்து விடுகிறார். மறைந்திருக்கும் கிறிஸ்துவை வெளிக்கொணர அவரது வார்த்தையும் அப்பம் பிட்டலும் தொடர்ந்து அடையாளமுறையில் திருச்சபையில் நடைபெற வேண்டும். வாழப்பட வேண்டும். திருச்சபை இறைவார்த்தையில் பிறக்கிறது, வாழ்கிறது. இறைவார்த்தையின் படி வாழ்தலே திருச்சபையின் இருத்தலை நியாயப்படுத்துகிறது. மறைநூல் வழியாகத் தந்தை தம் அன்புப் பிள்ளைகளை சந்திக்கிறார், உரையாடுகிறார். கிறிஸ்தவ சமூகம் இறைவார்த்தையை கரங்களில், இதயத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

## 09 நன்கொடை கடவுளின்...

ஆழமாக சிந்திக்க வேண்டும். நாம் ஒன்றாக இணைந்து அழைப்பிற்காக செபிக்கவும் அதனை ஊக்குவிக்கவும் எம்மை புதுப்பிப்போம். தேவையேற்படின் குருத்துவ உருவாக்கத்திற்கு எம்மாலான பொருளாதார நிதி உதவிகளை செய்ய முன்வர வேண்டும். தூய யோசேப்வாஸிடம் விளங்கிய தூய்மை, மறைபணி ஆர்வம் என்பன எமது இளம் பராயத்தினருக்கு ஓர் விடிவெள்ளியாகத் திகழட்டும். மறைபணி சீடர்களாக இயேசுவில் விளங்கிய பிறரன்பு, சேவை மனப்பாங்கு இவர்களில் மலரவும் செயல்படவும் இயேசுவிடமிருந்து கற்றுக் கொள்வார்களாக. இறையுண்மைகளை எடுத்துரைக்கும் ஊழியர்களாகவும் மந்தையின் மனத்தை உணரும் நல்ல மேய்ப்பர்களாகவும் இருக்க முன் வருவார்களாக.

**அருட்பணி. எக்ஸ்பிடஸ் ஜயக்கொடி**
**குருமட அதிபர்**
**தேசிய குருமடம், அம்பிடிய**

# நெல்லிக்காய் சாப்பிடுங்க...!

## நலமுடன் வாழ்வீங்க!



மனிதனுக்கு எளிதில் கிடைக்குமாறு இயற்கை அளித்த மருத்துவ குணமிக்க ஒரு காய்தான் நெல்லிக்காய். நெல்லிக்காயில் உடல்நலப் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய சத்துக்கள் அதிகளவில் காணப்படுகின்றன. இதில் விட்டமின் சி, கால்சியம், இரும்புச்சத்து, பாஸ்பரஸ், நார்ச்சத்து மற்றும் கார்போஹைட்ரேட் போன்றவை வளமாக நிறைந்துள்ளன.

நெல்லிக்காய் உடலில் புரோட்டீன்களின் அளவை அதிகரித்து, கொழுப்புக்களைக் குறைத்து, உடல் பருமனைத் தடுக்கும். எனவே உங்களுக்கு உடல் எடையைக் குறைக்கும் எண்ணம் இருந்தால், தினமும் காலையில் வெறும் வயிற்றில் ஒரு டம்ளர் நெல்லிக்காய் ஜூஸ் குடித்து வாருங்கள்.

### புற்றுநோய் தடுக்கும்

நெல்லிக்காயில் ஆன்டி-ஆக்ஸிடன்ட்டுகள் அதிகம் உள்ளன. முக்கியமாக இதில் சூப்பராக்ஸைடு டிஸ்முடேஸ் (SOD) என்னும் உள்பொருள் உள்ளது. இது ப்ரீ-ராடிக்கல்களிடமிருந்து பாதுகாப்பளித்து, புற்றுநோயில் இருந்து நம்மைத் தடுக்கும். எனவே புற்றுநோய் வராமலிருக்க வேண்டுமானால், நெல்லிக்காய் ஜூஸ் பருகுங்கள்.

### உடல் சூட்டை தணிக்கும்

நெல்லிக்காயில் விட்டமின் சி அதிகம் உள்ளது. இது உடலை குளிர்ச்சியுடன் வைத்துக் கொள்ளும். குறிப்பாக கோடையில் நெல்லிக்காய் ஜூஸ் குடிப்பது, உடல் சூட்டைத் தணிக்கும்.

நெல்லிக்காய் தூக்கமின்மையைப் போக்கும். அதிலும் நெல்லிக்காய் ஜூஸ் உடன் ஜாதிக்காய் பொடி சேர்த்து கலந்து குடித்தால், இரவில் நல்ல நிம்மதியான தூக்கத்தைப் பெறலாம்.

### பார்வை மேம்படும்

நெல்லிக்காயில் உள்ள ஆன்டி - ஆக்ஸிடன்ட், கண்களின் ரெட்டினாவை பாதுகாக்கும். இதில் விட்டமின் சி வளமாக இருப்பதால், பார்வை மேம்படுவதோடு, கண்களில் இருந்து தண்ணீர் வருவது, கண் எரிச்சல், கண்கள் சிவப்பது போன்றவை தடுக்கப்படும்.

நெல்லிக்காய் உடலின் இரத்த ஓட்டத்தை மேம்படுத்தும். மேலும் இதயத்துக்குச் செல்லும் இரத்தக் குழாய்களில் ஏதேனும் அடைப்புகள் இருந்தால், அவற்றைத் தடுத்து, இதயத்தில் இரத்த ஓட்டத்தை அதிகரிக்கும்.

நெல்லிக்காய் இரத்த நாளங்கள் மற்றும் தமனிகளைச் சுத்தமாக வைத்துக் கொள்ளும். நெல்லிக்காயில் இரும்புச்சத்து இருப்பதால், இதனை தினமும் ஒன்று உட்கொண்டு வந்தால், புதிய இரத்த செல்கள் உருவாகி, மறைமுகமாக மாரடைப்பு மற்றும் பக்கவாதம் ஏற்படும் வாய்ப்பைத் தடுக்கும்.

நெல்லிக்காய் உடலில் உள்ள டாக்ஸின்களை முழுமையாக வெளியேற்றி, உடலையும், இரத்தத்தையும் சுத்தம் செய்யும். மேலும் நெல்லிக்காய் ஜூஸ் குடித்தால் இரத்தணுக்களின் அளவு அதிகரிக்கும். நெல்லிக்காயில் நார்ச்சத்து அதிகமாக இருப்பதால் மலச்சிக்கல் உள்ளவர்களுக்கு இது தீர்வாக அமைகிறது.

முக்கியமாக நெல்லிக்காய் ஜூஸை தினமும் குடித்து வந்தால், அதில் உள்ள விட்டமின் சி சரும செல்களுக்கு நல்ல பாதுகாப்பை வழங்கி ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளும். சரும செல்கள் ஆரோக்கியமாக இருந்தால், சரும அழகு தானாக அதிகரிக்கும்.

# நான்-ஸ்டிக்' பாத்திரங்களால்

## உங்கள் எடை அதிகரிக்கலாம்!

நமது உடலை கச்சிதமாக வைத்துக் கொள்ள எத்தனையோ பிரயத்தனங்களை செய்தாலும், அது கட்டுக்கடங்காமல் போக எண்ணற்றக் காரணங்கள் உள்ளன.

அதற்கு அன்றாடம் நாம் பயன்படுத்தும் பல உணவு பொருள்களும் காரணமாக இருக்கலாம். அதே சமயம், வீட்டில் சமைக்கப்படும் உணவுகளிலும் நம் கண்ணுக்குத் தெரியாத பல எதிரிகள் இருக்கலாம்.

இதற்கு ஓர் உதாரணம்தான் நான்-ஸ்டிக் பாத்திரங்கள். உடலுக்கு மிகவும் உகந்த ஒரு உணவு பொருளை நான்-ஸ்டிக் பாத்திரத்தில் சமைப்பது அல்லது பிளாஸ்டிக் காகிதம் சுத்தப்பட்ட சத்தான உணவுப் பொருளை வாங்கிச் சாப்பிடுவது என இரண்டுமே நமது உடலுக்கு நன்மை பயக்காது.

இவற்றால், நமது உடல் எடை அதிகரிக்கும் என்பதோடு, உடல் எடை குறைப்புக்காக நாம் எடுக்கும் எந்த முயற்சியையும் இது நிறைவேற விடாது என்பது கூடுதல் தகவல்.

மிகக் கடுமையான உணவுக் கட்டுப்பாட்டில் இருந்தும் உடல் இளைக்காத பெண்களின் இரத்தத்தில் கலந்திருக்கும் அதிகப்படியான perfluoroalkyl substances (PFAS) என்பது, நான்-ஸ்டிக் பாத்திரங்கள், உணவுப் பொருட்களை சுற்றி வரும் பிளாஸ்டிக் காகிதங்கள், பிளாஸ்டிக் பைகளில் அதிகளவில் கலந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இரு பாலரிடமும் நடத்தப்பட்ட ஆய்வில், இந்த PFAS காரணமாக பெண்களின் உடலில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுவதும் கண்டறியப்பட்டுள்ளது.






# பனங்கிழங்கு சாப்பிடுங்க...!




"கற்பக விருட்சம்" என்று அழைக்கப்படுகின்ற பனை மரம் அதிக காலம் உயிர் வாழும் அதிசயம் நிறைந்தது. அதில் இருந்து கிடைக்கக்கூடிய அனைத்து பொருட்களும் பயன்தரக்கூடியது. மரத்தில் இருந்து பனம்பழத்தை வெட்டி குழியில் போட்டு புதைத்து, பனங்கிழங்கு சாகுபடி செய்கிறார்கள்.

பனங்கிழங்கில் பல மருத்துவ குணங்கள் உள்ளன. இவை குளிர்ச்சி தன்மை உடையவை. மலச்சிக்கலை தீர்க்கக்கூடியது. உடலுக்கு வலு சேர்க்கும். பனங்கிழங்கை வேகவைத்து சிறு, சிறு துண்டாக நறுக்கி காயவைத்து அதனுடன் கருப்பட்டி சேர்த்து இடித்து மாவாக்கி சாப்பிட்டால் உடலுக்கு தேவையான இரும்பு சத்து கிடைக்கும்.

இதனுடன் தேங்காய்ப் பால் சேர்த்து சாப்பிட்டால் உடல் உறுப்புகள் பலம் பெறும். பெண்களின் கர்ப்பப்பை பலம் அடையும். பனங்கிழங்கு வாயு தொல்லை உடையது. எனவே இதைத் தவிர்க்க பனங்கிழங்குடன் பூண்டு, மிளகு, உப்பு சேர்த்து இடித்து மாவாக்கி சாப்பிடலாம். இனிப்பு தேவைப்படுகிறவர்கள் கருப்பட்டி சேர்த்து இடித்து சாப்பிடலாம்.

பனங்கிழங்கில் நார் சத்தும் அதிகம் இருப்பதால் இதை உண்பதால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். பூமியில் இருந்து பனங்கிழங்கை பிரித்தெடுக்கும்போது விதையில் இருந்து தவின் கிடைக்கும். தவின் சாப்பிட்டால் வயிற்று வலி, ஒற்றை தலைவலி உள்ளிட்ட நோய்கள் குணமாகும்.

வயிறு, மற்றும், சிறுநீர் பாதிப்பு பிரச்சினை உள்ளவர்கள், பனங்கிழங்கு மாவை உணவில் சேர்த்து வந்தால் நல்ல பலன் கிடைக்கும். பனங்கிழங்கை அரைத்து மாவு செய்து அதில் கஞ்சி அல்லது கூழ் செய்து காலையில் சாப்பிட்டு வந்தால், பசி நீங்குவதுடன் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகமாகும்.

## ஆரோக்கிய குறிப்பு

- மாத்திரைகளை சாப்பிடும் போது குளிர்ச்சியான நீரில் எடுப்பதை தவிர்த்து, வெதுவெதுப்பான நீரில் எடுக்க வேண்டும்
- எப்போதும் 5 மணிக்கு மேல் வயிறு நிறைய உணவை உட்கொள்ளும் பழக்கத்தை கைவிட வேண்டும்.
- பகல் நேரத்தில் குடிக்கும் தண்ணீரின் அளவை அதிகரித்து, இரவில் நேரத்தில் குறைத்துக் கொள்ள வேண்டும்.
- தினமும் இரவில் 10 மணிக்கு தூங்கி, அதிகாலையில் 4 மணிக்கு எழும் பழக்கத்தைக் கொண்டால், உடல் ஆரோக்கியமாக இருக்கும்.
- எப்போதும் உணவை உண்ட பின் தூங்கும் பழக்கத்தை கொண்டவராயின், அவற்றை உடனே தவிர்ப்பது நல்லது.
- இரவில் உங்கள் முகத்தை சுத்தம் செய்வது முக்கியமாகும். படுக்கைக்கு செல்வதற்கு முன் உங்கள் முகத்தை தினமும் கழுவுங்கள்.
- பல் பிரச்சினைகள் தொற்று நோய்களுக்கு வழிவகுக்கலாம். சரியான வாய் சுகாதாரத்தை பராமரித்தல் மிக அவசியம். ஒரு நாளைக்கு இருமுறை பல் துலக்கவும். காலையிலும், இரவில் படுக்க போகும் முன்பும்.
- நீண்ட மணி நேரம் ஒரே இடத்தில் நாற்காலியில் அமர்ந்திருப்பது, எடை அதிகரிப்பு மற்றும் முதுகு, கழுத்து வலிக்கும் வழிவகுக்கும். ஒவ்வொரு அரை மணி நேரத்திற்கும் உங்கள் நாற்காலியிலிருந்து எழுந்து சில அடிகள் நடங்கள்.

# விளைவுகளால் பாதிப்படையாமல் இயேசுவின் பின்னால் செல்வோம்



இயேசுவை நாம் பின்பற்றுவது, ஆர்வக்கோளாறினால் அல்ல, மாறாக, அவர் மீது நாம் கொண்டுள்ள விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என தனது மறையுரையில் குறிப்பிட்டார் திருத்தந்தை.

தான் தங்கியிருக்கும் சாந்தா மார்த்தா இல்லத்தின் சிற்றாலயத்தில் திங்கள் காலை திருப்பலி நிறைவேற்றி மறையுரை வழங்கிய திருத்தந்தை, இயேசு நம் வாழ்வில் ஆற்றியது என்ன எனவும், அந்த அன்புக்கு நாம் எவ்விதம் பதில்மொழி வழங்குகிறோம் எனவும் நமக்குள் கேள்வி எழுப்பவேண்டும் என்றார்.

இயேசு அப்பம் பலுகச்செய்த புதுமையைக் கண்ட மக்கள், அவரை அரசராக்க முயன்றதைப்பற்றிக் கூறும் நற்செய்தியை மேற்கோள்காட்டி மறையுரையாற்றிய திருத்தந்தை, இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டு நம்பியதாலா, அல்லது அவரின் புதுமையைக் கண்ட ஆர்வத்தாலா மக்கள் அவரை அரசராக ஏற்க முன்வந்தனர் என்ற கேள்வியையும் முன்வைத்தார்.

அழிந்து போகும் உணவினால் அல்ல, நம்மை வாழவைக்கும் இறைவார்த்தைகளால், நாம் கவரப்படவேண்டும் என்பதையும் எடுத்துரைத்த திருத்தந்தை அவர்கள், தீய ஆவிகளை பன்றிகள்மீது செல்ல அனுமதித்து, அதன் உரிமையாளர்களுக்கு நட்டத்தை இயேசு ஏற்படுத்தியபோது, தங்களை விட்டு அவர் விலகிச் செல்லவேண்டும் என அவர்கள் கேட்டதையும், குணமாக்கப்பட்ட 10 தொழு நோயாளிகளுள் ஒருவர் மட்டுமே நன்றிசொல்ல வந்ததையும் உதாரணமாகக் காட்டினார்.

இயேசுவைப் பின்பற்றுவதால் வரும் எவ்வித விளைவுகள் குறித்தும் கவலைப்படாமல், அவரைப் பின்பற்றுவதில், நாம் திருத்தூதர் பணி நூலில் காணும் ஸ்தேவான் போல் செயல்படவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார் திருத்தந்தை பிரான்சிஸ்.

# வாழ்வு, மற்றும், மனித உடலின் மதிப்பைக் கண்டுகொள்வோம்

இயேசு தம் உயிர்ப்பை உண்மை என நிரூபிப்பதற்காக, காயமடைந்த தன் கரங்களையும், கால்களையும் சீடர்களிடம் காண்பித்து, அவர்களோடு உணவருந்தி, தாம் ஓர் ஆவியல்ல, உடலும் ஆன்மாவும் கொண்ட மனிதர் என்பதை உறுதி செய்தார், என ஞாயிறு (15.04.2018)அல்லேலூயா வாழ்த்தொலி உரையில் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

மேலும் நற்செய்தியை (லூக்.24,35-48) மையமாக வைத்து, அல்லேலூயா வாழ்த்தொலி உரையாற்றிய திருத்தந்தை, இயேசு, தம் உயிர்ப்பு குறித்து வலியுறுத்துவது, உடல் பற்றிய கிறிஸ்தவக் கண்ணோட்டத்தை வெளிச்சம்போட்டு காண்பிக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டி, வாழ்வு மற்றும், மனித உடலின் மதிப்பு பற்றிப் பேசினார்.

உடலும் ஆன்மாவும் கொண்ட மனிதர், கடவுளின் உருவையும், சாயலையும் முழுமையாக வெளிப்படுத்துகின்றார் என்பதால், நாம் அனைவரும் நம் உடல் மற்றும், மற்றவரின் உடல்கள் மீது மிகுந்த மரியாதை வைத்து அவற்றைப் பராமரிக்க வேண்டும், எனவும் கேட்டுக்கொண்டார் திருத்தந்தை.



உடல்ரீதியாகப் பயன்படுத்தப்படும், சிறார், பெண்கள் மற்றும் வயது முதிர்ந்தவர்களை சிறப்பாக நினைத்துப் பார்க்கிறேன், இவர்களின் சதையில் கிறிஸ்துவின் உடலைக் காண்கின்றோம், என்று கூறியத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நம் அயலவரின் உடலுக்கு நாம் விளைவிக்கும் தீமை, அந்த உடலில் ஏற்படுத்தும் காயம் அல்லது வன்முறை, படைத்தவராம் இறைவனையே அவமதிப்பதாகும், என மேலும் தெரிவித்தார்.

# சிரியாவின் இன்றைய நிலைகள் குறித்து திருத்தந்தை மீண்டும் கவலை



அமைதிக்கான நல்வழிமுறைகள் அனைத்துலக சமூகத்தில் இருக்கின்றபோதிலும், சிரியா மற்றும் உலகின் ஏனைய பகுதிகளில் பிரச்சனைகள் தொடர்வது குறித்து தான் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளதாக, தன் அல்லேலூயா வாழ்த்தொலி உரைக்குப்பின் தெரிவித்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

அமைதிக்காக தான் செபிக்கும் அதேவேளையில், நல்மனம் கொண்டோரின் செபத்திற்கும், அரசு பொறுப்பிலுள்ளோரின் அமைதிக்கான உறுதிப்பாட்டிற்கும், தான் விண்ணப்பிப்பதாக, தான் விடுத்திருந்த அதே விண்ணப்பத்தை, வாழ்த்தொலி உரைக்குப் பின்னரும் எடுத்துரைத்தார் திருத்தந்தை.

மேலும், பல காலமாக தொடர்ந்து மருத்துவக் கருவிகளின் உதவியுடனேயே வாழ்ந்துவரும் இங்கிலாந்தின் குழந்தை, ஆல்ஃபி ஈவான்ஸ், மற்றும், பிரான்சின் வின்சென்ட் லேம்பர்ட் ஆகிய இருவருக்காகவும் செபிக்குமாறு விண்ணப்பித்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

ஒவ்வொரு நோயாளியும் அவரவருக்குரிய மாண்புடனும், வாழ்வுக்குரிய மதிப்புடனும் நடத்தப்பட வேண்டும் என்ற விண்ணப்பத்தையும் திருத்தந்தை முன்வைத்தார்.

மேலும், ஈக்குவதோர் மற்றும் கொலம்பியாவிற்கு இடையிலிலுள்ள எல்லையில் கடந்த பங்குனி மாத இறுதியில் கடத்திச் செல்லப்பட்ட மூன்று பேர் தற்போது கொலைச் செய்யப்பட்டுள்ளது குறித்தும் தன் ஆழ்ந்த கவலையை வெளியிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இறந்தோருக்காக செபிப்பதாக உறுதி கூறியுள்ளதுடன், அவர்களின் குடும்பங்களுக்கு ஆறுதலையும் வெளியிட்டுள்ளார்.




## திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி...

“வெற்றிகொள்ள இயலாத ஒரே ஆயுதம் அன்பு ஒன்றே, ஏனெனில், தீமையின் சக்திகள் அனைத்தையும் செயலிழக்கச் செய்யும் வல்லமை அன்புக்கு மட்டுமே உள்ளது”

“இயேசு எப்போதும் நம்மருகே இருக்கிறார் என்பதை அறிந்தவர்களாய், அவரது உயிர்ப்பு தரும் மகிழ்வில் நாம் முன்னோக்கிச் செல்வோம்”

“நல்ல சமாரியர் போன்று, நோயுற்றோர் மற்றும் துன்புறுவோர் மீது அக்கறை காட்டுங்கள்”

“செபம், மற்றும், இறைவனுடன் ஒன்றிப்பு என்ற மனநிலையே, புனிதர்களை, தனிப்பட்ட முறையில் அடையாளப்படுத்துகின்றன. செபம் இன்றி புனிதத்துவம் இல்லை”

“புனிதத்துவம், ஒவ்வொரு நாள் வாழ்வின் சிறு நிகழ்வுகள் வழியாக வளர்கிறது”

“அன்னை மரியாவைப்போல், இறைவனில் முழுமையாக நம்பிக்கைக் கொண்டிருக்கும் இதயங்களை, இறைவன் இன்னும் தேடிக்கொண்டிருக்கிறார்”

“நம்மிடம் சிறிதளவே கேட்கும் இறைவன், நமக்கு மிக அதிகமாக வாரி வழங்குகிறார். நாம் நம் இதயங்களைத் திறந்து, அவரையும், ஏழை, எளிய சகோதரர் சகோதரிகளையும் வரவேற்க வேண்டும் என நம்மிடம் கேட்கிறார்”

“திருஅவை இளமையானது, ஏனெனில் நற்செய்தியே அதன் வாழ்வின் இரத்தமாக உள்ளது, மற்றும், அதற்கு தொடர்ந்து புத்துயிரூட்டி வருகின்றது”

“நான் இடைவிடாது அமைதிக்காக செபித்துவரும் அதேவேளையில், அதே வண்ணம் செபிக்குமாறு நல்மனதுடைய அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறேன். மேலும், அரசியல் பொறுப்பிலிலுள்ளோர் அனைவரும், நீதியும் அமைதியும் நிலவ தங்களால் இயன்ற அனைத்தையும் மேற்கொள்ளவேண்டும் என விண்ணப்பிக்கிறேன்”

“கடவுள் அனைவரையும், புனிதத்துவத்திற்கு அழைக்கிறார்”

“அர்ப்பண வாழ்வுக்கு நீவிர் அழைக்கப்பட்டிருந்தால், அதற்கு இயைந்த வகையில் வாழ்ந்து புனிதத்தில் வாழும்படியாக”

“நீங்கள் திருமணமானவர் எனில், இறைவன் திருஅவை மீது காட்டும் அன்பு மற்றும் அக்கறைபோல், உங்கள் வாழ்க்கைத் துணையிடம் காட்டி புனிதத்தில் வாழுங்கள்”

“வாழ்வதற்காக பணிச்செய்து கொண்டிருப்பவர் எனில், உங்கள் சகோதர சகோதரிகளின் பணிக்கென உங்கள் திறமைகளைப் பயன்படுத்தி, அதன் வழியாக புனிதமடைவீராக”

“அன்பைக் கறைப்படுத்தும் அனைத்தினின்றும் இதயத்தைச் சுதந்திரமாக வைத்துக்கொள்வது, நம்மைச் சுற்றியுள்ள எல்லாவற்றிலும் அமைதியை விதைப்பது, நமக்குப் பிரச்சனைகளை ஏற்படுத்தினாலும்கூட, நற்செய்தியின் பாதையை ஒவ்வொரு நாளும் ஏற்றுக்கொள்வது ஆகியவை புனிதத்துவம்”

## இறையிரக்கப்பெருவிழா திருப்பலிகள்



பி.ஜே. ஜோசப் ஆண்டகை அவர்கள் சத்துருகொண்டன், மட்டக்களப்பில் இறையிரக்கப் பெருவிழாவைக் கொண்டாடினார்.



மடு மறைக்கோட்ட முதல்வரும், மடுத் திருத்தலப் பரிபாலகருமான அருட்பணி. ச.எமிலியானுஸ்பிள்ளை அடிகளார், மன்னார் மறைமாவட்டத்தின், பம்பைமடுப் பங்கின் 5ம் மைல் என்னும் இடத்தில் அமைக்கப்பட்டுள்ள இறை இரக்க ஆண்டவர் திருத்தலத்தில் இறையிரக்கப் பெருவிழாவைக் கொண்டாடினார்.

## மிஷனரிகள் சபையின் சகோதரிகளின் 25 வருட சேவை நிறைவு விழா




மிஷினரிகள் சபையின் சகோதரிகள் திருகோணமலையில் 25 வருட சேவையை 2018 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 5ஆம் திகதி கொண்டாடினார்கள். 8 சபைகளிலிருந்து சுமார் 35 சகோதரிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## ஆயர் மேதகு. இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை அவர்களுக்கு வரவேற்பளித்தல்



பெரிய குஞ்சுக்குளம் தூய அங்காமத்து மாதா பங்குச் சமூகம் தங்களது அன்புக்கும் மதிப்புக்குமுரிய ஆயர் மேதகு. இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகைக்கு 11.04.2018 புதன்கிழமை மாலை வரவேற்பளித்தனர்.

அதன் பின் புதிதாக அமைக்கப்பட்ட ஆலயமணி தாங்கிக் கோபுரத்தை ஆயர் அவர்கள் ஆசீர்வதித்து திறந்து வைத்து முதல் மணியை ஒலிக்கச் செய்தார். அதன் பின் திருப்பலியும் அதன் முடிவில் கலை மற்றும், மதிப்பளிப்பு, நன்றி பகிர்தல் நிகழ்வுகளும் இடம் பெற்றன.

## 'வெள்ளியில் ஞாயிறு'

### யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தின் திருபாடுகளின் காட்சி



திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கிய மாபெரும் அரங்க ஆற்றுகையான யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தின் தவக்கால **'வெள்ளியில் ஞாயிறு'** திருபாடுகளின் காட்சி, யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் முன்னாள் ஆயர் மேதகு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் ஆசீர் செய்தியுடன் மன்ற அரங்கில் நிகழ்த்தப்பட்டது.

## யாழ்ப்பாணத்தில் ஐந்து தியாக்கோன்கள் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்கள்



சித்திரை 13, வெள்ளிகிழமை யாழ்ப்பாணம் புனித மரியன்னை பேராலயத்தில் காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் மேதகு. யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையினால் யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தை சேர்ந்த நான்கு தியாகோன்களும், செபமாலை தாசர் சபையை சேர்ந்த ஒரு தியாகோனும் குருக்களாக திருநிலைப்படுத்தப்பட்டார்கள்.

## இரத்தினபுரி மறைமாவட்ட, மாலிபொட பங்கு பெரிய வெள்ளி சிலுவைப்பாதை



இரத்தினபுரி மறைமாவட்டம் மாலிபொட பங்கு பெரிய வெள்ளி சிலுவைப்பாதை தியானம். திகல தோட்ட புனித சூசையப்பர் ஆலய இறைமக்களுடன் பங்குதந்தை ஜேம்ஸ் அடிகளார் (யேசு சபை) ஏற்பாடு செய்திருந்த சிலுவைப்பாதை தியானமும் - திருப்பலியும் இடம் பெற்றுது. இதில் கலந்துகொண்ட இறைமக்கள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகளைப் படத்தில் காண்கிறோம்.

**தகவல் : மேரி இருதயநாதன், மறையாசிரியர், பேராலயம், இரத்தினபுரி**

## மன்னார் மறைமாவட்ட விசுவாசப் பாரம்பரியங்களை துல்லியமாக எடுத்துக்காட்டும் கத்தோலிக்க அருட்சின்னங்களை பார்வையிடல்



மறைசாட்சிகளின் தியாகத்தால் வலுவூட்டப்பட்ட மன்னார் மறைமாவட்டத்தின் தொன்மை வாய்ந்த கத்தோலிக்க விசுவாசப் பாரம்பரியங்களை துல்லியமாக எடுத்துக்காட்டும் கத்தோலிக்க அருட்சின்னங்கள், ஆலயங்கள், கட்டிடங்கள், நினைவிடங்கள், கல்லறைகள் என்பன மன்னார் மறைமாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பரந்து கிடப்பதை பலர் அறியாதிருக்கலாம். அண்மையில் மன்னார் மறைமாவட்டத்தின் சில அருட்பணியாளர்கள் ஆயரின் பணிப்புரையில் இந்த இடங்களையெல்லாம் பார்வையிட்டு விசுவாச வரலாற்றுக் குறிப்புக்களை பதிவு செய்துள்ளனர்.

இதனடிப்படையில் பெரிய கரிசல் என்னுமிடத்திலுள்ள சம்பிரதாயக் குருக்களின் பணியின் அடையாளமாக இருக்கும் கப்பலேந்தி மாதா குருசுக்கோவில், சம்பிரதாயக் குருக்களின் திருச்சிலுவை, எருக்கலம் பிட்டியிலுள்ள தூய பேதுரு ஆலயம், என்பனவற்றோடு சவுத்பார் மற்றும் வவுனியா மறைக்கோட்டத்திலுள்ள கன்னாட்டி,செட்டிகுளம், முதலியார் குளம் போன்ற இடங்களிலுள்ள கத்தோலிக்க வரலாற்றிடங்களைப் பதிவு செய்துள்ளனர்.

### ஞானஒளி வாசகர்களுக்கு!

உங்களது மறைமாவட்டங்களில் அல்லது பங்குகளில் நடைபெறும் நிகழ்வுகளை எமக்கு எழுதி அனுப்பி வைக்கவும். அனுப்ப வேண்டிய முகவரி

**ஞானஒளி இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08.**

**மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com**

**நன்றி : இணையத்தளம்**

இறந்தபின் உயிர்ப்பு உண்டு என்ற கிறிஸ்தவ நம்பிக்கையை உறுதிப்படுத்தும் நிகழ்வாக எம்மாவு வழியில் இயேசு சீடர்களைச் சந்தித்தப் பகுதியை (லூக் 24:13-35) வாசித்துத் தியானித்துப் பழகிவிட்டோம். ஆனால் இப்பகுதியில் இயேசு அப்பத்தைப் பிட்டு கொடுப்பதும் (வச 30, 32,35) சீடர்களோடு நடத்திய உரையாடலும் கிறிஸ்தவப் பயணத்தின் ஓர் உச்சக்கட்ட இறையனுபவத்தை எடுத்துச் சொல்கிறது.

இயேசுவின் உன்னதமான உரையாடல் சற்று மாறுபட்டது. அவர் மறைநூலை விளக்குகிறார். மோசே முதல் இறைவாக்கினர் வரை அனைத்து நூல்களையும் எடுத்துக்கூறி தெளிவுபடுத்துகிறார். (வச 27). மேலும் லூக்காவின் கைவண்ணத்தில் இந்தத் திருநூல் விளக்கம் திருப்பாடலையும் உள்ளடக்கியதாக (வச 44-48) நீழ்வதைப் பார்க்கின்றோம். இக்கட்டுரையில் இறைவார்த்தை உள்ளத்தைப் பற்றி எரியச் செய்வதையும், தடுமாறிய உள்ளங்களைத் தட்டி எழுப்பி உயிர்ப்பின் சாட்சிகளாய் மாற்றுவதையும் காணலாம். இதற்கு உறுதுணையாய் அமைவது இயேசுவின் அப்பம் பிட்டல் என்பதை மறக்கக்கூடாது.



# நம் உள்ளம் பற்றி எரியவில்லையா? [லூக் 24:13-35]

## மண்ணக மைந்தன் இயேசுவின் வார்த்தைகள்

இயேசு ஒரு பாமரர். தச்சனின் மகன். ஆனால் இவர் ஒரு தன்னிகரில்லா தலைசிறந்த போதகர், வார்த்தை வித்தகர் என்பதைவிட, எளிமையாக மக்கள் புரிந்து கொள்ளும் வண்ணம் தனது போதனைகளைத் தந்தவர். இவரை வார்த்தையானவர் என்று யோவான் உரைக்கின்றார் (1:14). இவர் தந்தையின் உண்மைகளைத் தெளிவுபடுத்துபவராகவும் (யோவா 1:16-18, 8:26-29), ஏழைகளுக்கு மறையுண்மைகளை வெளிப்படுத்தும் தந்தையைப் புகழ்பவராகவும் (மத் 11:25-27) இருக்கிறார்.

இயேசுவின் வார்த்தையில் மக்கள் மயங்கிப் போயினர், தங்களை மறந்தனர். அவரது போதனையைக் கேட்ட மக்கள் கூட்டத்தினர் வியப்பில் ஆழ்ந்தனர். (மத் 7:28) அவர் அதிகாரத்தோடு போதித்தார்.

"எங்கிருந்து இந்த ஞானம் இவருக்கு வந்தது? எப்படி இந்த வல்ல செயல்களைச் செய்கிறார்" என்பது வியப்பில் கூறும் இவருடைய சொந்த ஊர் மக்களின் கூற்று (மத் 13:53-56). இறைவார்த்தையை போதித்து மக்கள் உள்ளங்களைக் கொள்ளை கொண்டவர் இயேசு. எந்த அளவுக்கு மக்கள் வியந்தார்களோ அந்த அளவுக்கு இயேசுவின் வார்த்தையில் நம்பிக்கை கொள்ளாதவர்கள் அவரை வெறுத்தார்கள். ஆனால் பவுல் கூறுவதுபோலக் "கிறிஸ்து கடவுளின் வல்லமையும் ஞானமுமாய் இருக்கிறார்" (1கொரி 1:24). இயேசுவின் நற்செய்தி மீட்பளிக்கும் வல்லமை என்றும் அதை நம்புபவருக்கு மீட்பு உண்டு என்றும் (உரோ 1:16) உறுதிக் கூறுகின்றார்.

## வார்த்தையின் தாக்கங்கள்

இயேசுவின் வார்த்தைகள் வெறும் போதனை மட்டுமல்ல. அவை ஆற்றல் வாய்ந்தவை, மனதைத் தொடுபவை, மறை உண்மைகளை விளக்குபவை. இறையாட்சியை ஏற்படுத்துபவை, மனம் மாற அழைப்பவை (மாற் 1:15). இயேசுவின் வார்த்தைகள் பேய்களை ஓட்டின, நோய்களைக் குணமாக்கின (மாற் 1:25-27, 29-32, மத் 8:1-4, லூக் 5:17-26). இறையாட்சியின் மறை பொருளை உவமைகளால் மக்களுக்கும் நேரடியாகச் சீடர்களுக்கும் போதித்தார் (மாற் 4:10-11).

இயேசுவின் வார்த்தை பாவங்களை மன்னித்தது (மத் 9:2, லூக் 5:20, யோவா 8:1-11). இறந்தோரை உயிர்ப்பித்தது (லாசர் - யோவா 10, நயீன் கைம்பெண்ணின் மகன் - லூக் 7:11-17, யாயீர் மகள் - லூக் 8:40-56). இயேசுவின் வார்த்தைகள் பார்வையற்றோரை பார்க்கச் செய்தது. காது கேளாதோருக்கு கேட்கும் திறன் தந்தது. முடவரை நடக்கச் செய்தது. தண்ணீரை திராட்சை இரசமாக்கியது. இவை நமக்குத் தெரிந்தவையே.

## இஸ்ரயேல் மக்களும் இறைவார்த்தையும்

பழைய ஏற்பாட்டில் இறைவன் சொல்லால் உலகம் உருவானது. இறைசொல்லால் வாழ்வு பிறந்தது. இறைசொல் மனிதரை உருவாக்கி ஆபிரகாமை அழைத்தது (தொ.நூ 1,12) பத்துக் கட்டளைகள் நமக்குக் கொடுக்கப்பட்டது (வி.ப 34:28), உடன்படிக்கை செய்தது, வாக்குறுதிகளைக் கொடுத்தது. மொத்தத்தில் இஸ்ரயேல் மக்களை வழிநடத்தியதும் உடன்படிக்கைப் பிணைப்பில் நிலைபெறச் செய்ததும் இறைவார்த்தை. இதனால் "என் காலடிக்கு உம் வாக்கே விளக்கு. என் பாதைக்கு ஒளியும் அதுவே" (தி.பா 119:105) என்று திருப்பாடல் ஆசிரியர் உரைக்கிறார்.

## இறைவார்த்தையை உண்டு வாழ்ந்த இஸ்ரயேலர்

இஸ்ரயேல் மக்கள் பிறந்தது இறைவார்த்தையால். விடுதலையடைந்தது இறைவார்த்தையால். இவ்வாறு படைப்பு, மனித வாழ்வு முழுவதிலும் பரிணமித்து நிற்பது இறைவார்த்தை.

இறைவாக்கினர் வழியாக எச்சரிக்கை தந்ததும், தண்டனை தந்ததும், மீட்பில் அவர்களை உருவாக்கியதும் இறைவார்த்தையே.

இறைவார்த்தையை கடைப்பிடிக்க மோசே வழியாக இறைவன் ஆணையிடுகிறார் (இச 10:16)

"நீ அதை நிறைவேற்றுமாறு இறைவார்த்தை உனக்கு மிக அருகில் உள்ளது. உன் வாயில், உன் இதயத்தில் உள்ளது" என்பது அற்புதமான கூற்றுக்கள். ஷெமா இஸ்ரயேல் - இஸ்ரயேலே செவி கொடு - என்பது இஸ்ரயேலின் நம்பிக்கைக் கூற்றுக்களை குறிக்கின்றது. (இச 4:39) உன் கடவுளாகிய ஆண்டவருக்கு உன் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு ஆற்றலோடும் அன்புகூர்வாயாக (இச 6:1-9, இச 11:13-21, எண் 15:37-41). இக்கட்டளையை வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய சிறந்த கட்டளையாகக் கருதினர்.

"இறைவார்த்தைகள் உன் உள்ளத்தில் இருக்கட்டும். உன் பிள்ளைகள் உள்ளத்தில் பதியுமாறு அதைச் சொல். உன் வீட்டில் இருக்கும்போதும், உன் வழிப்பயணத்தின் போதும், நீ படுக்கும்போதும், எழும்போதும் அவற்றைப் பேசு. உன் கையில் அவற்றை அடையாளமாகக் கட்டிக்கொள். உன் கண்களுக்கிடையே அடையாளப்பட்டமாக அவை இருக்கட்டும். உன் வீட்டின் கதவுகளிலும் நுழைவாயில்களிலும் அவற்றை எழுது" (இச 6:6-9) எனும் இக்கட்டளை இறைவார்த்தை எப்படி இஸ்ரயேலரின் தனிப்பட்ட, சமூக, சமய வாழ்வோடு ஒன்றிப்போனது என்பதை விளக்குகிறது.

மழையும் பனியும் விதைப்பவனுக்கு விதையும் உண்பவனுக்கு உணவையும் கொடுக்காமல் திரும்புவதில்லை. அவ்வாறே இறைவார்த்தை அது ஆண்டவரின் விருப்பத்தைச் செயல்படுத்தும், வெற்றிகரமாக அனைத்தையும் நிறைவேற்றும் (எசா 55:10-11). கடவுளின் வார்த்தை இவ்வாறு வாழ்வு தருவனவாக உலகையும் வாழ்விப்பதாக உள்ளது.

## எம்மாவு நிகழ்ச்சி நம் ஒவ்வொருவரின் நிகழ்ச்சி

எம்மாவு நிகழ்ச்சியை லூக்கா தன் கைவண்ணத்தால் மெருகூட்டியுள்ளார். "இது ஒளித்துகள்களை உமிழும் லூக்காவின் இறுதி அதிகாரத்தின் (24) மையப் பகுதியாக உள்ளது. உயிர்த்த நிகழ்வுகளில் மிகுந்த உயிரோட்டமுள்ள, மனதைக் கொள்ளை கொள்கின்ற நிகழ்வாக உள்ளது என J.D. தில்லான் கூறுகிறார்.

எம்மாவு நிகழ்ச்சியை நாம் நடந்து செல்லும் வழியில் கிறிஸ்துவை சந்தித்து அவரை ஏற்றுக்கொள்ளும் நிகழ்ச்சியாகக் கொள்ளலாம். வழிப்போக்கர்களாகிய எல்லாரும் தங்கள் துயரம், அவநம்பிக்கையோடு செல்லும் போது இயேசுவை சந்தித்து ஆறுதலும், அமைதியும் பெறுகின்றனர். இயேசுவும் அவர்களோடு நடந்து வருகிறார் என்ற உறுதி கிடைக்கிறது.

## இறைவார்த்தையை முழங்கும் இயேசு

இது "கடவுள் காட்சியளிக்கும்" இலக்கிய வகையைச் சார்ந்தது. இயேசு ஓர் உடன்பயணி. அவர் மனிதராக மனிதரிடையே உலவுகிறார். வழிப்போக்கராக வந்து தனது கடவுள் தன்மையை சீடர்களுக்கு வெளிப்படுத்துகிறார். லூக்காவில் நாம் காணும் உயிர்த்த இயேசுவின் நிகழ்வைப்போல் நாம் வேறெங்கும் பார்க்க இயலாது. எனினும் திருத்தூதர் பணி 8:35ல், லூக் 24:27இன் வாசிப்பைக் காணலாம். திருநூலை விளக்குவதை இரண்டு நிகழ்வுகளும் சுட்டிக்காட்டுகின்றன.

பயணிப்பவர்போல் வந்த இயேசு எம்மாவு சீடர்களுக்கு இறைவார்த்தை முழங்குபவராக மாறிவிடுகிறார்.

ஆதித் திருச்சபையில் உயிர்த்த இயேசு இவ்வாறு ஊர்கள் தோறும் சென்று போதிக்கும் போதகராகிறார். பட்டி தொட்டி எல்லாம் சென்று கிறிஸ்துவை, அவரது இறப்பு உயிர்ப்பைப் போதித்து மாலையில் களைப்புற்ற போது விருந்துக்கு அழைக்கப்பட்டு, நட்பு விருந்தை நாளின் இறுதியில் அனுபவிக்கிறார் இயேசு (காண். லூக் 10:5-7). இறுதியில் அவர் அப்பத்தைத் தன்னை அழைத்தவர்களோடு உடைத்து உண்கிறார்.

## எம்மாவு நிகழ்வு பிரிவுகள்

ஆண்டவர் இயேசு திருநூலை விளக்கும் எம்மாவு பகுதியில் பின்வரும் பிரிவுகளைக் காணலாம்.

1. மனக்கலக்கம் (சோகம்), நம்பிக்கையின்மை, சரியாகப் புரியாமை பின்புலமாகிறது.
2. பழைய ஏற்பாட்டிலிருந்து விளக்கம் (லூக் 24:25, 27:32)
3. கிறிஸ்து பாடுகள் பட்டு மகிமையில் நுழைய வேண்டும் (26)
4. அப்பம் பகிர்தல் கண்டு கொள்ளல் (30)
5. உள்ளம் பற்றி எரிதல் (32-33)

விவிலிய அறிஞர்கள் இந்த முறையைப் பயன்படுத்தியே ஆதித்திருச்சபை உயிர்த்த இயேசுவைப் போதித்தது என்கின்றனர். (காண். தி.ப 2:14-49; 3:13-26; 10:34-43; 13:17-41)

எம்மாவு இயேசு தனது விளக்கிச் செய்தி வழியாகவும், அடையாள நிகழ்ச்சி வழியாகவும் தன்னை வெளிப்படுத்துகிறார். தான் உயிரோடு உள்ளதை எடுத்துரைக்கிறார்.


## இயேசு நடமாடும் நற்செய்தி

நடமாடும் நற்செய்தியாளரான இயேசுவைப் போல திருச்சபை இறைவார்த்தையை "உலக முழுதும்" எடுத்துச் செல்கிறது. எம்மாவு நிகழ்வு இயேசுவே முதல் போதகர் என்பதை நிலை நிறுத்துகிறது. இயேசுவின் உடனிருப்பும் வார்த்தையும் ஒன்றையொன்று வலிமைப்படுத்துகிறது.

இயேசுவின் உடனிருப்பு இறைவார்த்தையின் பீறிட்டு எழும் ஆற்றலைக் கொண்டு உலகச் சாலைகளில் வலம் வந்து கொண்டிருக்கிறது. அது எம்மாவு சீடர்களின் உள்ளத்தை மட்டுமல்ல, நம் உள்ளத்தையும் பற்றி எரியச் செய்கிறது.

இயேசு கூறும் செய்தியும் அவரது உடனிருப்பால் உறுதி பெற்று அவரது உடனிருப்பை உலகுக்கு அறிவித்துக் கொண்டிருக்கிறது. உயிர்த்த இயேசுவை உலக மக்கள் தங்கள் சாலைகளிலே இன்றும் சந்தித்துக் கொண்டிருக்கின்றனர். எந்த இடர்பாடுகள், கலாபனைகள்...

தொடர்ச்சி 15ம் பக்கம்



# லசாலியன் ஆங்கிலப் பயிற்சி நிலையம்

* கல்விக்காகத் தம்மை அர்ப்பணித்துள்ள டிலாசால் துறவற சபைச் சகோதரர்களால் க.பொ.த சா/த, க.பொ.த உ/த முடித்தவர்கள், இளைஞர்கள், பெற்றோர், முதியோருக்காக நடாத்தப்படும் ஆங்கில பயிற்சி நெறி.
* கண்கவரும் ஓவியத்தைப் பார்ப்பது போன்று, இந்து சமுத்திரத்தைப் பார்த்தபடி மகிழ்ச்சியாக இலகுவாகக் கற்றுக்கொள்ள வந்து அனுபவித்துப் பாருங்கள்.

**பயிற்சியின் முடிவில் டிப்ளோமாச் சான்றிதழ் வழங்கப்படும்.**

தொழில்புரிவோர், மற்றும் வீட்டில் உள்ளவர்கள் அனைவருக்கும் ஆங்கில வகுப்புக்கள் வைகாசி மாதம் 5ந் திகதி காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகும்

**பயிற்சி நெறியில் உள்ளடக்கப்படும் விடயங்கள்**

| | | |
|---|---|---|
| 1. செவிமடுத்தல் | 2. கதைத்தல் | 3. வாசித்தல் |
| 4. இலக்கணம் | 5. சொல்லகராதி | 6. வாக்கிய அமைப்பு |
| 7. மரபுத்தொடர் | 8. நேர்த்தியான ஆங்கிலம் | 9. சொல்லிலக்கணம் |
| 10. வார்த்தை விளையாட்டு | 11. கலாச்சார வாழ்க்கை மதிப்பீடு | 12. ஆங்கில பாடல்கள் |
| 13. ஆளுமை வளர்ச்சி | 14. உணவுக் கருவிகளின் பாவனை முறை | |

**பயிற்சிக் காலம் – 3 மாதங்கள்**

வைகாசி மாதம் 4ந் திகதி தொடக்கம் ஆவணி மாதம் 3ந் திகதி 2018 வரை திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணி வரை

(N6412)

தங்குமிட வசதிகள் இருபாலருக்கும் செய்துகொடுக்கப்படும்

* விண்ணப்பப் படிவங்களைத் தபால் மூலம் பெற்றுக் கொள்ள பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.
அருட்சகோ. அகஸ்ரின் ஜெயந்த சில்வா, 071 – 2188551
* பதிவு செய்தலும், தரப்படுத்தலுக்குமான பரீட்சையும் 2018, வைகாசி மாதம் 4ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு 130, டிலாசால் வீதியில் அமைந்துள்ள டிலாசால் இல்லத்தில் நடைபெறும்.

**அருட்சகோதரர். அகஸ்ரின் ஜெயந்த சில்வா F.S.C, இயக்குனர், லசாலியன் ஆங்கிலப் பயிற்சி நிலையம், 130, டிலாசால் வீதி, முகத்துவாரம், கொழும்பு – 15. தொ.பேசி.இல 071–2188551**

---

## கொழும்பு உயர்மறைமாவட்ட தமிழ் அப்போஸ்தலிக்க பணிக்கு பொறுப்பான ஆயரின் துணையாளர் அருட்பணி. மனோகுமாரன் நாகரட்ணம் அவர்களின் மேற்பார்வையின் கீழ்





**இந்திய (சாலக்குடி) டிவைன் தியான இல்ல அருட்தந்தை. என்டோ கன்னம்புழா அவர்களால் "அன்னை மரியாள் தியானம்" என்ற தலைப்பில் மறையுரையும் அதனைத் தொடர்ந்து புகழ்ச்சி வழிபாடு, நற்கருணை ஆராதனை, குணமாக்கல் வழிபாடு, திருப்பலியினை தொடர்ந்து மெழுகுவர்த்தி பவனியும் நடைபெறும்.**

நடைபெறும் இடம் : றாகமை தேவத்தை பெசிலிக்காவில் புதிதாக நிர்மானிக்கப்பட்ட கெபியில் நடைபெறும்.

திகதி : 7ம் திகதி மே மாதம் 2018 (விடுமுறை நாள்)

நேரம் : காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை

போக்குவரத்து அவரவர் பங்குகளில் ஒழுங்கு செய்யப்படும், மதிய உணவிற்காக ரூபா 150/- அறவிடப்படும்.

மேலதிக விபரங்களுக்கு உங்கள் பங்கு தந்தையை அணுகவும். தொடர் கொள்ள : Mr. Spelmen Fernando 0777 359892

---

## இந்திய (சாலக்குடி) டிவைன் தியான இல்ல அருட்தந்தை. என்டோ கன்னம்புழா அவர்களால் வழிநடத்தப்படும் புகழ்ச்சி வழிபாடு, திருப்பலி, நற்கருணை ஆராதனை, குணமாக்கல் வழிபாடு





### நடைபெறும் இடங்கள்

**புனித லூசியாள் பேராலயம்**
கொட்டாஞ்சேனை, கொழும்பு 13.
திகதி 2018 மே 2,3,4 (புதன், வியாழன், வெள்ளி)
நேரம் : மாலை 06.30 மணி முதல்

**புனித அன்னம்மாள் ஆலயம்,** வத்தளை
திகதி : 2018 மே 5, 6 (சனி, ஞாயிறு)
நேரம் : மாலை 07.00 மணி முதல்

**புனித செபஸ்தியார் ஆலயம்,**
கடற்கரை வீதி, நீர்கொழும்பு.
திகதி : 2018 மே 9,10,11 (புதன், வியாழன், வெள்ளி)
நேரம் : மாலை 06.30 மணி முதல்

**புனித லோரன்ஸ் ஆலயம்,**
வெள்ளவத்தை, கொழும்பு 06.
திகதி : 2018 மே 13,14,15 (ஞாயிறு, திங்கள், செவ்வாய்) நேரம் : மாலை 07.00 மணி முதல்

(N0316)

---

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்

## உங்களுக்கான பல்வேறு விதமான சேவைகள்

அனைத்து விதமான அச்சுப்பதிப்பு தேவைகளையும் சிறப்பான முறையில் செய்துகொள்ள...

மிகக் குறைந்த விலையில் கூடிய சேவைகளைப் பெற்றுக்கொள்ள...

CMYK

- பாடற்தாள்கள்
- நினைவு மலர்கள்
- செபப் புத்தகங்கள்
- நவநாள் புத்தகங்கள்
- சிறுகதை புத்தகங்கள்
- பில் புத்தகங்கள்
- ரிசிட் புத்தகங்கள்
- சஞ்சிகைகள்
- சான்றிதழ்கள்
- லெட்டர் ஹெட்ஸ்
- விசிடிங் கார்ட்ஸ்
- ஞாயிறு வழிபாடுகள்
- திருமணம் மற்றும் ஆலயத் திருவிழாக்கள், இறந்தோருக்கான திருப்பலியில் பாடப்படும் பாடற்தாள்கள் ஆகியவையும் அச்சிடப்படும்.

**தொடர்புகொள்ளுங்கள்** இயக்குனர் அருட்தந்தை, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், இலக்கம் 02, ஞானார்த்த பிரதீபய மாவத்தை, கொழும்பு – 08. தொ.பே இல. 0112695984, 0112678106, 0114614927 பெக்ஸ் – 0112692586
E-mail : cgnanaoli@yahoo.com / www.colomboarchdiocesancatholicpress.com

அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்